CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

III

க்ருஷ்ண யஜுர் வேத ஸாரம்

(இரண்டாவது காண்டம்)

நான்காம் பதிப்பு

(இலவச வெளியீடு)

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஷ்ண
யஜுர் வேத ஸாரம்

(இரண்டாவது காண்டம்)

KRISHNA YAJUR VEDA
2nd KANDA

உரையாசிரியர் :

ப்ரம்மஸ்ரீ E. பாலஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
Retd. Professor, (Meemamsa) Sanskrit College, Madras.

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600 004

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகவுரை

6 ப்ரச்னங்கள் கொண்ட இந்த இரண்டாவது காண்டத்தில் முதல் காண்டத்தில் சொல்லிய இஷ்டி, ஸோமயாகங்கள் போல் நித்யமாக இல்லாத விருப்பங்கள் இருந்தால் பலனை கருதி செய்யக்கூடிய யாகங்கள் சொல்லப்படுகின்றன. யாகங்கள் மூன்று விதமானவை.

1. தான்யமோ ஆஜ்யமோ த்ரவ்யமாக கொண்ட யாகங்கள் இஷ்டி எனப்படும்.

2. பசுவை த்ரவ்யமாகக் கொண்டு அதனுடைய உறுப்புகளை எடுத்து ஹோமம் செய்யும் யாகத்திற்கு பசுயாகம் எனப்பெயர்.

3. ஸோமலதையை கொண்டு வந்து விதிப்படி சாறு பிழிந்து அக்னியில் ஹோமம் செய்யும் யாகத்திற்கு ஸோம யாகம் எனப்பெயர். இந்த காண்டத்தில் இஷ்டி யாகங்களும் பசுயாகங்களும் பலனைக் கருதி சொல்லப்படுகின்றன. எந்தந்த பலன் நமக்கு விருப்பமோ அதை அடைவதற்கு ஸாதனமான யாகம் என்ன, அதற்குரிய தேவதை யார், த்ரவ்யம் என்ன, அங்கங்களில் ஏதாவது விசேஷம் இருந்தால் அந்த விசேஷம் எவை என்று விரிவாக கூறப்படுகின்றன. இந்த காண்டத்தில் கடைசி இரண்டு ப்ரச்னத்தில் தர்சபூர்ண மாஸ இஷ்டிக்கு வேண்டிய அங்கயாகங்களும், ப்ரதான யாகங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. சிற்சில இடங்களில் அதற்கு வேண்டிய சிறு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸம்பவங்களும் விளக்கி காட்டப்படுகின்றன. உதாரணமாக தற்காலத்தில் தண்ணீர் கஷ்டம் தீராத ப்ரச்னையாக இருப்பதால் அதை தீர்த்து வைக்கக்கூடிய காரீரயேஷ்டி என்ற யாகம் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நடைமுறையில் இப்பவும் அக்னி ஹோத்ரிகளைக் கொண்டு முறைப்படி செய்வித்து மழையை பெற்றிருக்கிறார்கள். இதுபோல் பலனைக் கொடுக்கக்கூடிய இஷ்டி யாகங்களும், பசுயாகங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த காண்ட ஸாரத்தை படிப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய பலனை அதற்குரிய யாகத்தை அக்னி ஹோத்ரிகள் மூலம் செய்வித்து பலனை அடையலாம்.

இதில் வரும் சில முக்கியமான வார்த்தைகளுக்கு தெளிவாக அர்த்தம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வ்ரத்ர தூரணன—(எதிரிகளை கொல்பவன்)

அபிமாதிஹாவான—(பாபத்தை போக்குபவன்).

ஸம்ஸ்காரம்—சரியாக ஆக்குவதற்கு உடைய செயல் முறைகள்.

ஸம்ஸ்க்ருத—மேற்படி ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட

33 நக்ஷத்ரங்கள்—அசுவினி முதலிய 27 நக்ஷத்ர அபிமானி தேவதைகள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவைகளில் கிருத்திகா நக்ஷத்ரத்திற்கு அபிமானி தேவதைகள் அம்பா, துலா (दुला) நிதத்னி, அப்ரயந்தீ, மேகயந்தீ, வர்ஷயந்தீ சுப்ணீகா, இந்த ஏழு தேவதைகளை உறுப்புகளாக கொண்டது கிருத்திகா நக்ஷத்ரம். ஆக க்ருத்திகை ஏழு மற்றவை 26 மொத்தம் 33).

ஸாத்வாலம், உத்கரம் - இவைகள் யாகத்தில் உபயோகப்பட்ட வஸ்துக்களை போடுவதற்காக உள்ள இடம்.

இந்த காண்டத்தில் சில இடங்களில் போன உயிர் திரும்பி வரும். இறந்தவன் உயிருள்ளவனாக எழுந்து விடுவான் போன்ற வார்த்தைகள் வருகின்றன. அவைகளுக்கு உதாரணம் - ம்ருத சஞ்சீவி மந்தரத்தை உபயோகப்படுத்தி, சுக்ராச்சாரியார் தன் பெண் விரும்புகின்ற கச்சனை, இறந்த பிறகு உயிரோடு எழுப்பியது போல் இந்த இஷ்டிக்கும் அதுமாதிரி இறந்தவனுக்கு உயிரூட்டும் பலன் உண்டு.

ப்ரணயனம்—கார்ஹபத்ய அக்னியிலிருந்து ஆஹவணீயாக்னி இருக்கும் இடத்திற்கு அக்னியை எடுத்துக் செல்வது.

ப்ரதிஷ்டை—சீர், சிறப்புடன் விளங்குதல்.

ப்ரஸ்தரம்—முதல் நருக்கிய முஷ்டிக்கு ப்ரஸ்தரம் என்று பெயர். மீதி தர்ப முஷ்டிக்கு பர்ஹிஸ் என்று பெயர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முன்னுரை

வேதம் ஞானகாண்டம், கர்மகாண்டம் என இரு பிரிவுகள் கொண்டது. கர்மகாண்டம் வேதத்தின் முதல் பாகம். அதில் ப்ரக்ருதி யாகங்களும் விக்ருதி யாகங்களும் சொல்லப்பட்டுள்ளன. எந்த யாகத்திற்கு (அல்லது கர்மாவிற்கு) வேண்டிய எல்லா அங்கங்களும் வேதவாக்கியங்களால் அறியப்படுகின்றனவோ அது ப்ரக்ருதி எனப்படும். எந்த யாகத்திற்கு விசேஷ அங்கங்கள் மட்டும் வேதவாக்கியத்தால் அறியப்படுகின்றனவோ அது விக்ருதி எனப்படும். விக்ருதி யாகங்களுக்கு வேண்டிய மீதி அங்கங்கள் ப்ரக்ருதி யாகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதற்கு அதிதேசம் என்று பெயர் ப்ரத்யக்ஷ வேதவசனம் உபதேசம் எனப்படுகிறது. அக்னி ஹோத்ரம், தர்சபூர்ணமாஸேஷ்டி, அக்னிஷ்டோம ஸோம யாகம் இம்மூன்றும் மூல ப்ரக்ருதி யாகங்கள்.

1. அக்னிஹோத்ரம் என்பது தினமும் காலையிலும் மாலையிலும் பால் அல்லது ஆஜ்யம் முதலிய த்ரவ்யங்களால் தேவதைகளுக்கு ஹவிர் பாகம் கொடுக்கும் கர்ம.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1a. அக்னிஹோத்ரத்தின் விக்ருதி கௌண்ட பாயிநாமயனம் என்ற ஸத்ரயாகத்தில் செய்யக் கூடிய மாஸாக்னி ஹோத்ரம் என்ற கர்ம.

2. தர்சபூர்ணமாஸேஷ்டி—புரோடாசம் (அரிசி மாவு வருக்கப்பட்டு வெந்நீர் விட்டுப் பிசைந்து உருண்டையாகப் பிடிப்பது) பால், தயிர், நெய் முதலிய த்ரவ்யங்களை ஹவிர்பாகமாக தேவதை களுக்கு கொடுக்கும் கர்ம. இதை இஷ்டி என்று கூறுவர். இது இஷ்டிகளுக்கு ப்ரக்ருதி யாகம்.

2a. விக்ருதி இஷ்டி என்பது ஆயுஷ்காமேஷ்டி போன்றவை. இவைகளுக்கு பெரும்பாலான அங்கங்கள் தர்சபூர்ணமாஸேஷ்டியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3. ஸோமயாகம் — அக்னிஷ்டோம ஸோம யாகம் ப்ரக்ருதியான ஸோமயாகம். இது ஸோம லதையைப் பிழிந்து அதன் ரஸத்தை ஹவிர் பாக மாகக் கொடுக்கும் யாகமாகும்.

3a. இதன் விக்ருதியாகம்—விச்வஜித்யாகம், உத்பித் யாகம் முதலியன.

4. பசுயாகம் — அக்னீஷோமிய பசுயாகம் எல்லா பசுயாகத்திற்கும் ப்ரக்ருதியாகம். ஆனால் இதற்கு வேண்டிய அங்கங்கள் இஷ்டியாகத்தி லிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யால் இஷ்டியாகத்தின் விக்ருதியாகும் பசுயாகத்திற்கு வேண்டிய யூபம் முதலிய விசேஷ தர்மங்கள் இங்குதான் சொல்லப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றன. மற்ற பசு யாகங்களுக்கு யூப தர்மங்கள் இதிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதால் இது அவைகளுக்கு ப்ரக்ருதியாகும். பசுயாகம் ப்ரக்ருதி, விக்ருதி எனப்படும்.

5. உபஸத்ஹோமம், க்ருஹமேதீயேஷ்டி முதலியன ப்ரக்ருதியும் விக்ருதியுமல்ல. ஆகையால் அவைகள் அபூர்வயாகங்கள் அல்லது அபூர்வகர்ம எனப்படுகின்றன.

முதல் காண்டத்தில் தர்சபூர்ணமாஸேஷ்டி, ஸோமயாகம், அக்னீஷோமிய பசுயாகம், புனராதானம், அக்னிஹோத்ரம், வாஜபேயம் முதலியன கூறப்பட்டுள்ளன.

2வது காண்டத்தில் விக்ருதி பசுயாகங்களும், விக்ருதீஷ்டிகளும் பெரும்பாலும் கூறப்படுகின்றன. கடைசி 2 ப்ரச்னத்தில் தர்சபூர்ண மாஸத்திற்கு வேண்டியவை கூறப்பட்டுள்ளன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாவது காண்டம்—
முதல் ப்ரச்னம்

அனுவாகம்—1 (वायव्यꣳश्वेतमालभेत)

1. வெள்ளைநிறமான வெள்ளாட்டை (பசு) த்ரவ்யமாகவும், சீக்கிரம் செல்லக் கூடிய வாயு பகவானை தேவதையாகவும் கொண்ட பசுயாகம் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பலன் ஐச்வர்யம். நியுத்வத் என்ற குணத்தோடு கூடிய வாயுவை உபாஸிப்பதால் யஜமானனுக்கு சீக்கிரமே ஐச்வர்யம் கிடைக்கும். அது நிலையாகவும் இருக்கும்.

2. நியுத்வத்குணமுள்ள வாயுபகவான் தேவதை, வெள்ளை நிற ஆடு த்ரவ்யம், கிராமத்திற்கு தலைவனாக விரும்புபவன் செய்யவேண்டியது. கடிவாளம் பூட்டப்பட்ட குதிரை ஓட்டுபவன் சொல்படி செல்லுமோ, அதுபோல் கிராம மக்கள் யஜமானனைப் பின்பற்றுவார்கள். யஜமானன் கிராமத்தலைவனாக ஆவான்.

3. (ஸந்ததியை) ப்ரஜையை விரும்புபவன் நியுத்வத் குணமுள்ள வாயுதேவதையைக் கொண்ட பசுயாகம் செய்யவும். நல்ல மனைவியைப் பெற்று தானும் வாலிபனாக இருந்தும் ஸந்ததி கிடைக்காதவன் செய்யவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

[வாயுபகவான் ப்ராண, அபான வடிவமானதால் அவருடைய அனுக்ஹரம் இல்லாதவனுக்கு வீர்யத்தில் ஜீவ அணுக்கள் இருக்காது]. ஷி யாகம் செய்தால் வாயுபகவான் ப்ரீதியடைந்து வீர்யத்தில் உயிருள்ள ஜீவ அணுக்களை உண்டு பண்ணி அதன் மூலம் யஜமானனுக்கு நல்ல ஸந்ததி ஏற்படும்.

4. ஷி யாகத்தை தீர்க்க ரோகமுள்ளவன் செய்யலாம். ஓர் முகூர்த்தகாலம் ப்ரேதனுக இருப்பவன் கூட ப்ராணனைப் பெற்று உயிருள்ள வனுக எழுந்துவிடுவான்.

5. உலகஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரஹ்மாதான் தனியாக இருந்தார். அப்பொழுது அவர் மக்களை-யும், பசுக்களையும் ச்ருஷ்டிக்க எண்ணினுர். பிறகு தனது வபையை எடுத்து அக்னியில் ஹோமம் செய்தார். அதிலிருந்து கொம்பில்லாத ஆடு தோன்றியது. அதைக் கொண்டு பிரஹ்மா யாகம் செய்தார். பிறகு அவர் ப்ரஜைகளையும் பசுக்களையும் ச்ருஷ்டித்தார். ஆகையால், மக்கட் பேறையும், (பிராணிகளையும்) பசுக்களையும் விரும்புகிறவன் ப்ரஜாபதியை தேவதையாகக் கொண்ட கொம்பில்லாத ஆட்டை த்ரவ்யமாகக் கொண்டு யாகம் செய்யவேண்டும். இதனுல் திருப்தியடைந்த ப்ரஜாபதி மக்கட்பேறையும், பசுக்களையும் யஜமானனுக்கு அளிக்கிறுர். ஷி பசுவின் குணத்தால் 5 விதமான பசுக்களை அடைவான். மீசையினுல், 1) புருஷர்களையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2) கொம்பின்மையால் குதிரையையும், கீழ்வரிசையில்மாத்திரம் பல் உள்ளதால் 3) பசுமாடுகளையும், குளம்பின் ஒற்றுமையினுல் 4) செம்மறியாடுகளையும், வெள்ளாட்டு ஜாதியினுல் 5) வெள்ளாடுகளையும், அடைவான். இவை கிராமப் பசுக்கள் எனப்படும்.

6. ஸோமனையும் பூஷாவையும் தேவதையாகக் கொண்டதும் ஒரு ப்ரஸவித்தில் பிறந்த மூன்று ஆட்டு குட்டிகளுள் ஒன்றை த்ரவ்யமாகக் கொண்டதுமான யாகத்தைச் செய்தால் பசுக்களை பலனுக அடையலாம். அத்தி மரத்தால் யூபம் செய்யவேண்டும்.

அனுவாகம்—2 (प्रजापतिः प्रजाअसृजत)

பிருஹ்மா ப்ரஜைகளை ச்ருஷ்டி செய்தார். அவர்கள் ப்ருஹ்மாவை அலக்ஷியம் செய்து வருணனை அடைந்தனர். ப்ருஹ்மாவின் வேண்டுகோளின் பேரில் வருணன் அவைகளுள் சிறந்த கறுப்பாயும் ஒரு கால் வெள்ளையாயும் உள்ள ஆட்டை தனக்கு வைத்துக் கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டான். ஆகையால் வருணனுக்கு ப்ரியமான ஷி ஆட்டை திரவ்யமாக கொண்டு வருணனை தேவதையாகக் கொண்ட யாகத்தைச் செய்தால் மஹோதர ரோகத்திலிருந்து யஜமானன் விடுபடுவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2. ஒரு சமயம் ஸுவர்பானு என்ற அஸுரன் (பூமிவடிவமானவன்) இருளினால் சூரியனை மறைத்தான். அதற்கு ப்ராயசித்தம் செய்ய வேண்டும் என்று தேவர்கள் எண்ணினர். ப்ரகாசமான மணி ரத்னம் முதலியவைகளால் நான்கு தடவை பிரகாசப்படுத்தி இருளை அகற்றி சூரியனை பிரகாசிக்க செய்தனர். முதல் தடவை அகன்ற இருள் கருநிறமான செம்மறியாடாக மாறியது. இரண்டாவது தடவை நீங்கிய இருள் சிவப்பு செம்மறியாடாக ஆயிற்று. மூன்றாவது தடவையில் இருள் வெண்மையான செம்மறி யாடாக ஆயிற்று. நான்காவது தடவை அந்த இருள் மலடான செம்மறியாடாக மாறியது. தெய்வ ஸம்பந்தமிருப்பதால் நான்காவது வெளி வந்த ஆட்டை த்ரவ்யமாக (ஹவிஸ்ஸாக) த்வாதச ஆதித்யர்களுக்கு பூமியின் சிறிய பரப்பையும் செடி கொடிகள் முளைக்காதிருப் பதையும் அகற்றுவதற்காக கொடுத்தனர். இதன் பயனாக ப்ருத்வீ (பூமி) விஸ்தாரமாக ஆயிற்று, மேலும் செடி கொடிகளும், தான்யங்களும் உற்பத்தியாயின. இஷ்டி யாகத்தைச் செய்தால் எஜமானன் நிறைய பசுக்களையும், நல்ல (புத்ரர்) மக்களையும் ஆதித்யன் அருளால் அடைவான். தேவதை ஆதித்யர்கள். மலடு செம்மறியாடு த்ரவ்யம். பலன் (பசு) ப்ரஜாஸம்ருத்தி. (இதன் அடிப்படையில் சூரிய கிரஹணம் தோன்றியிருக் கலாம் என ஊகிக்கலாம்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

3. ஒரு சமயம் சூரியன் ப்ரகாசம் குன்றியவனாக ஆனான். அப்பொழுது அதற்கு ப்ராயச்சித்தமாக கழுத்தில் தொங்குகின்ற சதையுடைய மூன்று வெண்மையான பெண் வெள்ளாட்டைக் கொண்டு யாகம் செய்தனர். ஆகையால் ப்ரஹ்ம வர்ச்சஸ்ஸை அடைய விரும்புபவன். 1. அக்னி தேவதை, கருப்பு கழுத்துள்ள ஆடு 2. இந்திரன் தேவதை, சிவப்பு, வெள்ளை, கருப்பு என்ற பல நிறமுள்ள ஆடு த்ரவ்யம், பிருஹஸ்பதி தேவதை. வெள்ளை நிறமான ஆடு இவை எல்லாம் பெண் வெள்ளாடுகளாக இருக்க வேண்டும். மூன்று யாகங்களை காலை (வஸந்தருது) நடுப்பகல் (க்ரீஷ்மருது) பிற்பகல் (சரத்ருது) என்ற காலத்தில் செய்யவும். ஒரு வருடம் ப்ரஹ்மசர்ய நியமத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஷெ பசுக்களை கர்பிணிகளாக இருக்கும் பொழுது யாகம் செய்தால் இந்திரியத்திற்கு வலிமை ஏற்படும். வீர்யம் வ்ருத்தியடையும்.

4. வேதசாஸ்திரங்களை கற்றவனாக இருந்தும் சபையில் திறமையை வெளிப்படுத்த முடியாதவன் ஸரஸ்வதி தேவதையாக உடைய பெண் செம்மறியாடு ஹவிஸ்ஸாக யாகம் செய்தால் சபையில் எதிரியை ஜெயிக்கும் சக்தி பெறுவான். பல் விழாத ஆடாக இருக்க வேண்டும். பல் இருந்தால் தான் நன்கு பேசமுடியுமாகையால் ஷெ குணம் தேவை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5. தீர்க்க (அஜீர்ணம் போன்ற) ரோகமுள்ளவன் கீழ்க்கண்ட யாகம் செய்யவேண்டும். 1. அக்னி தேவதை — கறுப்பு கழுத்துள்ள வெள்ளாடு ஹவிஸ் 2. ஸோமன் தேவதை— செம்பட்டை நிறமான வெள்ளாடு ஹவிஸ் இந்த இரண்டு பசுயாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்தால் ரோகம் நீங்கி சௌக்யத்தை அடைவான். இறந்தவன்கூட பிழைத்திடுவான்.

6. ஷ பசுயாகத்தை ப்ரஜையை விரும்புபவனும் செய்யலாம்.

7. சபையில் பேசுந் திறமையுள்ளவனாக இருந்தும் கடுஞ்சொற்களாலும் சம்பந்தமில்லாத பேச்சுக்களாலோ சபையோருக்கு (அருசி) தெகட்டாதவாறு ஏற்படுவதால் வருத்தமுள்ளவன் சபையோருக்கு ருசியை உண்டு பண்ண நினைப்பவன் அக்னி தேவதை, கறுப்பு ஆடு, ஸோமன் தேவதை, செம்பட்டை நிறமுள்ள ஆடு, என்ற முறையில் யாகம் செய்தால் காரியஸித்தி ஏற்படும்.

8. அக்னி தேவதை, கறுப்பு கழுத்துள்ள ஆடு, ஸோமன் தேவதை. செம்பட்டை நிறமுள்ள ஆடு, அக்னி தேவதை, கறுப்பு கழுத்துள்ள ஆடு என்று மூன்று பசு யாகங்களையும் புரோஹிதத்தில் போட்டியுள்ளவன் செய்தால் போட்டி நீங்கி அரசர்களாலும் அமைச்சர்களாலும் போற்றப்படுவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—3 (देवासुरा एषु)

1. மூவ்வுலகத்திலும் ஜெயத்தை விரும்பு கிறவன் விஷ்ணுவை தேவதையாகக் கொண்ட குட்டையான பசுவையுடைய பசுயாகத்தை செய்தால் மூவ்வுலகிலும் ஜெயம் கிடைக்கும். வீடு, நிலம் இவைகளில் தகராறு இருந்நால் அதிலும் வெற்றி கிடைக்கும். வேதியை ஏற்றத் தாழ்வுள்ளதாக அமைக்கவேண்டும்.

2. யுத்தத்தில் ஜெயிக்க விரும்புபவன், மன்யுமான் மநஸ்வான், இந்திரன் தேவதை—முகத்தை நோக்கிய கொம்பையுடையதாயும் நெற்றியில் வெள்ளைச்சுழியுள்ளதுமான காளை மாடு ஹவிஸ், இஷ்டி யாகத்தைச் செய்யவேண்டும். யுத்தத்தில் வெற்றி பெறுவான்.

3. கிராமத்தை தனக்கு அதீனமாக்க விரும்பு பவன், மருத்வானுன இந்திரன் தேவதை. பின் பாகம் வெள்ளைதொடையுடைய காளை ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்தால் கிராம மக்கள் எதிர்க் காமல் எல்லாக் காரியங்களிலும் யஜமானனைப் பின்பற்றுபவர்.

4. அன்னத்தை விரும்புபவன் ஸோமன் தேவதை, செம்பட்டை நிறமான வெள்ளாடு ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யுவும். ஓஷதி களுக்கு ஸோமன் அரசன். ஆகையால் அவனை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருப்தி செய்தால் அன்ன ஸம்ருத்தியும் ஜீரண சக்தியையும் யஜமானன் அடைவான்.

5. ராஜ்யத்தை அடைய விரும்புபவன், ராஜ்யத்தை அடைய அரசனின் மூத்த மகனுகவும், வீரம் முதலிய குணங்களோடு கூடியவனுக இருந்தும் ராஜ்யத்தையடையவில்லேயோ, ஸோமனே தேவதையாகவும், செம்பட்டை நிறமுள்ள வெள்ளாட்டை ஹவிஸ்ஸாகக் கொண்ட யாகத்தைச் செய்தால் ராஜ்யத்தை அடைவான்.

6. சத்ருபாதையால் ஐச்வர்யமிழந்தவன் மறுபடியும் உலகில் ப்ரதிஷ்டை விரும்புபவன் கீழ்க் கண்ட யாகம் செய்யவும். தேவதை இந்திரன். ஹவிஸ் வெள்ளேச் சுழியுடையதும் நெற்றியை நோக்கிய கொம்பையுடைய காளேமாடு, பாபம் போன்ற சத்ருவை ஜெயித்து பிரதிஷ்டையை அடைவான்.

7. பாபத்தைப் போக்க விரும்புபவன் (அபிமாதிஹாவான) இந்திரனே தேவதையாகக் கொண்டு, (கோவதம் முதலிய உபபாதகத்திஞல் பீடிக்கப் பட்டவன்) நெற்றியில் வெள்ளேச் சுழியுடைய நெற்றியை நோக்கி வளேந்த கொம்புகளேயுடைய காளேயை ஹவிஸ்ஸாகக் கொண்டு யாகம் செய்ய வேண்டும். அவன் ஷி பாபத்திலிருந்து விடுபடுகிருன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

8. ராஜ்யத்தையடையத் தகுதியிருந்தும் ராஜ்யத்தையடையாதவன், வஜ்ரீயான இந்திரனை தேவதையாகக் கொண்டு நெற்றியில் வெள்ளைச் சுழியுடைய நெற்றிப்பக்கம் வளைந்த கொம்புள்ள காளையை ஹவிஸ்ஸாகக் கொண்ட யாகத்தைச் செய்யவேண்டும். அவன் ராஜ்யத்தை அடைவான். வளைந்த கொம்பு வஜ்ராயுதத்திற்கு ஒப்பானதால் அதன் மூலம் எதிரியை வென்று ராஜ்யத்தையடைகிருன்.

அனுவாகம்—4 (असावादित्योनव्यरोचत)

1. ப்ரஹ்மவர்சஸ்ஸை விரும்புபவன் சூரியனை தேவதையாகக் கொண்டு 10 காளைகளை ஹவிஸ்ஸாகக் கொண்டு யாகம் செய்யவேண்டும். நெற்றியில் வெள்ளை சுழி உள்ள 3 காளைகளைக் கொண்டு வஸந்தருதுவில் காலையில் யாகம் செய்யவும். இன்னும் (வெள்ளையான பின்பாகம் கொண்ட) மூன்று காளைகளைக் கொண்டு க்ரீஷ்மருதுவில் மத்யாஹ்நத்தில் யாகம் செய்யவும். மற்ற வெள்ளைவால் கொண்ட மூன்று காளைகளைக் கொண்டு சரத்காலத்தில் பிற்பகலில் யாகம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் யஜமானனிடம் எப்பொழுதும் தேஜஸ் இருக்கும். வருஷ முடிந்த பிறகு சிவந்த 10வது காளையைக் கொண்டு, ப்ரஜாபதியை தேவதையாகக் கொண்டு யாகம் செய்யவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2. சொரி முதலிய அடையாளங்களால் குஷ்டரோகம் முதலிய தோல் வியாதி ஏற்படலா மென்று பயந்தவன் ஸோமனையும் பூஷாவையும் தேவதையாகக் கொண்டு வெண்மையான ஆடு பசுவைக் கொண்டு யாகம் செய்யவும், தோல் வியாதி வராது.

3. ஒரு சமயம் யமன் தேவர்களின் வீர்யத்தை எடுத்துவிட்டான். பலமிழந்த தேவர் கள் பிரஹ்மாவின் ஆலோசனையின்படி சொன்ன கீழ்க்கண்ட யாகத்தைச் செய்து பலத்தையடைந் தனர். ஆகையால். சத்ருபாதையுடையவன் விஷ்ணுவையும் வருணனையும் தேவதையாகக் கொண்டதும் மலடு மாடு ஹவிஸ்ஸாகக் கொண் டதுமான ஓர் யாகத்தையும், இந்திரனை தேவதை யாகக் கொண்ட பொலிகாளையை ஹவிஸ்ஸாகக் கொண்ட ஓர் யாகத்தையும் செய்யவேண்டும். சத்ருஜயம் கிடைக்கும்.

4. இந்திரனால் கொல்லப்பட்ட வ்ருத்ரன் தான் 16 பாம்புவடிவமான சரீரத்தை எடுத்துக் கொண்டு இந்திரன் உடல் முழுவதையும் கயிற்றால் கட்டுவதுபோல் கட்டினான். பிறகு அவன் தலையிலிருந்து சில பசுக்கள் (மாடுகள்) தோன்றின. அதற்குப் பிறகு ஓர் காளை தோன்றி யது. இந்திரன் அந்தக் காளையைக் குறித்து தன்னையே பூஜித்தான். தன் கார்யம் ஸித்தித்தது என்றான். பிறகு தீர ஆலோசனை செய்து, அக்னி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதை, கறுப்புக் கழுத்துள்ள ஆடு ஹவிஸ், இந்திரன் தேவதை, காளை ஹவிஸ் என்ற இருயாகங்களைச் செய்தான். அக்னி திருப்தி அடைந்து பாம்புவடிவமான சரீரத்தை எரித்துவிட்டார். இந்திரன் யாகத்தினுல் தன்னிடத்தில் பலத்தைப் பெற்ருன். ஆகையால் பாபத்திலிருந்து விடுதலை விரும்புபவன் இஷ்டி யாகங்களைச் செய்யவும். பாபத்திலிருந்து விடுபட்டு தன்னிடம் வலிமையையும் அடைவான்.

5. வெகுகாலம் ராஜ்யத்திலிருந்து விரட்டப்பட்டவன் (அரசன்) த்யாவா ப்ருத்வியை தேவதையாகவும். கறவைப் பசுவை ஹவிஸ்ஸாகவும் வைத்து யாகம் செய்யவும். பிறகு வாயுவை தேவதையாகவும் கன்றுகுட்டியை ஹவிஸ்ஸாகவும் வைத்து யாகம் செய்யவும். அப்பொழுது கிராமத் தலைவர்களும் சாதாரண மக்களும் அரசனிடம் அன்புள்ளவர்களாக ஆகி வரியை செலுத்துவார்கள். அரசனும் அவர்களை பரிபாலிப்பான்.

அனுவாகம்—5 (इन्द्रोवलस्य)

ஓர் சமயம் பலன் என்ற அசுரன் பல மாடுகளை திருடி பூமிக்கடியில் ஒளியவைத்து முகத்துவாரத்தை கல்லால் மூடிவிட்டான். இதையறிந்த இந்திரன் அந்தக் கல்லையெடுத்து மிக பெரிய பசுவை வெளியே இழுத்தான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதைப் பின்பற்றி ஆயிரக்கணக்கான பசுக்கள் வெளிவந்தன. ஆகையால் பசு ஸம்ருத்தியை விரும்புபவன் உயரமான பசுவை ஹவிஸ்ஸாகவும், இந்திரனை தேவதையாகவும் வைத்து யாகம் செய்யவும். இதைத் தொடர்ந்து 1000 நாட்களுக்குப் பிறகு விஷ்ணுவை தேவதையாகக் கொண்ட, குட்டையான பசுவை ஹவிஸ்ஸாக வைத்து யாகம் செய்ய வேண்டும். பசு ஸம்ருத்தி பலன்.

2. ஸந்ததியை அடையத்தகுதியிருந்தும் சந்ததியையடையாதவன் கர்ப்பவிஞசினியான பசுமாட்டை ஹவிஸ்ஸாக ஓஷதி தேவதைகளுக்கு அளிக்க வேண்டும். ஔறஸ புத்ரன் பிறப்பான்.

3. ஐச்வர்யத்தையடையத் தகுதியிருந்தும் ஐச்வர்யத்தையடையாதவன் ஒரு கன்றை ஈன்ற பிறகு மலடான பசுவை ஹவிஸ்ஸாகவும், இந்திரனை தேவதையாகவும் கொண்ட யாகத்தை செய்யவும். இதைத் தொடர்ந்து கன்றுக்குட்டியை ஹவிஸ்ஸாகவும், இந்திரனை தேவதையாகவும் கொண்ட யாகத்தைச் செய்யவும். நல்ல ஐச்வர்யத்தை அடைவான், உடல் வலிமையையும் அடைவான்.

4. தான், பிதா, பிதாமஹன் என்று மூன்று தலைமுறை ஸோமயாகம் செய்யாதவன், அதற்கு ப்ராயச்சித்தமாக இந்திரன், அக்னி இருவரையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதையாகவும் காயடிக்கப்பட்ட வயதான காளை ஹவிஸ்ஸாகவும் கொண்ட யாகம் செய்யவும்.

5. அபிசாரம் செய்ய விரும்புபவன் ப்ருஹ்மணஸ்பதியை தேவதையாகவும், கொம்பில்லாத மாடு ஹவிஸ்ஸாகவும் கொண்ட யாகம் செய்ய வேண்டும். கத்திவடிவத்தில் யூபம் இருக்க வேண்டும். நாணல்கள் பர்ஹிஸ்ஸாக இருக்க வேண்டும். விபீதக மரத்தின் ஸமித்துக்கள் இத்மமாக இருக்கவேண்டும். இதனால் சத்ருநாசம் ஏற்படும்.

அனுவாகம்—6 (बार्हस्पत्यं शितिपृष्ठमालभेत)

1. கிராமமுள்ளவர்களுள் தலைவனாக விளங்க விரும்புபவன், 1. ப்ருஹஸ்பதி தேவதை, வெள்ளையான பின்புறத்தையுடைய பசு ஹவிஸ் கொண்ட யாகம் செய்யவும். அவன் கிராம முள்ளவனாக ஆவான்.

2. (உணவு) அன்னத்தை விரும்புபவன் பூஷா தேவதை, கறுமைய பசு ஹவிஸ்ஸாக யாகம் செய்யவும். அன்ன ஸம்ருத்தி ஏற்படும், ஜீரண சக்தியும் ஏற்படும்.

3. வெள்ளைப்பசு ஹவிஸ், மருத்கணங்கள் தேவதையாகக் கொண்ட யாகம் அன்ன ஸம்ருத்தியைக் கொடுக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4. பலம், வீர்யம் விரும்புபவன் சிவப்பான, விசாலமான புருவத்தையுடைய பசு ஹவிஸ், இந்திரன் தேவதை என்ற யாகம் செய்யவும்.

5. எல்லோரும் (ப்ரஜைகள்) (தானகர்த்தா) தானம் செய்து தான் வாங்கிக் கொள்ள விரும்புபவன் (ப்ரதிக்ரஹீதா) அல்லது எல்லோருக்கும் தானம் கொடுக்க விரும்புகின்றவன், ஸவிதா தேவதை, பலநிறம் கலந்த பசு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். எல்லோரும் யஜமானனையே தானபாத்ரமாக விரும்புபவர்.

6. அன்னத்தையடைய விரும்புபவன் தனித் தனியான பலநிறமுள்ள பசு ஹவிஸ், விச்வே தேவர்கள் தேவதை என்ற யாகத்தைச் செய்யவும். பல விதமான அன்னமுள்ளவனாக ஆவான்.

7. சகோதரன், வேலைக்காரன் இவர்களுள் சிறந்து, க்ராமமுள்ளவனாக ஆக விரும்புபவன் பல நிறமுள்ள பசு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

8. ப்ரஜாபதி தேவதை, கொம்பில்லாத மாடு ஹவிஸ். இந்த யாகத்தை, வைத்யர்களும் கண்டுபிடிக்காத ரோகத்தினால் பீடிக்கப்பட்ட மெலிந்து வலுவிழந்தவன் செய்யவும். ரோகம் தீர்ந்துவிடும். ப்ரஜாபதி அவனை ரோகத்திலிருந்து விடுவிக்கிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—7 (वषट्कारोवै गायत्रियै)

வஷட்காரதேவதை காயத்ரியின் சிரஸ்ஸை வெட்டியது. வெட்டிய தலையிலிருந்து ஜலமும், ரத்தமும் வெளிவந்தது. ப்ருஹஸ்பதி அந்த ரஸத்தை எடுத்தார். வெள்ளையான பின்புறத்தை யுடைய செம்மறியாடாக மாறியது. மித்ரா வருணர்கள் இரண்டாவது ரஸபாகத்தை எடுத்த னர். அந்த ரஸம் இருநிறமுள்ள செம்மறியாடாக மாறியது. மூன்ருவது ரஸபாகத்தை விச்வே தேவர்கள் எடுத்தனர். அது பலநிறமுள்ள செம்மறியாடாக மாறியது. நான்காவது ரஸ பாகம் பூமியில் விழுந்தது. அதை ப்ருஹஸ்பதி எனது உபயோகத்திற்கு இருக்கட்டும் என்று சொல்லி எடுத்தார். அது வீர்யமிழந்த காளை யாக மாறியது.

1) ப்ரஹஸ்பதி தேவதை - வெண்மையான பின்புறத்தையுடைய பசு ஹவிஸ், ப்ரஹ்ம வர்ச்சஸ் பலன்.

2) மித்ரா வருணன் தேவதை, இருநிறமுள்ள பசு ஹவிஸ். மழையைப் பெறுதல் பலன்.

ஷ பசுயாகத்தை ப்ரஜையை விரும்புபவ னும் செய்தால் நல்ல ப்ரஜையை அடைவான்.

3) விச்வே தேவர்கள் தேவதை-பலநிற முள்ள பசு ஹவிஸ், அன்ன ஸம்ருத்தி ஏற்படும், ஜீரண சக்தியுடையவனுவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஷி பசுயாகத்தை கிராமத் தலைவனாக விரும்புபவன் செய்தால் விரும்பிய பலன் கிடைக்கும்.

4. ப்ரஹஸ்பதி தேவதை, வீர்யமிழந்த காளை ஹவிஸ், ப்ரஹ்மவர்ச்சஸ் பலன்:

5. ருத்ரன் தேவதை, சிவப்பு பசு ஹவிஸ், அபிசாரம் செய்ய விரும்புபவன் இதைச் செய்யலாம்.

கத்தி போல் யூபம் இருக்க வேண்டும். நாணல் - பர்ஹிஸ்ஸாக இருக்க வேண்டும். விபீதக ஸமித் இத்மம். பலன் சத்ருஜயம்.

அனுவாகம்—8 (असावादित्योनव्योचत तस्मै)

ஒரு சமயம் சூரியன் காந்தியிழந்தவனாக ஆனான். அதற்கு ப்ராயச்சித்தம் கீழ்க்கண்ட யாகம் செய்யப்பட்டது ஆகையால் ப்ரஹ்மவர்ச்சஸ் விரும்புபவன் இந்த யாகத்தை செய்து பயனடையலாம்.

1. சூரியன் தேவதை, வெள்ளை மலட்டுப் பசு ஹவிஸ், ப்ரம்ஹவர்ச்சஸ் பலன், பில்வமரம் யூபத்திற்கு எடுக்க வேண்டும்.

2. ப்ருஹ்மணஸ்பதி தேவதை. மஞ்சள் நிறமுள்ள காதுள்ள பசு ஹவிஸ், பலன் அபிசாரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலில்-வருணன் தேவதை. 10 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் ஹவிஸ்ஸாகக் கொண்ட யாகத்தை செய்ய வேண்டும். இந்த யாகத்தினுல் சத்ருவுக்கு ரோகமுண்டாகும். ஷி ப்ரதான யாகத்தினுல் சத்ருஹிம்ஸை ஏற்படும். கத்தி வடிவில் யூபம், நாணல் பர்ஹிஸ் விபீதக ஸமித் இத்மம்.

3. அக்னிஷ்டோமம் முதலிய யக்ஞங்களை யடைய விரும்புபவன் விஷ்ணு தேவதையாகவும் குட்டைப்பசு ஹவிஸ்ஸாகவும் கொண்ட யாகத்தைச் செய்யவும. யக்ஞங்கள் இவனை வந்தடையும்.

4. த்வஷ்டா தேவதை, பெண் போல் உருவ அமைப்பால் இருக்கின்ற ஆண் குதிரை. யஜமானனுக்கு பசு ஸம்ருத்தி ஏற்படும்.

5. யுத்தத்தில் (ஸந்தி) உடன்பாடு செய்து கொள்ள விரும்புபவன், மித்ரன் தேவதை, வெண்மையான பசு ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்ய வேண்டும். யூபம் பெரியதாக இருக்க வேண்டும்.

6. மழையை விரும்புபவன், ப்ரஜாபதி தேவதை, கருமையான பசு, வயிறு முதலிய கீழ் பாகம் வெளுப்பாகவும், கீழ் நோக்கிய கொம்பை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யுடையதாகவும் இருக்க வேண்டும். இந்த யாகத்தை செய்யவும். மழை பொழியும் பலன் கிடைக்கும்.

அனுவாகம்—9 (वरुणꣳसुषुवाणं)

மிஷ்டான்ன போஜனம் செய்ய சக்தியுள்ளவன், சமையல் செய்ய ஆளின்மையால் அப்படிப்பட்ட போஜனம் கிடைப்பதற்கு யஜமானன் வருணனை தேவதையாகவும், கருப்பான மலட்டுப் பசுவை ஹவிஸ்ஸாகவும் கொள்ள வேண்டும். நல்ல சாப்பாடு கிடைக்கும்.

2. மழை காலத்திலோ அல்லது சரத்காலத்தின் ப்ரதமையன்று, அன்னத்தை விரும்புபவன், மித்ரன் தேவதை, வெள்ளையான பசு ஹவிஸ். 2. வருணன் தேவதை, கருப்பான பசு ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். பல கிளையுள்ள யூபம் இருக்க வேண்டும்.

3. மித்ரனுக்கு வெள்ளைப்பசு, வருணனுக்கு கருப்புப்பசு ஹவிஸ் என்ற 2 ப்ரதான யாகத்தை நீண்டகால நோயாளி செய்தால் நோயிலிருந்து விடுபடுவான். போன உயிர் திரும்பும்.

4. ப்ரஜை, பசுக்கள் இவைகளின் ஸம்ருத்தியை விரும்புபவன், அச்வினி தேவதைகள் தேவதை. இரட்டையாகப் பிறந்ததில் பெண் மலடான பசு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். ஷெ பலன் கிடைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—10 (आश्विनः धूम्रललाम)

1. தான், பிதா. பிதாமஹன் என்ற மூன்று தலைமுறையாக ஸோமயாகம் செய்யாதவன் (ஸோம யாகம் செய்ய நினைத்தால்) துர்பிராஹ்மணன். அவன் ஸோம யாகம் செய்வதற்கு முன்பு தௌர்ப்ராஹ்மண்ய நீங்க, அச்வினி தேவர்களை தேவதையாகவும், நெற்றியில் வெண்மையாகவும் சரீரம் முழுவதும ச்ாம்பல் (grey) நிறமான (ஆடு) பசுவை ஹவிஸ்ஸாகக் கொண்ட பசு யாகத்தை செய்யவும்.

2. மித்யாப (பொய்யாக) வாதத்தையடைந்தவன் அதனின்று விடுபட வாயு பகவான் தேவதை (காளைக்கும் மானுக்கும் பிறந்தது) கோமிருகம்-பசு என்ற யாகத்தைச் செய்யவும். பிரஹ்மஹத்தி பாபம் செய்யாதவனுன்கு அதைச் செய்ததாக அபவாதம் ஏற்பட்டால் ஷி யாகம் செய்யவும். கோமிருகம் காட்டுப்பசுவும் அல்ல, நாட்டுப் பசுவும் அல்ல. அது போல் அபவாதத்திற்குள்ளாதவனும் இருக்கிருன். ஆகையால் ஷி யாகம் செய்தால் அபவாதம் நீங்கும். சில மக்கள் அபவாதத்தை சொல்லிக் கொண்டேயிருந்தாலும் சிஷ்டர்கள் அவனுடன் உறவு வைத்துக் கொள்ளலாம்.

3. அதிராத்ரம் என்ற ஸோம யாகத்தில் ராத்ரிபரியாயம் என்ற சாஸ்திரம் இரவு முழுவதும் சொன்ன பிறகு' உஷ: காலத்தில் 1000 ருக்குகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்ட ஹோதா ஆச்வின சஸ்திரத்தைச் சொல்ல வேண்டும். அப்பொழுது சூரியன் உதிக்க வேண்டும், மேகம் முதலியவைகளில் சூரியன் வெளிப்படாவிட்டால் கீழ்க்கண்ட பசு யாகம் செய்ய வேண்டும். சூரியன் தேவதை, பல நிறமுள்ள பசு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். இருள் நீங்கி ஸ்வர்க்கத்தை அடைய தடையாக உள்ள பாபமும் அகலும்.

அனுவாகம் — 11 (इन्द्रंवोविश्वतस्परि)

காம்யேஷ்டியின் யாஜ்யா மந்திரங்களும் புரோனு வாக்யா மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் ப்ரச்னம்

காம்யேஷ்டிகள்

அனுவாகம்—1 (प्रजापतिः प्रजाअसृजत ताःसृष्टा)

1. ஒருசமயம் ப்ரஹ்மா மக்களை ச்ருஷ்டித்தார். இந்திராக்னி தேவதைகள் அவர்களை மறைத்து வைத்து விட்டனர். பிரஹ்மாதியானித்துப் பார்த்து விஷயமறிந்தார். 11 கபாலத்தில் வைத்து ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசத்தை த்ரவ்யமாகக் கொண்டு இந்திராக்னி தேவதைகளைக் குறித்து யாகம் செய்தார். பிறகு மறைக்கப்பட்ட ப்ரஜைகளைக் கண்டார் அதுபோல் யௌவனத்திலிருந்து கொண்டும், நல்ல

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பத்னியைப் பெற்றும் குழந்தையைப் பெருவிடில் ஷ இந்திராக்னி தேவதையைக் குறித்து யாகம் செய்யவும். நிச்சயம் மக்கட்பேறை அடைவான்.

2. பந்துக்கள், வேலைக்காரர்கள் அல்லது நிலம், வீடு முதலியன—இவ்விஷயத்தில் விரோதிகளுடன் போட்டி ஏற்பட்டால் இந்திராக்னியை தேவதையாகவும் 11 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் த்ரவ்யமாகவும் கொண்டு யாகம் செய்யவும். சத்ருவை ஜெயித்து விடலாம்.

3. யுத்தத்திற்காக எதிரி சைன்யத்திற்கு ஸமீபம் சென்றவுடன் பயத்தினுல் கை கால்களிலிருந்து எவனுடைய சக்தி நீங்கிவிடுகிறதோ அவன் ஷ யாகத்தைச் செய்யவும். பூர்ண வலிமை பெற்று யுத்தத்தில் வெற்றியடைவான்.

4. எவன் யுத்தம் செய்து வீர்யத்தை இழந்து களைப்புறுகிருனோ அவன் ஷ யாகத்தைச் செய்யவும். இழந்த வீர்யத்தைத் திரும்பப் பெறுவான்.

5. தனது வித்யையின் திறமையை எடுத்து காட்ட சபைக்குச் செல்ல விரும்புபவனுக்கு ஸபாகம்பம் போன்ற தைரியமிழப்பால் தனது திறமையை காட்ட முடியாதவன் ஷ யாகம் செய்யவும். தைரியத்துடன் சபையில் சென்று வருவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5a. மேற்படி இந்திராக்னி யாகத்தின் தொடர்ச்சியாக பூஷாவை தேவதையாகவும் சருவை (மாஷசரு கஞ்சி வடிக்காமல் பாகம் செய்த அன்னம்) த்ரவ்யமாகவும் கொண்டு யாகம் செய்ய வேண்டும், பூஷதேவதையும் இந்திராக்னி தேவதையைப் பின்பற்றி தைரியத்துடன் சபைக்குச் செல்லும்படி செய்வான்.

6. க்ஷேத்ரபதியை (பூமி) தேவதையாகவும் சருவை த்ரவ்யமாகவும் கொண்ட யாகம் செய்தால் இப்புவியில் நல்ல ப்ரதிஷ்டையை அடைகிறான்.

7. மேற்படி இஷ்டியை செய்துவிட்டு அதற்குப் பிறகு ஐந்தராக்ன யாகத்தைச் செய்யவும். இவ்வுலகில் ப்ரதிஷ்டையையடைந்து இந்திரிய வலிமை முதலியவைகளை பெறுவான்.

அனுவாகம்—2 (अग्नये पथिकृते)

நித்யாக்னி ஹோத்ரியானவன் அமாவாஸ்யை அடுத்த பிரதமையன்றும், பௌர்ணமிக்கு மறுநாள் பிரதமையன்று இஷ்டி செய்ய வேண்டும். அதற்கு தர்ச பூர்ணமாஸேஷ்டி என்று பெயர்.

1. ஷை இஷ்டிகளை உரிய காலத்தில் செய்யாவிடில் அதற்கு ப்ராயச்சித்தமாக இஷ்டி செய்ய வேண்டும். உரிய காலத்தில் செய்வதுதான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நேர்வழி. அவ்வாறு செய்யாதது வழி தவறுதலாகும். ஆகையால் மேற்படி ப்ராயச்சித்தமாக இஷ்டி செய்து நேர்வழிக்கு வந்ததாக ஆகும். இஷ்டிக்கு தேவதை பதிக்ருத் அக்னி-த்ரவ்யம் 8 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் த்ரவ்யம், சுமை இழுக்கும் காளை தக்ஷிணை, தேவதைகளுக்கு ஹவிஸ்ஸை சுமக்கும் அக்னியையடைந்து அவன் அருளைப் பெறுகிருன்.

2. ஆஹிதாக்னியானவர் ஆஹிதாக்னிக்குரிய விரதங்களை சரியாக கடைப்பிடிக்காவிடில் குற்றமிழைத்தவனுகிருன். அதற்கு ப்ராயச்சித்தமாக வ்ரதபதியான அக்னி தேவதை எட்டு கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். பிறகு யாக வ்ரதங்களை கடைப்பிடிக்கத் தகுதி பெறுகிருன்.

3 எந்த யஜமானனை ராக்ஷஸர்கள் உபத்ரவ படுத்துகிருர்களோ, அவன் ரக்ஷோக்னனுன அக்னி தேவதை, எட்டு கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். அந்த அக்னி யஜமானனிடமிருந்து ராக்ஷஸர்களை விரட்டி விடுகிருன். ராக்ஷஸர்கள் நிசியில் சஞ்சரிப்பதால் நடுநிசியில் மேற்படி யாகத்தைச் செய்யவேண்டும். யாக பூமியைச் சுற்றி மறைவு கட்டவேண்டும் ராக்ஷஸர்கள் உள்ளே நுழையாமலிருப்பதற்காக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராக்ஷஸர்களை ஹிம்ஸிப்பதற்காக ரக்ஷோக்னி மந்தரங்கள் புரோனு வாக்யா, யாஜ்யா மந்திரங்களாக இருக்கவேண்டும்.

4. சத்ருவைக்கொல்ல விரும்பி அபிசாரம் செய்பவன் ருத்ரவான் அக்னி தேவதை, 8 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். சத்ருவுக்கு உடனே கஷ்டம் ஏற்படும். ருத்ரன் என்பது அக்னியின் கோர சரீரமாகும். ஆகையால் சத்ரு பாதை உடனே ஏற்படும் என்பது கருத்து.

5. எந்த யஜமானனுடைய பசுக்களோ, வேலைக்காரர்களோ தெய்வீக ரோகத்தினுல் இறக்கிறுர்களோ, அல்லது தனக்கு அபம்ருத்யு ஏற்படுமென பயமேற்படுகிறதோ அவன் ஸுரபிமான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

ஸுரபி என்பது அக்னியின் வைத்யம் செய்யக்கூடிய சரீரம். அதனுல் சவமணம் நீங்கி நல்ல வாசனை முகற நேரிடும்.

6. யுத்தம் நேரிட்ட பொழுது ஜெயத்தை விரும்புபவன் க்ஷாமவான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். தன் சைன்யத்திலுள்ள சாதாரண வீரன் சத்ருக்களின் அடியை வாங்கினு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லும் உயிருடனிருப்பான், சத்ரு சைன்யத்தி லுள்ளவன் அடிப்பட்டு மரணத்தையடைவான்.

7. எந்த யஜமானனின் வீட்டில் பெரியோர் களும் சிறியவர்களும் தொடர்ச்சியாக இறக்கிறார் களோ அவன் க்ஷாமவதீஷ்டியைச்செய்யவும். க்ஷாமம் என்பதற்கு பசு என்பது பொருள். அந்த அக்னிக்கு மனிதர்களையே ஆஹுதியாக ஏற்றுக் கொள்வது ப்ரியமாகும். ஆகையால் அவருக்கு 8 கபால ஸம்ஸ்கிருத புரோடா சத்தை ஹவிஸ்ஸாக அளித்து சாந்தப்படுத்தினால் வீட்டில் முதியோர் இறக்கமாட்டார். சிறியவர்களுக்கு அபம்ருத்யு ஏற்படாது.

8. எஜமானனின் வீடு தீப்பற்றி எரிந்தால் அப்பொழுது க்ஷாமவதீஷ்டி செய்யவும். வீட்டை மாற்றும்படி வீட்டிற்கு அழிவு ஏற்படாது. இது நைமித்திகமான இஷ்டி. வீடு எரிந்தால் ஆஹிதாக்னி இதை அவசியம் செய்ய வேண்டும்.

அனுவாகம்—3 (अग्नये कामाय पुरोडाशं)

1. எந்த எஜமானனுடைய விருப்பம் (காமம்) நிறைவேறவில்லையோ அவன் காம குணமுள்ள அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடா சம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். விருப்பங் கள் நிறைவேறும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2. நில சம்பந்தமாகவோ, தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலேயே தகராறு ஏற்பட்டால் யவீஷ்டன் அக்னிதேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். ஷ்டி அக்னி சத்ருவின் வீர்யத்தை அகற்றிவிடுவான். அதனால் பாபியான சத்ருவை ஜெயிக்கிறான்.

3. சத்ருவினிடமிருந்து தப்புவிக்க விரும்பி அபிசாரம் செய்ய விரும்புபவன் ஷ்டி யவீஷ்ட அக்னிதேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். மேற்படி அக்னி தேவதை ராக்ஷஸர்களை விரட்டி விடுவான். எதிரி எஜமானன் அருகில் வரமுடியாதவனாக ஆகிவிடுவான்.

4. தீர்க்காயுளை விரும்புபவன் (ஆயுளைக் கொடுக்கவல்லவன்) ஆயுஷ்மான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். எஜமானன் பூர்ண ஆயுளை பெறுவான்.

5. (பூதிகாமன்) ஐச்வர்யத்தை விரும்புபவன் ஜாதவேதஸ் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். ஐச்வர்யத்தை நிச்சயம் அடைவான்.

6. காந்தியை விரும்புபவன், ருக்மான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நிச்சயம் காந்தியுள்ளவனாக ஆவான்.

7. (ப்ராஹ்மணனுடைய களை) தேஜஸ் அடையவிரும்புபவன் தேஜஸ்வான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நிச்சயம் தேஜஸ் அடைவான்.

எதிரியை அடக்க விரும்புபவன், ஸாஹந்த்ய குணமுள்ள அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். எதிரியை அடக்கிவிடுவான்.

அனுவாகம்—4 (अग्नयेऽन्नवते पुरोडाशं)

1. அன்ன ஸம்ருத்தியை விரும்புபவன் அன்னவான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். அன்னம் நிறைந்தவனாக ஆவான், நிச்சயம் சந்தேகமில்லை.

2. ஜீரணசக்தியுள்ளவனாக விரும்புபவன், அன்னாதன் அக்னி தேவதை. 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். தேவதையின் அனுக்ரஹத்தால் ஜீரண சக்தியுள்ளவனாக ஆவான்.

3. பலவிதமான உணவுதான்யங்களுக்கு (ஸ்வாமி) எஜமானனாக விரும்புபவன் அன்னபதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னி தேவதை-8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். அன்னங்களுக்கு பதியாக தலைவனாக ஆவான்.

4. கீழ்க்கண்ட மூன்று யாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்யவேண்டும். 1. தீர்க்க ரோகமுள்ளவன் பவமானன் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ். 2. பாவகன் அக்னி தேவதை, மேற்படி புரோடாசம் ஹவிஸ் 3. சுசியான அக்னி தேவதை, மேற்படி புரோடாசம் ஹவிஸ் என்ற மூன்று யாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்யவும். ரோகத்திலிருந்து விடுபடுவான். இறந்தவனும் பிழைத்து விடுவான்.

5. மேற்படி மூன்று யாகங்களையும் கண் பார்வையை விரும்புபவன் செய்யவும். பிறகு குருடன் கூட பார்வை பெற்றுவிடுவான்.

6. ப்ரஜையை விரும்புபவன், புத்ரவான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தையும் புத்ரி இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தையும் சேர்ந்தாற்போல் செய்யவும். அக்னி ப்ரஜையை அளிப்பான். இந்திரன் பேரன் முதலியவர்கள் மூலம் வ்ருத்தியடையச் செய்வான்.

7. க்ஷீரம், தயிர் முதலிய ரஸவஸ்துக்கள் நிரம்பியவனாக இருக்க விரும்புபவன் ரஸவான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னி தேவதை, ஆட்டுப்பாலில் பக்வம் செய்த சாதம் (சரு) ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். சீக்ரமாகவே ரஸமுள்ளவனுக ஆவான்.

8. செல்வந்தனுக விரும்புபவன், வஸுமான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நிச்சயம் செல்வந்தனுக ஆவான்.

9. யுத்தம் ஏற்பட்டவுடன், யுத்தத்தில் ஜெயிக்க விரும்புபவனும், வென்ற பிறகு எதிரியின் உணவுப்பண்டங்களை அடைய விரும்புபவன், வாஜஸ்ருத் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். எதிரியைக் கொன்று யுத்தத்தில் வெற்றி பெற்று அவனுடைய உணவுப் பண்டங்களையும் அடைவான். அக்னி போல் எதிரிகளால் நெருங்க முடியாதவனுக ஆவான்.

10. கார்ஹபத்யாக்னியிலிருந்து ஆஹவநீயாக்னியை எடுத்து வைத்துவிட்டு மறதியால் மறுபடியும் அக்னியை எடுத்து வைத்து அக்னி ஹோத்ரம் செய்ய முனைந்தவன், இரண்டு அக்னிகளுக்கும் இறையாகக் கூடிய தன்மையையடைகிறுன். அந்த விபத்திலிருந்து விடுபட அக்னிவான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். விபத்திலிருந்து விடுபடுவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

11. அக்னி ஹோத்ரத்திற்காக எடுத்து வைக்கப்பட்ட (உத்ருதாக்னி) அக்னி ஹோமம் செய்வதற்கு முன்பு அணைந்துவிட்டால் ஜ்யோதிஷ்மான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். அணைந்த தோஷத்திற்கு பரிஹாரமாகும் இது இந்த ஹோமத்தில் முன்பு வைத்த அக்னி சாந்தமான பிறகு அரணியைக் கடைந்து அக்னி எடுத்து ஆஹவனீய ஸ்தானத்தில் வைத்து ஹோமம் செய்யவேண்டும்.

அனுவாகம்—5 (वैश्वानरंद्वादशकपालं)

மஹாபாதகம் செய்ததாக பழி சுமத்தப்பட்டு பந்துக்களால் தள்ளி வைக்கப்பட்டவன் அந்தப் பழி நீங்கி பந்துக்களுடன் பழகுவதற்கு கீழ்க் கண்ட மூன்று யாகங்களை சேர்ந்தாற்போல் செய்ய வேண்டும்.

1. வைச்வாநராக்னி தேவதை, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. வருணன் தேவதை, கஞ்சி வடிக்காத சாதம் (சரு) ஹவிஸ் 3. ததிக்ராவா தேவதை, கஞ்சி வடிக்காத சாதம் (சரு) ஹவிஸ் இந்த மூன்று யாகங்களையும் செய்யவும்.

ஷ அபவாதம் நீங்கி சுத்தனுகிறுன். ஹிரண்யத்தை தக்ஷிணையாக அளிக்கவேண்டும். சாப்பிடக்கூடிய அன்னம் கிடைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஷ்டி மூன்று யாகங்களை, ப்ரஜையையடைய சக்தியிருந்தும் ப்ரஜையை அடையாதவன் செய்யவும். நல்ல ப்ரஜையை அடைவான். ஹிரண்யம் தக்ஷிணை.

3. புத்ரன் பிறந்தால் நைமித்திகமாக வைச்வானரேஷ்டி செய்யவேண்டும். வைச்வாநராக்னி தேவதை, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். பிறந்த குழந்தை பரிசுத்தனுகவும் தேஜஸ்வியாகவும், ஜீரணசக்தியுடைய ஜாடராக்னியுடையவனுகவும், பசு ஸம்ருத்தியுள்ளவனுகவும் விளங்கும்.

4. அக்னி ஹோத்ரியாயிருந்து தர்சபூர்ண மஸேஷ்டியை விட்டவன் உரிய காலத்தில் (செய்யாதவன்) வைச்வாநரேஷ்டி செய்யவும். அதனுல் தோஷம் நீங்கி ஸ்வர்க்கத்திற்குப் போவான்.

5. ஆதானம் செய்த பிறகு ஏழ்மை ஏற்பட்டு அதனுல் அக்னியை உபாசிக்காமல் விட்டவன் கீழ்க்கண்ட 2 யாகங்கள் செய்யவும். அக்னி விட்டவன் வீரஹத்தி செய்தவனுவான். 1. அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடசம் ஹவிஸ். 2. வைச்வாநராக்னி தேவதை 12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ். முதல் யாகம் அக்னிக்குச் செய்யப்படுவதானது விடப் போகிற அக்னிக்கு (பாதேயம்) வழியில் சாப்பிடுவதற்கு கட்டிக் கொடுக்கப்படும் கட்டிச் சாப்பாடு போலா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கும். அக்னியின் அனுக்ரஹத்தால் தேவையான அன்னம் (உணவு) கிடைக்கும்.

6. கிராமத்தையடைய தலைவனாக விரும்புபவன் கீழ்க்கண்ட இரண்டு யாகங்களைச் செய்யவும். 1. வைச்வாநராக்னி தேவதை, 12 கபால ஸம்ஸ்கிருத புரொடாசம் ஹவிஸ். 2. மருத்கணங்கள் தேவதை, 7 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் வைச்வானர ஹவிஸ்ஸை ஆஹவனியாக்னியில் யாகம் செய்யவும். மாருத ஹவிஸ்ஸை கார்ஹபத்யாக்னியில் யாகம் செய்யவும். கிராமத்தையடைய இடையூருக இருந்த பாபம் இதனுல் நீங்கும். முதல் யாகத்தால் தன் இனத்தார் தனக்கு அதீனமாவார்கள். 2 வது யாகத்தினுல் வரி கப்பம் கட்டும் ப்ரஜைகளை அடைவான்.

7. மருத கணங்கள் கூறப்பட்டுள்ளன :— ஈத்ருங், அன்யாத்ருக், தாத்ருக், ப்ரதித்ருக், மிதன், ஸம்மிதன், ஸபரர்கள். என முதல் கணம்.

2-வது கணம்- சுக்ரஜ்யோதிஸ், சித்ரஜ்யோதிஸ், ஸத்யஜ்யொதிஸ், ஜ்யோதிஷ்மான், ஸத்யஸ், ருதபன், அத்யம்ஹர்கள் என ஏழு பேர்.

3-வது கணம். ருதஜித், ஸத்யஜித், ஸேனஜித், ஸுஷேணத், அந்த்யமித்ரன், தூரே அமித்ரன், கண :

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4-வது கணம். ருதன், ஸத்யன், த்ருவன், தருணன், தர்த்தா, விதர்த்தா, விதாரயர்கள்......

5. ஈத்ருக்ஷாஸ:, ஏதாத்ருக்ஷாஸர்கள், ஊஷுக்கள், ஸத்ருக்ஷஸக்கள், ப்ரதிஸத்ருக்ஷாஸர்கள் போன்றவர்கள்.

6. மிதாஸன், ஸம்மிதாஸர்கள் முதலியோர்கள்.

7-வது கணம் - வேறு வேதசாகைகளில் உள்ளது.

அனுவாகம்—6 (आदित्यं चरुं निर्वपेत्)

1. யுத்தத்திற்குச்செல்ல விரும்புபவன், அதிதி தேவதை, சரு-ஹவிஸ் என்ற யாகம் செய்தால் இப்புவியில் நல்ல ப்ரதிஷ்டையடைகிறான்.

2. யுத்தகளத்தையடைந்த பிறகு ஜெயுத்தை அடைய விரும்புபவன், வைச்வானராக்னி தேவதை 12 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். யுத்தத்தில் வெற்றி பெறுவான்.

3. கொலை வெறியுள்ள இரு விரோதிகளின் அன்னத்தைச் சாப்பிட்டவன், அதற்கு ப்ராயச்சித்தமாக வைச்வாநரேஷ்டி செய்யவும்.

4. ஒருவர்க்கொருவர் த்ரோஹம் செய்வதில்லை என்று சபதம் செய்துவிட்டு, பிறகு எவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலில் த்ரோஹம் செய்கிருனே, அவன் ப்ராயச் சித்தமாக வைச்வானரேஷ்டி செய்யவும். இல்லா விடில் ஜலோதர ரோகம் ஏற்படும்.

5. செம்மறியாட்டை தானம் வாங்கியவன் ப்ராயச்சித்தமாக வைச்வானரேஷ்டி செய்யவும்.

6. இரண்டு வரிசை பற்கள் கொண்ட குதிரையையோ, மனிதனையோ, தானம் வாங்கி ஞல் அதற்கு ப்ராயச்சித்தமாக வைச்வானரேஷ்டி செய்யவும்.

7. செல்வத்தைப்பெற கொடையாளிடம் செல்பவன் முதலில் வைச்வானரேஷ்டி செய்யவும்; அதனுல் தான் செல்வத்தையடைவான். மேலும் இவனுடைய மக்கள் புத்ரர்கள் தானசீலர்களாக (கொடை வள்ளலாக) விளங்குவார்கள். செல் வத்தைப் பெற்று திரும்பி வந்தவுடன் மறுபடியும் வைச்வானரேஷ்டி செய்யவேண்டும். அப்பொழுது தான் இவனிடம் நிலையாக இருக்கும். கொடை யாளியிடமிருந்து பெற்ற பசுக்களுள் சிறந்த பசுவை எந்தக் கயிற்ருல் கட்டிக் கொண்டு வரு கிருனே அந்த கயிற்றை, முதலில் இருந்த மாட்டுக் கொட்டிலில் எறிந்து விடவேண்டும். இதன் நிர்ருதி ரூபமான தரித்ரத்தை சத்ருவுக்கு அனுப்புபவனுக ஆவான்.

அனுவாகம்—7 (ऐन्द्रंचरुंनिर्वपेत्)

1. பசுக்களை விரும்புபவன் இந்திரன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். பசுக்களை நிறைந்தவனாக ஆவான்.

2 இந்திரியாவான் இந்திரன் தேவதை. 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். இதனால் க்ஷீராதிகள் ஸம்ருத்தமான பசுக்களையடைவான்.

3. கர்மவான் இந்திரன் தேவதை. 11 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். வேதசாஸ்திரங்களால் ஏற்படக்கூடிய தேஜஸ் (घर्मवान्) கர்மம் எனப்படுகிறது. இதனால் ப்ருஹ்மவர்ச்சஸ் உள்ளவனாக ஆவான். இது நிச்சயம்.

4. அர்க்கவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும், அன்னகாமன் மேற்படி யாகத்தைச் செய்து, நிறைய அன்னமுள்ளவனாக ஆவான்.

5. (घर्मवान्) கர்மவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ்;

அர்க்கவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோசம் ஹவிஸ்;

இந்திரியாவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேற்படி மூன்று யாகங்களை சேர்ந்தாற் போல் செய்யவும், இதனால் ஐச்வர்ய லாபம் கிடைக்கும்.

6. நரகத்தையளிக்கவல்ல மஹாபாபம் செய்தவன், அதிலிருந்து விடுபடுவதற்கு அம்ஹோமுக் (பாபத்தை போக்குபவன்) இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் என்ற ஹவிஸ் யாகம் செய்யவும், மஹாபாபத்தி லிருந்து விடுபடுவான்.

7. எந்த எஜமானனுக்கு சத்ருவினால் பயம் ஏற்படுகிறதோ, அல்லது தேசத்தைச் சுற்றி சத்ருக்கள் பயத்தை ஏற்படுத்துகிறார்களோ, அவனைக் காப்பாற்ற, அல்லது தேசத்தைக் காப் பாற்ற சத்ருவிநாசகனான வைம்ருதனான இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும், மேற்படி இந்திரன் அவனைக் காப்பற்றுவான்.

8. த்ராதாவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும், இதனால் விலங்கிடப்பட்ட வனோ, அல்லது படைவீரர்களால் சூழப்பட்ட வனோ கட்டிலிருந்து விடுபடுவான்.

9. எந்த யஜமானன், ராஜஸூயம், அச்வ மேதம் போன்ற மஹாயக்ஞங்களைச் செய்ய முடியவில்லையோ அவன், அர்க்காச்வமேதவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும், மேற்படி மஹா யக்ஞங்கள் யஜமானனை வந்தடையும், அதாவது அவைகளைச் செய்ய வாய்ப்புள்ளவனாக ஆவான்.

அனுவாகம்—8 (इन्द्रायान् वृजवे)

1. கிராமகாமன் - அங்வ்ருஜுவான இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும், (அனுகூலமாயும் ருஜுவாயுமிருப்பது அங்வ்ருஜு) உதவி செய்பவன் அனுகூலமானவன். அதனால் கிராமவானாக ஆவான். விரோதமாகச் செய்யாமலிருத்தல் ருஜு

எவனுடைய சேனை கூர்மையாக இல்லையோ அவன் இந்திரன் தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். அவன் சேனை எதையும் செய்யும் திறமை பெறும். இத்மத்தில் பல்பஜம் (விசேஷமான புல்லை) கட்டவேண்டும். கோ ங்யாயப்படி எஜமானனின் சேனை வசப்பட்டு சாமர்த்தியமுள்ளதாக இருக்கும்.

3. யுத்தம் (கடுமையாக) நன்கு நடக்கும் பொழுது மன்யுமான், மனஸ்வான், இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். யுத்தத்தில் வெற்றி பெறுவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4. எவன் ரோகத்திஞலோ த்ரவ்ய நஷ்டத்தாலோ, மனம் (நொந்து) நொடிந்து பிரமை பிடித்தவனுக ஆகிருனே அவனும் ஷி சொன்ன யாகத்தைச் செய்யவும். ஸ்வஸ்தனுக ஆவான்.

5. தானசீலர்களான ப்ரஜை விரும்புபவன் தாதாவான இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். இவனுடைய புத்ரர்கள் தானசீலர்களாக இருப்பார்கள். ப்ரஜைகளும் இந்த யஜமானனுக்கு தானம் கொடுக்க விரும்புவார்கள்.

6. கடன் வாங்கியவன் பணத்தைக் கொடுக்காமலேயே ஏமாற்றுகிருனே அப்பொழுது கடன் கொடுத்தவன் ப்ரதாதா இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். கொடுத்த கடன் தொகை வந்துவிடும்.

7. தேசத்திலிருந்து நீண்ட காலமாக வெளியேற்றப்பட்டவன் அல்லது இப்பொழுது வெளியேற்றப்படுபவன். ஸுத்ராமா இந்திரன் தேவதை. 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். இதனுல் நாடு கடத்தப்படமாட்டார்கள்.

8. இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். இந்திரன் எல்லா தேவதைகளைப் போல் சாதாரண

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மானவன், ஷி யாகத்தால் அவர்களுக்குத் தலைவனாக ஆகி வேறுபாட்டை அடைந்தான்.

அனுவாகம்—9 (आग्नावैणवमेकादशकपालं)

1. சத்ருவை நோக்கி அபிசாரம் செய்ய விரும்புபவன் கீழ்க்கண்ட மூன்று யாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்ய வேண்டும்.

1. அக்னுவிஷ்ணு தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ்.

2. ஸரஸ்வதீ தேவதை, ஆஜ்யம் (நெய்) ஹவிஸ்.

3. ப்ருஹஸ்பதி தேவதை, சரு (கஞ்சி வடிக்காத சாதம்) ஹவிஸ் என்ற யாகங்கள். இதனால் சத்ருபாதை உண்டுபண்ண முடியும்.

2. ஷி மூன்று யாகங்களையும் எவன் மேல் ஏவி விடப்பட்டதோ, அவன் திருப்பி விடுவதற்காக புரோனுவாக்யா வசனங்களை இரண்டு இரண்டாகச் சொல்லி செய்யவும் முதலில் அபிசாரம் செய்தவன் மீதே, இந்த அபிசாரம் பாய்ந்து ஹிம்ஸிக்கும்.

3. பாபத்திற்கு பயந்து பதில் அபிசாரம் செய்ய விரும்பாமல், தன்மீது ஏவிய அபிசாரத்தை சக்தியிழக்கச் செய்ய விரும்புபவன் மேற்படி மூன்று யாகங்களைச் செய்யவும், தனக்கு ஆபத்து வராது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4. த்ரவ்யமின்மையால் அடையாதவன் யாகத்தை அடைய விரும்புபவன் அக்னுவிஷ்ணு தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். அக்னி எல்லா தேவதாஸ்வரூபம். விஷ்ணு யக்ஞஸ்வரூபம். ஆகையால் இவன் யக்ஞத்தை அடைகிறுன். யக்ஞம் செய்யும் வாய்ப்பைப் பெறுகிறுன்.

5. கண்நோயால் பீடிக்கப்பட்ட எஜமானன் நல்ல கண்பார்வை பெற அக்னுவிஷ்ணு தேவதை, நெய்யில் பக்குவம் செய்யப்பட்ட சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நல்ல கண்பார்வை கிடைக்கும்

6. அத்வரகல்பா என்ற இஷ்டி விதிக்கப்படு கிறது. அக்னிஷ்டோம யாகங்கள் செய்யவும். யஜமானன் யாகம் செய்யாத சத்ருவான அயஜ மானனுடைய இந்திரிய சாமர்த்தியத்தை அழித்து விடுகிறுன். அவ்வாறு சாமர்த்தியத்தை இழக்கா மல் இருக்க மேற்படியாகத்தைச் செய்ய வேண்டும். ஸோம யாகத்திற்கு மூன்று ஸவனங் கள் இருப்பது போல, இந்த இஷ்டியையும் மூன்று காலங்களில் செய்யவேண்டும். அப்பொழுது ஸோம யாகத்திற்கு சமமாகும். 1) காலையில் செய்ய வேண்டி யாகத்திற்கு 1. அக்னுவிஷ்ணு தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம். 2. ஸரஸ்வதீ தேவதை, நெய் ஹவிஸ், 3. ப்ருஹ ஸ்பதி தேவதை, சரு ஹவிஸ் மூன்று யாகங்களை யும் சேர்ந்தாற்போல் செய்யவேண்டும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அத்வரகல்பா இஷ்டியின் மத்யாஹ்னம் செய்யவேண்டிய மூன்று யாகங்கள் பின்வருமாறு- 1. அக்னாவிஷ்ணு தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. ஸாஸ்வதீ தேவதை, நெய் ஹவிஸ். 3. ப்ருஹஸ்பதி தேவதை, சரு ஹவிஸ், மூன்று யாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்ய வேண்டும். அத்வரகல்பா இஷ்டியின் ஸாயங் காலம் செய்யவேண்டிய மூன்று யாகங்கள் பின் வருமாறு—

1. அக்னாவிஷ்ணு தேவதை, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. ஸரஸ்வதீ தேவதை, நெய் ஹவிஸ் 3. ப்ருஹஸ்பதி தேவதை, சரு ஹவிஸ் என்ற மூன்று யாகங்களையும் சேர்ந்தாற்போல் செய்யவேண்டும்.

முதல் யாகத்தை அதிவிடியற்காலத்தில் ஆரம்பிக்கவேண்டும். மேலும் மேற்படி இஷ்டி செய்தவன் இந்த யாகங்களின் தொடர்ச்சியாக மித்ராவருணன் தேவதை, ஒரு கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்ய வேண்டும். இது ஸோம யாகத்தில் செய்யப் படும். அனுபந்த்யா பசு யாகத்திற்கு சமமாகும்.

அனுவாகம்—10 (असावादित्यो नव्यरोचत तस्मै)

ஒரு சமயம் சூரியன் விசேஷமாக ப்ரகாசிக்க முடியவில்லை. அப்பொழுது தேவர்கள் ப்ரயாச் சித்தமாக ஸோமாரௌத்ரேஷ்டி செய்து சூரிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னுக்கு விசேஷ ஒளி வரவழைத்தனர். ஆகையால் ப்ருஹ்மவர்ச்சஸ்ஸை அடைய விரும்புபவன் ஸோமாரௌத்ரேஷ்டியைச் செய்யவும். தைப்பூசம் இதற்கு காலம். ஸோமாருத்ரன் தேவதை. சரு ஹவிஸ். வேத சாஸ்திர அறிவு ப்ரஹ்மவர்ச்சஸ் எனப்படும். ஷி யாகத்தை வேதியை நான்கு புறமும் மூடி (Covered)க் கொண்டு யாகத்தில் உபயோகிக்கவேண்டும். நிச்சயம் மேற்படி பயன் கிடைக்கும். வெள்ளைப் பசுவின் நெய்தான் ஜலத் திற்குப் பதிலாக நெய்யாலேயே ப்ரோக்ஷணம் மார்ஜனம் (அலம்புதல்) முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

2. எவன் சரும வியாதி வரும் என பயப்படு கிருனே அவன் ஸோமாபௌஷ்னேஷ்டியைச் செய்யவும். ஸோமாபூஷா தேவதை, சரு ஹவிஸ். மேற்படி யாகத்திஞல் சரும வியாதிவராது.

3. ப்ரஜையை விரும்புபவன் ஸோமாரௌத் ரேஷ்டி செய்யவும். ஸோமாருத்ரன் தேவதை, சரு ஹவிஸ். மக்கட்பேறு கிடைக்கும்,

4. அபிசாரம் செய்ய விரும்புபவன் ஸோமா ரௌத்ரேஷ்டியைச் செய்யவும். மேலே சொன்ன யாகம் தான் இது. வைரிமரணம் ஏற்படும்.

5. நீண்டகால நோயாளியும் மேற்படி இஷ்டியைச் செய்யவும். உயிர் பிரிந்தவனும் உயிர் பெறுவான், ரோகம் நீங்கும். விசேஷமாக ஹோதாவுக்கு காளையை தானம் செய்யவும்.

4

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6. வீடு அல்லது வயல் விஷயமாக தகராறு பண்ணக் கூடிய சத்ருவை மேற்படி இஷ்டியைச் செய்தால், அவனுக்கு எதிரியை உண்டாக்க முடியும், எதிரிக்கு வேறு எதிரியை சமாளிக்கநேரிடும்.

அனுவாகம்—11 (ऐन्द्रमेकादशकपालं)

1. கிராமத்தையடைய விரும்புபவன் கீழ் கண்ட 2 யாகங்களை சேர்ந்தார்போல் செய்யவும். 1. இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ். 2. மருத்கணங்கள் தேவதை, 7 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்து கிராமத்தையடைவான். முதல் ஹவிஸ்ஸை ஆஹவனீயாக்னியில் பாகம் செய்ய வேண்டும். 2 வது ஹவிஸ்ஸை கார்ஹபத்யாக்னியில் பாகம் செய்யவும்.

2. ஷெ இஷ்டியை சிறுமாறுபாட்டுடன் (மேல் சொல்லப்பட்டபடி) செய்தால் அரசனுக்கும் மக்களுக்கும் இடையே கலகம் ஏற்படும்.

3. ஷெ மாறுபாடில்லாமல் முதல் ப்ரயோகத்தைப் போலவே ஷெ இஷ்டியை செய்தால் கலவரம் நீங்கி சமாதானமேற்படும்.

4. கிராமத்தையடைய விரும்புபவன் கீழ் கண்ட இரண்டு யாகங்களை சேர்ந்தார்போல் செய்யவும்.

1. இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ் கிருத புரோடசம் ஹவிஸ், 2. விச்வேதேவர்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதை 12 கபால ஸம்ஸ்கிருத ப்ரோடாசம் ஹவிஸ். கிராமவானுக ஆவான், சிகப்புக்கலர் வேஷ்டி தக்ஷிணை.

5. கிராமத்தையடைய விரும்புபவன், வெள்ளைப் பசுவின் பாலில் பாகம் செய்யப்பட்ட தினைதான்ய சருவை ஹவிஸ்ஸாகவும் மருத் கணங்களை தேவதையாகவும் கொண்ட யாகத்தைச் செய்யவும்.

6. ஒரு சமயம் தேவாஸுர யுத்தம் நடந்தது. தேவர்களுள் தான் தலைவனென்று பரஸ்பரஸ்பரம் கலஹம் ஏற்பட்டு நான்கு பிரிவாகப் பிரிந்தனர்.

1. அக்னி தலைவன்—வஸுக்கள் பின்பற்றுபவர்கள்
2. ஸோமன் ,, —ருத்ரகணங்கள் ,,
3. இந்திரன் ,, —மருத்கணங்கள் ,,
4. வருணன் ,, —ஆதித்யர்கள் ,,

பிறகு இந்திரன் ப்ருஹ்மாவின் ஆலோசனையின்படி ஸம்ஞானீ என்ற இஷ்டியைச் செய்தனர். அதன் மஹிமையால் தேவர்கள் ஒன்று சேர்ந்து இந்திரனை தலைவனுக ஏற்றனர். அதுபோல் எவன் தனக்கு சமானமானவர்களுள் பரஸ்பர க்ருத்து வேறுபாட்டை அடைகிருனே அவன் மேற்படி இஷ்டியைச் செய்யவும். சமானமானவர்களுள் தலைவனுக ஆவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம் 12 காம்யேஷ்டிக்கு வேண்டிய யாஜ்யா புரோனுவாக்யா மந்திரங்கள் கூறப் பட்டிருக்கின்றன.

மூன்ரும் ப்ரச்னம்

அனுவாகம்—1 (आदित्येभ्यो भुवद्वत्)

செல்வத்தையடையத் தகுதியிருந்தும் செல் வத்தையடையாததினுல்.

1. அதை அடையவிரும்புபவன்: புவத்வான் ஆதித்யர்கள் தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நிச்சயம் செல்வந்தனுக ஆவான்.

2. தேசத்திலிருந்து விரோதிகளால். வெளி யேற்றப்பட்டவனே அல்லது வெளியேற்றப் படுகிறவனே - தாரயத்வான் ஆதித்யர்கள் தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். நாடு கடத்தப்படமாட்டான்.

3. கிராமத்தின் நன்மையை அந்தரங்கமாக அரசனிடத்தில் தெரிவிப்பவன் வீட்டிலிருந்து வெள்ளை, கருப்பு நெல்லைக் கொண்டு வந்து இரண்டையும் தனித்தனியாக பிரித்தெடுத்து வெள்ளை நெல்லிலிருந்து கிடைத்த அரிசியை ஆதித்ய தேவதைக்கு சருவாகவும், கருப்பு அரிசியை வருண தேவதைக்கு சரு ஹவிஸ்ஸாக வும் யாகம் செய்யவும். பூமியையும் ப்ரஜைகளை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யும் அடையலாம். ப்ரதிபந்தத்தால் ஷி லாபம் கிடைக்காவிடில் ப்ரயோகத்தில் சில விசேஷங்கள் கூறப்பட்டுள்ளன. அதைச் செய்தால் ப்ரதிபந் தகம் நீங்கி பலனையடையலாம்.

அனுவாகம்—2 (देवा वै मृत्योरबिभयुः)

தேவர்கள் ம்ருத்யுவினிடமிருந்து பயந்து ப்ரஜாபதி தேவதையாகவும் 1. 100 தங்கத்துண்டு கள் ஹவிஸ்ஸாகவும் வைத்து யாகம் செய்து அந்த பயத்திலிருந்து விடுபட்டனர். ஆகையால் எந்த எஜமானன் அபம்ருத்யுவினிடமிருந்து பயப்படு கிருனே அவன் ஷி யாகத்தை செய்யவும். அபம்ருத்யு நீங்கி நீண்ட காலம் 100 வயது வாழ் வான். நெய்=ஆயுளை கொடுக்கவல்லது, தங்கம் (ஸுவர்ணம்) மரணமின்மையைக் கொடுக்க வல்லது. (நீண்டநாள் வாழ்வை கொடுக்கவல்லது) நான்கு நான்கு துண்டுகளை ஒவ்வொறு தடவையி லும் எடுத்துக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். மீதியுள்ள எல்லாத் தங்கத்துண்டு களை ப்ரஹ்மா விடமே கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்கு பங்கு கிடையாது. இப்படிச் செய்வதால் மொத்தமாக யஜமானனுக்கு ஆயுஸ் கிடைக்கிறது என்று கருத்து.

2. சூரியன் மங்கிய ஒளியுள்ளவனுகக் காணப்பட்டபொழுது அதற்கு ப்ராயச்சித்தமாக சூரியதேவதை சரு (சாதம்) ஹவிஸ் என்ற யாகத் தை தேவர்கள் செய்து ஒளியைபெறச் செய்தனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகையால் ப்ரஹ்மவர்ச்சஸ்ஸை விரும்புபவன் மேற்படி யாகத்தைச் செய்யவும். ஸூர்யப்ரஸாதத்தால் ப்ரஹ்மவர்ச்சஸ் உள்ளவனாக விளங்குவான் (நிச்சயம்).

3. தனது ப்ரயத்னத்தினால் ஏதோ ஓர் அளவு தங்கத்தையடைந்து பிறகு தங்கம் தானாகவே விருத்தியாக வேண்டும். (அதாவது தனது முயற்ச்சியில்லாமல்) என்று விரும்புபவன்-கீழ்க் கண்ட மூன்று யாகங்களை சேர்ந்தார்போல் செய்ய வேண்டும்.—1. அக்னி தேவதை. 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. ஸவிதா-தேவதை-12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 3. பூமி தேவதை, சரு (சாதம்) ஹவிஸ். என மூன்று யாகங்கள்.

4. ஹிரண்யத்தை (தங்கத்தை) யடைந்து திருடர் பயத்தால் தைரியமிழந்து நடுங்குபவன் ஷை மூன்று யாகங்களைச் செய்யவும். பயம் நீங்கி தைரியம் ஏற்படும்.

5. தங்கத்தை வழியில் நழுவ விட்டோ, அல்லது வைத்த இடம் மறந்தாலோ தங்க நஷ்டத்தையடைந்தவன், மேற்படி மூன்று யாகங்களைச் செய்யவும். நஷ்டமான தங்கம் கிடைத்து விடும்.

6. இந்திரன் த்வஷ்டாவின் யாகத்தில் பலாத்காரமாக ஸோமரஸத்தைக் குடித்து பயந்து ஓடி ஜீரணமாகாமல் வாந்தியெடுத்தான். அவ்வாறு கீழே விழுந்த ஸோமரஸம், ச்யாமை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்ற தான்யமாக முளைத்தது. ஆகையால் எந்த எஜமானன் பானம் செய்த ஸோமரஸத்தை வாந்தியெடுக்கிறானோ அவன் ஸோமன், இந்திரன் தேவதை, ச்யாமை தான்யத்தினாலான சரு ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். வாந்தி எடுக்கும் சக்தி குன்றி ஜீரண சக்தி ஏற்படும்.

7. பசுக்களின் ஸம்ருத்தியை விரும்புபவன் கீழ்க்கண்ட மூன்று யாகங்களை சேர்ந்தார்போல் செய்யவும். — 1. தாதாவான அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடசம் ஹவிஸ். 2. ப்ரதாதா இந்திரன் தேவதை 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 3, ப்ரஜாபதி தேவதை; தயிர், தேன், நெய், ஜலம், வருத்தயவை, இவைகள் ஐந்தும் ஹவிஸ். மேற்படி யாகத்தால் பசுக்கள் நிறைய உண்டாகும்.

அனுவாகம்—3 (देवा वै सत्रमासत)

ஒரு சமயம் தேவர்கள் யசஸ்ஸைக் கொடுக்கவல்ல ஸத்ர யாகத்தை யனுஷ்டித்தனர். அதன் பயனான யசஸ் ஸோமனையடைந்தது. அந்த யசஸ்ஸுடன் ஸோமன் மலையை நோக்கிச் சென்றான். அக்னியும் அவனைப் பின்பற்றினார், அப்பயனை இருவரும் பெற்றனர். பிறகு இந்திரன் அவர்களை வேண்டி அவர் உதவியால் கீழ்க்கண்ட யாகத்தை செய்தான். அதன் மூலம் தேஜஸ், இந்திரியபலம், பிரஹ்மவர்ச்சஸ் என்ற மூன்று பயன் கிடைத்தன. ஆகையால் எந்த யஜமானன் தர்சபூர்ண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாஸ, பசுபந்தம் முதலிய யாகங்களை உரிய காலத்தில் செய்யவில்லையோ அவன் கீழ்க்கண்ட மூன்று யாகங்களை சேர்ந்தார்போல செய்ய வேண்டும். 1. அக்னி தேவதை,8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 3. ஸோமன் தேவதை—சரு (சாதம்) ஹவிஸ் என மூன்று யாகங்கள் செய்தவருக்கு தேஜஸ், இந்திரிய பலம், ப்ரஹ்மவர்சஸ் மூன்றும் கிடைக்கும். ஆக்னேயத்தையும், ஸௌம்யத்தை யும் இந்திர யாகத்தில் சேர்த்துச் செய்யவும். அதனுல் ஆக்ஞாசக்தி, வேதாத்யயன ஸம்பத்தும் கிடைக்கும்.

2. தான் விரும்பிய பொருளையடைய கீழ்க் கண்ட யாகத்தைச் செய்யவும்.—அக்னி ஸோமர் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருதி புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

3. ப்ரஹ்மவர்சஸ்ஸையடைய விரும்புபவன் கீழ்க்கண்ட யாகம் செய்யவும். அக்னி ஸோமர் தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத சியாமை தான்ய புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

4. நபும்ஸகனுவான் என்ற பயமுள்ளவன் கீழ்க்கண்ட யாகத்தைச் செய்தால் நபும்சகனுக ஆகமாட்டான். வாஜி என்ற ஸோமன் தேவதை- சியாமை தான்ய சரு ஹவிஸ் என்ற யாகம்.

5. கிராமத் தலைவனுக விரும்புபவன் கீழ்க் கண்ட யாகம் செய்யவும்.—ப்ரஹ்மணஸ்பதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

வைச்யர்கள் தன கர்வம் பிடித்து ப்ராஹ்மணனை அவமதித்தால், அவர்களை ப்ராஹ்மண ஜாதிக்கு வசப்படுத்த ஷ இஷ்டியையே யாஜ்யா மந்திரத்தில் மருத்சப்தமுள்ளதை உபயோகப் படுத்தி செய்யவும். வைச்யர்கள் வசப்படுவார்கள்.

அனுவாகம்—4 (अर्य्म्णेचरुं)

1. ஸ்வர்கத்தையடைய விரும்பியவன் கீழ்க் கண்ட யாகம் செய்யவும். அர்யமா தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

2. ப்ரதிக்ரஹம் செய்ய விரும்புபவன் ப்ரஜை களை தனக்கு தானம் கொடுக்கும்படி செய்ய விரும்புபவன் மேற்படி இஷ்டியை செய்யவும். அர்யமா தேவதை சரு ஹவிஸ் என்ற யாகம்.

3. ஜனங்களுக்கு நன்மை இடையூறின்றி அடையச் செய்ய விரும்புபவன் மேற்படி இஷ்டி யைச் செய்யவும்.

4. எவன் தனக்கு சமமானவர்களுள் சிறப்பையடையாமல் மட்டமாக கருதப்படுகிறானோ அவன் கீழ்க்கண்ட யாகம் செய்யவும். இந்திரன் தனக்கு முக்யத்துவமின்மையால் வருத்தமுற்று ப்ரஜாபதியையணுகி அவர் ஆலோசனையின் பேரில் கீழ்க்கண்ட யாகம் செய்து தலைமைப் பதவியை அடைந்தான். ஆகையால் இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யஜமானனும் யாகம் செய்ததிலிருந்து உயிருள்ள வரை சிறந்தவனுக விளங்குவான். இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் அனுஷாக தான்யத்திஞல் செய்யப்பட்டது ஹவிஸ். அறுவடை செய்த பிறகு அடிக்கட்டை யில் முளைத்து பயிர் விளைந்து கிடைத்த தான்யம் ஆனுஷூகம் எனப்படும்.

5. சிறப்பிழந்த ப்ராஹ்மணன். ப்ருஹஸ்பதி தேவதை, ஆனுஷூக புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

அனுவாகம்—5 (प्रजापतेस्त्रयस्त्रिँशत्)

ப்ரஜாபதி தன்னுடைய 33 பெண்களையும் ஸோமனுக்கு அளித்தார். அவன் ரோகிணியி னிடத்தில் அதிக ஸ்நேஹமுள்ளவனுக இருந்தான். பொருமையிஞல் மற்றவர்கள் திரும்பி தகப்பனு ரிடம் சென்று விட்டனர். ஸோமன் (சந்திரன்) ப்ரஜாபதியினிடம் சென்று அவர்களை அனுப்பும் படி கேட்டான். அவர் எல்லா ஸ்திரீகளை யும் சமமாக நடத்தும்படி சபதம் செய்யச் சொல்லி, அதன்படி ஸோமன் சபதம் செய்தவுடன் மற்ற ஸ்திரீகளை திரும்ப அனுப்பிஞர். ஆஞல் சபதத்தை மீறி ரோஹிணியினிடத்தில் ப்ரியமுள் ளவனுக இருந்தான். அதஞல் யக்ஷ்மரோகத்தை யடைந்தான். ஸோமராஜாவை அடைந்ததிஞல் ராஜயக்ஷ்ம என்ற பெயர் வந்தது. கீழ்க்கண்ட யாகம் செய்து அந்த பாபத்திலிருந்து விடுவித்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தனர். ஆகையால், பாபத்திஞல் யக்ஷ்ம ரோக முள்ளவன் கீழ்க்கண்ட யாகம் செய்தால் பாபத்தி லிருந்து விடுபட்டு ரோகம் நீங்கி சுகியாக ஆவான். ஆதித்யர்கள் தேவதை, சரு ஹவிஸ் அமாவாசையன்று செய்யவும்.

அனுவாகம்—6 (प्रजापतिर्देवेभ्योऽन्नाद्यं)

1. அத்வர்யு எந்த யஜமானனை அன்னம் நிறைந்தவனுக செய்ய விரும்புகிருனே அவன், த்ரிதாது என்ற யாகத்தைச் செய்யவும். மூன்று யாகங்கள் 1. பூமிக்கதிபதியான இந்திரன் ராஜா தேவதை 2. அந்தாரிக்ஷலோகாதிபதியான இந்திரன் அதிராஜன் தேவதை 3. ஸ்வர்க்க லோகத்திற்கதிபதியான இந்திரன் ஸ்வராட் தேவதை. ஒன்றை விட ஒன்று பெரியதாக மூன்று புரோடாசங்கள் ஹவிஸ் 11 கபாலங்களை மேல் நோக்கி வைத்து ச்ரபஸம் (பக்வம்) செய்யவும். யாஜ்யானுவாக்யைகளை மாற்றி மாற்றி சொல் லவும்.

அனுவாகம்—7 (देवासुरास्संयत्ता आसन्)

இந்திரிய சாமர்த்தியமும் சரீரஸாமர்த்திய மும் வேண்டுபவன் கீழ்க்கண்ட இஷ்டியைச் செய் யவும். ஒரு சமயம் தேவாஸுர யுத்தத்தில் அசுரர் கள் தேவர்களை ஜயித்தனர். தேவர்கள் அசுரர் களின் சேவகர்களாக ப்ரஜையாக மாறினர். அப்பொழுது தேவர்களிடமிருந்து இந்திரிய சாமர்த்தியமும், சரீர சாமர்த்தியமும் வெளியேறி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யது, இந்திரன் ப்ரஹ்மாவினிடம் சென்று முறையிட்டான். அவர் சொல்படி ஸர்வப்ருஷ்டேஷ்டியைச் செய்து இழந்த சாமர்த்தியத்தை பெற்றான். ஆகையால் ஷி சாமர்த்தியத்தையடைய விரும்புபவன் ஸர்வப்ருஷ்டா என்ற இஷ்டியை செய்யவும்.

1 ராதந்திர இந்திரன் 2. பார்ஹத இந்திரன் 3. வைரூப இந்திரன், 4. வைராஜ இந்திரன், 5. சாக்வர இந்திரன், 6. ரைவத இந்திரன் - என 6 தேவதைகள் 12 கபால ஸம்ஸ்கிருத ஒரு புரோடாசம் ஹவிஸ், குதிரை, காளை மாடு, ஆண் செம்மறியாடு, ஆண் வெள்ளாடு, நான்கும் தக்ஷிணை என்ற யாகத்தைச் செய்யவும். மித்யாபவாதம்: பிறரால் பொய்யாக பழி சுமத்தப்பட்டவன் இ யாகத்தைச் செய்யவும்.

அனுவாகம்—8 (रजनोवैकीर्णय:)

கண் பார்வை நன்கு யடைவதற்காக கீழ்க்கண்ட மூன்று யாகங்களை சேர்ந்தார்போல் செய்யவும். 1. ப்ராஜஸ்வான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் 2. சூரியன் தேவதை, சரு ஹவிஸ், 3. ப்ராஜஸ்வான் அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என மூன்று யாகங்கள். நல்ல பார்வை பெறுவான்.

அனுவாகம்—9 (ध्रुवोऽसि ध्रुवोऽहं)

கிராமத் தலைவனாக விரும்புபவன் ஞாதிகள் தனக்கு அதீனமாக இருக்கும்படி செய்ய விரும்பு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பவன் கீழ்க் கண்ட ஸாங்கிரஹணேஷ்டியைச் செய்யவும். விச்வே தேவர்கள் தேவதை, புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும்.

அனுவாகம்—10 (यन्नवमैत्)

தயிரிலிருந்து மேலே எடுக்கப்பட்டு புதிய ரூபத்தை யடைந்ததால் நவநீதம் என்றும், உருக்கியவுடன்-திரவமாக ஓடியதால் ஸர்பிஸ் என்றும்-மறுபடியும் குளிர வைத்தால் கெட்டியாவதால் க்ருதம் என்றும் பெயர். இதில் ஆயுஷ்காமேஷ்டிக்கு வேண்டிய விசேஷ மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

அனுவாகம்—11 (अग्निवा एतस्य शरीरं)

நீண்ட காலம் நோயுற்றவன் அதிலிருந்து விடுபடவும், முழு ஆயுஸ்-100 வருட வாழ்வை விரும்புபவனும் இந்த ஆயுஸ் காமேஷ்டியைச் செய்யவும். 1. அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ். 2. ஸோமன் தேவதை சரு ஹவிஸ் 3. வருணன் தேவதை—10 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ். 4. ஸரஸ்வதி தேவதை, சரு ஹவிஸ் 5. அக்னி விஷ்ணு தேவதை 11 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ். இந்த ஐந்து யாகங்களையும் சேர்ந்தாற் போல் செய்ய வேண்டும். அபம்ருத்யு ஏற்படாது. எத்தனை வருடம் வாழ விரும்புகிறானோ அத்தனை குந்துமணி எடையுள்ள ஸ்வர்ண குண்டலம் இருக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம் – 12 (प्रजापतिः वरुणायाश्वं)

குதிரையை தானம் செய்தவன் கீழ்க்கண்ட இஷ்டியைச் செய்ய வேண்டும். வருண ரோகம் (ஜலோதர ரோகம்) ஏற்பட்டு ஷி தானத்தால் அதை நீக்க வாருணேஷ்டி செய்யவும். வருணன் தேவதை, எத்தனை குதிரைகள் தானம் கொடுக்கப் பட்டதோ அத்தனை எண்ணிக்கைக்கு ஒன்று அதிகமான 4 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசங்கள் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். தானம் செய்த வுடன் யாகம் செய்யாமல் காலம் கழித்து மேற்படி யாகம் செய்வதாயிருந்தால் ஸௌர்ய யாகத்தை யும் செய்யவும். சூரியன் தேவதை, 1 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் ஜலத்தில் அவப்ருத இஷ்டி செய்து ஸ்நானம் செய்யவும். பிறகு யாகசாலைக்கு வந்து கீழ்க் கண்ட அங்க யாகம் செய்ய செய்யவும்.— அபோநப்தா தேவதை, சரு ஹவிஸ் என்ற யாகம் அச்வப்ரதிக்ரஹேஷ்டி முடிந்தது.

அநுவாகம்—13 (यावामिन्द्रावरुणा)

பாபத்திற்குள்ளாகி வருண பாசத்திற் குள்ளானவன் அதிலிருந்து விடுபட இந்திரா வருணர்கள் தேவதை, 11 கபாலம் புரோடாசம், பால் இரண்டும் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். ரோகத்திலிருந்து விடுபடுகிறான்.

அநுவாகம்—14 (सप्रत्नवत्)

காம்யேஷ்டி யாஜ்யா புரோனுவாக்யா மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நான்காம் ப்ரச்னம்

அனுவாகம்—1 (देवामनुष्याः पितरः)

தேவர்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள் ஒரு புறமும், அசுரர்கள், ராக்ஷஸர்கள், பிசாசுகள் இரு சைன்யமும் யுத்தத்திற்கு தயாராயிற்று. யுத்தத்தில் தேவர்கள் உடலில் சிறு காயம் பட்ட இடத்தில் இரவில் ராக்ஷஸர்கள் வந்து ஏதோ விஷத்தை காயம் பட்ட இடத்தில் வைத்து விட்டு சென்றூர்கள். அந்த விஷத்திஞல் தேவர்கள் இறந்தார்கள். காலையில் மீதி தேவர்கள் இறந்த தேவர்களேப் பார்த்து இது ராக்ஷஸர்களுடைய செயல் என்று எண்ணி ராக்ஷஸர்களுக்கு லஞ்சம் (उत्कोच:) கொடுத்து தன் வசமாக்கிக் கொண்டனர். அந்த ராக்ஷஸர்கள் வெற்றியின் பலனில் தங்களுக்கு பங்கு வேண்டும் என்று உடன்படிக்கை செய்து கொண்டு தேவர்கள் சைன்யத்தில் சேர்ந்தார்கள். பிறகு தேவர்கள் அசுரர்களே வென்றனர். மீதி ராக்ஷஸர்கள், தேவர்கள் வஞ்சகம் செய்து விட்டார்கள் என்று தீர்மானித்து அவர்களே அடிப்பதற்காக அவர்களே சுற்றி முற்றுகையிட்டனர். அப்பொழுது தேவர்கள் அக்னியினிடத்தில் தங்கள் காரியச்சித்திக்காக ப்ரார்த்தித்தனர். அந்த ப்ரார்த்தனே போது தேவர்கள் அக்னியை உத்தேசித்து கீழ்க்கண்ட யாகத்தை செய்தனர்.

1. ப்ரவான் அக்னி தேவதை—8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாச ஹவிஸ்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2. விபாதவான் அக்னி தேவதை—8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாச ஹவிஸ்.

3. ப்ரதீகவான் அக்னி தேவதை—8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாச ஹவிஸ் என்ற மூன்று யாகங்களை சேர்ந்தார்போல் செய்தனர்.

முதல் யாகத்தினால் ராக்ஷஸர்கள் கிழக்கு (முன் புறம்) திக்கில் விரட்டி அடிக்கப்பட்டனர். இரண்டாவது யாகத்தினால் வலது, இடது பக்கங்களில் ராக்ஷஸர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். மூன்றாவது யாகத்தினால் மேற்கு (பின்புறம்) திக்கில் விரட்டப்பட்டனர். இவ்வாறு தேவர்கள் வெற்றியுண்டு அசுரர்களை தோற்கடித்தனர்.

1. தன்னை விட அதிகம் பலம் வாய்ந்த சத்ரு 2, சமபலமுள்ள சத்ரு 3. குறைந்த பலமுள்ள சத்ரு என்ற மூன்று வித சத்ருக்களை போட்டியில் வெல்ல விரும்புபவன் கீழ்க்கண்ட இஷ்டியைச் செய்யவும். 1. ப்ரவான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் 2. விபாதவான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் 3. ப்ரதீகவான் அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற மூன்று யாகங்களை சேர்த்தார் போல்செய்யவும். சத்ருவை வெல்லலாம்.

அனுவாகம்—2 (देवासुराःसंयत्ता आसन्)

முன் போலவே சத்ரு பாதையுள்ளவன் கீழ்க்கண்ட விஜிதி என்ற இஷ்டியைச் செய்யவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. அம்ஹோமுக் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் 2. வைம்ருத இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் 3. இந்திரியாவான் இந்திரன் தேவதை, 11 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ், மொத்தம் 33 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசமாவதால் 33 கோடி தேவதைகளின் அனுக்ரஹம் கிடைக்கிறது. ஷ மூன்று யாகங்களையும் சேர்ந்தார்போல் செய்யவும். பாபத்திலிருந்து எஜமானன் விடுபடுவான்.

அனுவாகம்—3 (देवासुरा: सय्यत्ता आसन्)

சத்ருவை வெல்ல விரும்புபவன் - ஸம்வர்கேஷ்டியை செய்யவும். ஸம்வர்க்காக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம் செய்யவும். யஜமானன் எல்லாவிதமான பலத்தையும் பெறுவான். சத்ரு தோல்வியடைவான்.

அனுவாகம்—4 (प्रजापतिः प्रजाअसृजत)

கார்முதேஷ்டி சொல்லப்படுகிறது. ப்ரஜைகளை விரும்புபவன் ஷ இஷ்டி செய்யவும். 1. ப்ரஜாபதி தேவதை. காட்டுப்பயறு தான்யத்தின் சரு ஹவிஸ் என்ற யாகம். பசுக்களை விரும்புபவன் ஸோமாபௌஷ்ணேஷ்டி செய்யவும். 2. ஸோமன். பூஷா இருவரும் தேவர்கள். கார்முதம் (காட்டுப்பயறு) சரு ஹவிஸ், என்ற யாகம், பசு ஸம்ருத்தி ஏற்படும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—5 (अग्नेगोभिर्न:)

சித்ரேஷ்டி 6வது அனுவாகத்தில் சொல்லப் பட்டுள்ளது. அதற்கு வேண்டிய உபஹோம மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

அனுவாகம்—6 (चित्रयायजेत)

இதில் சித்ரேஷ்டி விதிக்கப்படுகிறது. பசுக் களையடைய விரும்புபவன் ஷ இஷ்டியை செய்ய வும். இதில் 7 யாகங்கள் உள்ளன. 1. ஆக்னேய யாகம்-அக்னி தேவதை 2. ஸௌம்யயாகம், ஸோமன் தேவதை 3. த்வாஷ்டிர யாகம்-த்வஷ்டா தேவதை 4, 5. ஸாரஸ்வத யாகங்கள்-ஸரஸ்வான் ஸரஸ்வதி இரு தேவதைகள் 6. ஸிநீவாலீ யாகம் சரு ஹவிஸ் 7. ஐந்திர யாகம்-இந்திரன் தேவதை, த்ரவ்யங்கள் வேறு சாகையில் சொல்லப் பட்டுள்ளது. ப்ரஜா ஸம்ருத்தி ஏற்படும்.

அனுவாகம் 7 முதல் 10வது அனுவாகம் வரை காரீரேஷ்டி சொல்லப்படுகிறது.

7வது அனுவாகம் मारुतमसि 8வது அனுவாகம் (देवावसव्या:) இரண்டும் காரீரேஷ்டிக்கு வேண்டிய விசேஷ மந்திரங்களைக் கூறுகின்றன.

அனுவாகம்—9 (मरुतमसिमरुतां भोजइति)

அனுவாகம்—10 (देवावसव्या:)

8வது அனுவாக மந்திரத்தின் விளக்கம். ஏழாவது அனுவாகத்திலுள்ள மந்திரங்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம் 9ல் விளக்கம் கூறப்படுகிறது. மழையை அடைய விரும்புபவன் காரீரேஷ்டி செய்யவும். ருத்விக்குகள் கருப்பு உடை அணிய வேண்டும். கரையும் கருப்பாக இருக்க வேண்டும். சன்யாசிகள் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்காமல் இருந்ததால் இந்திரன் அவர்களின் தலையை வெட்டி செந்நாய்களுக்கு போட்டான். தலையின் கபாலம் பூமியில் பேரீச்ச மரமாக முளைத்தது. பேரீச்சம் பழத்தை பொடி செய்து சத்து மாவாக ஆக்கி, தேனை விட்டுக் கலந்து மான் தோலில் கட்டி வைக்கவும். ப்ரதான தேவதை - அக்னி, புரோடாசம் ஹவிஸ். மண் கலயத்தில் தண்ணீரை நிரப்பி உத்கரம் என்ற இடத்தில் வைக்கவும். ப்ரதான யாகத்திற்கு பிறகு பேரீச்ச சத்துமாவை ஹோமம் செய்ய வேண்டும். முதல் நாள் மழை பெய்து விட்டால் ஸத்து ஹோமத்துடன் முடித்து கொள்ள வேண்டும். மழை இல்லாவிடில் மறு நாளும் பேரீச்சம்பழ ஸத்து மாவைக் கட்டி வைத்து ஹோமம் செய்ய வேண்டும். அன்றும் மழை வராவிட்டால் மூன்ருவது நாளிலும் ஸத்து மாவைக் கட்டி வைத்து ஹோமம் செய்ய வேண்டும். மூன்று நாள் அனுஷ்டானத்திற்குப் பிறகும் மழையில்லாவிட்டால் நான்கா்வது நாள் மித்ரா வருணர்கள் தேவதை, புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தைச் செய்யவும். பகலிலோ இரவிலோ கட்டாயம் மழை பெய்யும். தாமச்சத் (धामच्छद्) அக்னி தேவதை, 8 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹவிஸ். 2. மருத்கணங்கள் தேவதை. 7 கபால ஸம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ்.

சூரியன் தேவதை. 1 கபால ஸ்ம்ஸ்க்ருத புரோடாசம் ஹவிஸ் என்ற மூன்று யாகங்களை சேர்ந்தார்போல செய்யவும். [சூரிய தாபம் அதிகமானால் அன்று மழை நிச்சயம் பெய்யும்.] உத்கரத்தில் வைக்கப்பட்ட மண் பாத்திரம் உடைந்தால் மழை பெய்யும். குதிரையை நிறுத்தி வைக்கவும். அது கனைத்தால் மழை பெய்யும். கருப்பு செம்மறி யாட்டை அங்கு நிறுத்தி வைத்து ப்ரோக்ஷணம் செய்யவும். இவ்வாறு காரீரேஷ்டி செய்தால் மழை நிச்சயம் பெய்யும். பயிர் செழிக்கும். மூவுலகிலுள்ள தேவதைகள் இந்த யாக சாலைக்கு வந்து அனுக்ரஹம் செய்யட்டும் என கடைசிப் பிரார்த்தனை மந்திரம் கூறுகிறது.

அனுவாகம்—11 (सर्वाणिछन्दांसि)

இந்த அனுவாகத்தில் த்ரைதாதவீயேஷ்டி விதிக்கப்படுகிறது. த்ருஷ்டுப் சந்தஸ்ஸை உடைய ருக்கால் ஸமித்துக்களை அக்னியில் வைக்க வேண்டும். 1. இந்த இஷ்டியை பசு புத்ரன் போன்ற எல்லாவிதமான இஷ்டத்தை அடைய செய்யவும் 2. அபிசார ப்ரயோகம் செய்வதற்கும் இந்த இஷ்டியை செய்யலாம் 3. அபிசாரத்தின் பரிஹாரமாகவும் இதைச் செய்யலாம். ஸங்கல்பத்தில் அந்தந்த விருப்பத்தை சொல்லிக் கொள்ள வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4. 1000 பசு தக்ஷிணையுள்ள யாகத்தை செய்ய சக்தியற்றவன் இந்த இஷ்டியைச் செய்தால் பல ஆயிரம் தானம் செய்யக் கூடிய சக்தியுடையவனாக ஆவான்.

5. 1000 பசுக்கள் தக்ஷிணையாகக் கொண்ட யாகத்தைச் செய்ததினால் பிறகு செய்ய வேண்டிய யாகத்திற்கு பசு இல்லாமல் கஷ்டப்படும் யஜமானன் இந்த பசு காமனையுடன் செய்தால் 1000 கணக்கான பசுக்களை அடைவான். ஏனெனில் முன்பு ப்ரஹ்மா இந்த யாகத்தை செய்து பசுக்களை அடைந்தார்.

6. ஸோம யாகம் போன்ற யாகங்களைச் செய்வதாக ஸங்கல்பம் செய்து கொண்டு, யாகத்தைச் செய்யாவிடில் தேவதைகளை அழைத்து ஏமாற்றியவனாக ஆகிறான். தேவதை த்ரோஹத்தின் பரிஹாரமாக ஷி இஷ்டியைச் செய்யவும். இந்த யாகத்திற்கு மூன்று புரோடாசம் ஒவ்வொன்றையும் நான்கு கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு உபயோகிக்க வேண்டும். இதனால் ஸம்ருத்தி ஏற்படும். மூன்று புரோடாசங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்க வேண்டும். கீழே உள்ளதை விட நடு புரோடாசம் பெரியதாக இருக்க வேண்டும். அதற்கு மேல் உள்ள புரோடாசம் அதை விட பெரியதாக இருக்க வேண்டும். நடு புரோடாசம் யவையினால் தயாரிக்க வேண்டும். ஒரே தடவையில் மூன்று புரோடசங்களிலிருந்தும் ஹோமத்திற்கு வேண்டியதை எடுக்க வேண்டும். இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இஷ்டிக்கு, ஹிரண்யம் (தங்கம்) நெய்யில் நனைத்த வஸ்திரம், கறவை மாடு மூன்றும் தக்ஷிணை. ஷி தக்ஷிணை கொடுப்பதால் தேஜஸ்ஸை அடைகிறான் பசுக்கள் நிறைய வந்து சேரும். மேலும் நல்லாசிகள் கிடைக்கும்.

அனுவாகம்—12 (त्वष्टाहतपुत्रः)

மேலே கூறப்பட்ட இஷ்டிக்குரிய தேவதைகள் இந்த அனுவாகத்தில் கூறப்படுகின்றன. அதற்கு ஓர் உபாக்யானம் (கதை) சொல்லப்படுகிறது. ஒரு சமயம் புத்ரனை இழந்த த்வஷ்டா என்பவர் இந்திரன் இல்லாமல் ஸோம யாகம் செய்ய ஆரம்பித்தார். இந்திரன் அவரிடம் தன்னையும் யாகத்திற்கு அழைக்கும்படி கூறினான். அவர் இந்திரனிடம் நீ என் புத்ரனைக் கொன்றவன் என்று கூறி அவனை அழைக்க மறுத்து விட்டார். ஆகையால் இந்திரன் பலாத்காரமாக யாகசாலைக்கு சென்று ஸொம ரஸத்தை குடித்தான், த்வஷ்டா குடித்து மீதயிருந்த ஸோம ரஸத்தை எடுத்துக் கொண்டு ஆஹவனீயாக்னியின் அருகில் சென்று இந்திரனுக்கு அபிசாரம் செய்ய எண்ணி, இந்திரனுக்கு சத்ரு விருத்தியடையட்டும் என்று சொல்லி, அக்னியில் ஹோமம் செய்தார். அக்னி பகவான் பெரிய ஜ்வாலையுடன் மேலே கிளம்பி உடனேயே சாந்தமாய் விட்டார். அக்னி கீழ் நோக்கி சென்றது யஜமானனுக்கு காரிய ஸித்தியில்லை என்பதை அறிவிக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமம் செய்வதற்குரிய மந்திரத்தை ஸ்வரம் தவறி உச்சரித்ததினால் இந்த அக்னியிலிருந்து இந்திரனுக்கு சத்ரு வளரட்டும் என்பதற்கு பதிலாக இந்திரன், அவனுக்கு சத்ருவாக வளரட்டும் என்ற பொருள் கிடைத்ததால் அக்னியிலிருந்து உண்டான புருஷனுக்கு இந்திரன் சத்ருவாக வளர்ந்தான். அவ்வாறு உண்டான புருஷன் ஹோமம் செய்ய ஆதாரமான தணலுக்கு அபிமானி தேவதையான அக்னியையும், ஹோமம் செய்யப்படுகிற ஸோம ரஸத்திற்கு அபிமான தேவதையான ஸோமனையும் தனது கடைவாய்களில் அடைத்துக் கொண்டு பற்களால் கடித்தான். அந்த புருஷன் நாள்தோறும் பாணம் விட்டால் எவ்வளவு தூரத்தில் அது விழுமோ அவ்வளவு தூரம் நான்கு திக்குகளிலும் சரீரத்தால் வளர்ந்தான். வளர்ந்து கொண்டே போய் முடிவில் உலகம் முழுவதும் வியாபித்துக் கொண்டான். இதனால்தான் அவனுக்கு விருத்ரன் (வியாபித்தவன்) எனப்பெயர் ஏற்பட்டது.

அவனைப் பார்த்து இந்திரன் பயந்தான் த்வஷ்டா பயந்தார். பிறகு த்வஷ்டா வ்ருத்ரனைக் கொல்லுவதற்காக இந்திரனுடன் நட்பு செய்து கொண்டு இந்திரனுடைய வஜ்ராயுதத்தை அஸ்திரமாக ஆக்குவதற்காக மந்திரத்தை ஜபித்து அந்த ஜலத்தினால் நனைத்தார். அப்பொழுது வஜ்ராயுதம் த்விருபமாக ஆயிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறகு இந்திரன் த்வஷ்டாவைக் கொல்லு வதற்காக அந்த வஜ்ராயுதத்தை தூக்க முயற்சித் தான். ஆனால் தூக்க முடியவில்லை. அப்பொழுது இந்திரன் முன்பு, விஷ்ணு தேவதை இருந்தது. அவரிடம் இந்திரன் பிராத்தித்தான். விருத் ராசுரனை நினைத்து பயத்தினால் எனது கை வஜ்ரா யுதத்தை தூக்க சக்தியற்றதாக ஆயிற்று. எந்த வீர்யத்தினால் விருத்ரன் உலகம் முழுவதையும் வியாபித்தானோ அந்த வீர்யத்தை நாம் இருவரும் அபஹரிப்போம். நீங்கள் எனக்கு சகாயம் செய்யுங்கள் என்று விஷ்ணு உருவத்தை மூன்று பாகமாக ஆக்கி மூவ்வுலகிலும் ஸ்தாபித்தார்.

விஷ்ணுவினால் பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட சரீரத்துடன் இந்திரன் விஷ்ணுவுக்கு பின்புறம் நின்றுகொண்டு வஜ்ராயுதத்தை தூக்கினான். அப்பொழுது விருத்ராசுரன் பயந்து போய் இந்திரனிடம் சொன்னான். ஹே இந்திரனே, பூமியை வியாபித்துக் கொள்ளவல்ல என்னிட முள்ள வீர்யத்தை உனக்கு அளிக்கிறேன். நீ என்னை அடிக்காதே என்று சொல்லி விருத்ராசுரன் வீர்யத்தின் மூன்றில் ஒரு பாகத்தை இந்திர னுக்கு கொடுத்தான். இந்திரனும் அதைப் பெற்று கொண்டு, வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அதை விஷ்ணுவிடம் கொடுத்தான். விஷ்ணுவும் தமக்குள் இந்திரன் இந்த வீர்யத்தை (பலத்தை) தரிக்கட்டும் என்று சொல்லி பெற்றுக் கொண்டார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறகு அந்தரிக்ஷலோகத்தில் இருந்த விஷ்ணுவின் சரீரத்துடன் கூட விஷ்ணுவின் பின்புறம் நின்று கொண்டு, இந்திரன் வஜ்ரா யுதத்தை உயரத் தூக்கினான். விருத்ராசுரனும் என்னை அடிக்காதே. அந்தரிக்ஷலோகத்தில் வியாபித்திருக்கும் எனது வீர்யத்தை உனக்கு அளிக்கிறேன் என்று கூறி இந்திரனுக்கு வீர்யத் தின் 1/3 பாகத்தை கொடுத்தான். இந்திரனும் அதைப் பெற்றுக் கொண்டு இரண்டு தடவை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அதை விஷ்ணுவிடம் ஒப்படைத்தான். விஷ்ணுவும் நமக்குள் இந்திரன் பலத்தை தரிக்கட்டும் என்று சொல்லி பெற்றுக் கொண்டார்.

பிறகு தேவலோகத்திலிருந்து விஷ்ணுவின் சரீரத்துடன் விஷ்ணுவின் பின்புறம் இருந்து கொண்டு, இந்திரன் வஜ்ராயுதத்தை தூக்கினான். விருத்ராசுரன் என்னை அடிக்காதே, உலகம் முழுவதும் வியாபித்துக் கொள்ளக்கூடிய என்னுடைய பலத்தை முழுவதுமாக உனக்கு அளிக்கிறேன் என்று இந்திரனிடம் கூறினான்.

மேலும் நாம் இருவரும் உடன்படிக்கை செய்து கொள்வோம் என்றும் கூறினான். விருத்ரா சுரன் நான் உன்னிடம் ப்ரவேசிப்பேன் என்றான். அதற்கு இந்திரன் என்னைச் சாப்பிடுவதற்காகவா எனக் கேட்டான் அதற்கு விருத்ராசுரன், நான் உன்னிடம் பிரவேசித்து உனது பசியை (ஜாடராக் னியை) தூண்டி விடுவேன். அதனால் நீ நிறைய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வஸ்துக்களை அனுபவிக்கலாம் என்று சொல்லி வீர்யம் முழுவதையும் இந்திரனுக்கு அளித்து விட்டு இந்திரனுடைய சரீரத்துள் பிரவேசித்தான். நிறைய உணவு கொள்ளக் கூடிய பெரிய வயிருக மாறினுன் [உலகிலும் பசி தான் மனிதர்களுக்கு சத்ரு, இதை அறிந்தவன் பசியாகிற சத்ருவை அழிக்கிருன்.] இந்திரனும் வீர்யத்தைப் பெற்று மூன்று தடவை வீர்யத்தை தரியுங்கள் என்று சொல்லி விஷ்ணுவிடம் கொடுத்தான். விஷ்ணுவும் நமக்குள் இந்திரன் வீர்யத்தை தரிக்கட்டும் என்று சொல்லி பெற்றுக் கொண்டார். வீர்யத்தை மூன்று தடவையாக பெற்றதினுல் வீர்யரூபமான புரோடச ஹவிஸ்ஸும் மூன்ருக ஆயிற்று. இவ்வாறு விருத்ராசுரவதத்திற்கு விஷ்ணு உதவியதால் இந்த யாகத்திற்கு இந்திரன் விஷ்ணு இருவரும் தேவதைகள். இதற்கு 1000 பசுக்கள் தக்ஷிணை. [புராணத்தில் கூறப்படும் த்ரிவிக்ரம அவதாரம் மேலே கூறப்பட்ட உபாக்யானத்தின் அடிப்படையில் தோன்றியதாகும் என நம்பலாம்.]

அனுவாகம்—13 (देवावैराजन्यात्)

இதில் இந்திரன் ப்ருஹஸ்பதி இருவரையும் தேவதையாக கொண்ட சரு யாகம் விதிக்கப்படுகிறது. முதலில் இந்த யாகத்தின் பெருமை உபாக்யானத்தின் மூலம் கூறப்படுகிறது. தேவர்களும், மனிதர்கள் போல் பிறக்கப் போகிற க்ஷத்ரியனிடமிருந்து பயந்தனர். பிறந்தவுடனமே எதிரிகளை அழிக்கவல்ல சக்தியில்லாத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வனுகச் செய்ய கர்ப்பத்திலேயே சக்தி இழக்கும்படி கயிற்ருல் கட்டினுர்கள். ஆகையால் தேவர்களால் இழக்கடிக்கப்பட்ட சக்தியுள்ளவனுக க்ஷத்ரியன் பிறக்கிருன். பிறக்கும் க்ஷத்ரியன் பிறக்கும் பொழுதே எதிரிகளை கொல்ல வல்ல சக்தி குன்ருதவனுகப் பிறக்க வேண்டுமென்று நினைத்தால் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் தேவதையாகக் கொண்ட சரு யாகத்தைச் செய்யவும். வேதத்தில் இந்திரனை க்ஷத்ரியனுகவும் ப்ருஹஸ்பதியை ப்ராஹ்மண ஜாதியராகவும் கூறப்பட்டுள்ளது. ப்ருஹஸ்பதியின் சாமர்த்தியத்தால் மனுஷ்யனுக பிறந்த க்ஷத்ரியன் தேவர்களாலும் தடுக்கப்படாத வீர்யமுள்ளவனுக ஆவான். இதற்கு (தங்க கயிறு) ஸ்வர்ண கயிறு தக்ஷிணையாக கொடுக்கவேண்டும்.

அனுவாகம்—14 (नवोनवो भवति)

இதில் காம்யேஷ்டியின் யாஜ்யா, புரோனுவாக்யா மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது ப்ரச்னம்

அனுவாகம்—1 (विश्वरूपोवै)

இரண்டாவது அனுவாகத்தில் பௌர்ணமாஸேஷ்டிக்குரிய அக்னி ஷோமீய யாகத்தை விதிக்கிருர். அதற்கு உபோத்காதமாக (முன்னுறையாக) இந்த அனுவாகத்தில் உபாக்யானம் சொல்லப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்வஷ்டாவின் புத்ரர் விச்வரூபர் என்பவர் தேவர்களுக்கு புரோஹிதராக இருந்தார். அவர் அஸுரர்களின் மருமான். அவருக்கு மூன்று தலைகள் இருந்தன. ஒரு (ஸாத்விக) முகத்தினால் ஸோம ரஸத்தை குடிப்பார். ஒரு (ராஜஸ) முகத்தால் அன்னத்தை உட்கொள்ளுவார். மூன்றுவது தாமஸ முகத்தால் ஸுராபானம் செய்வார். ஆகையால் தான் அவர் பலவித உருவமுள்ளவர், விச்வரூபர் என்று அழைக்கப்பட்டார். அவர் யக்ஞசாலையில் வெளிப்படையாக எல்லோருக்கும் கேட்கும்படி தேவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுப்பது தான் உசிதம் என்று சொல்வார். ஆனால் ரஹஸ்யமாக ருத்விக்குகளிடம் அஸுரர்களுக்கு தான் ஹவிர்பாகம் உசிதம், அஸுரர்களுக்கே ஹவிர்பாகத்தை கொடுங்கள் என்று சொல்வார். [வெளிப்படையாக சொல்வதை விட ரஹஸ்யமாகச் சொல்வதையே முக்கியமானதாக உலகில் கருதுவது வழக்கம்.] ஆகையால் ருத்விக்குகள் அஸுரர்களுக்கு பாகம் கொடுப்பது தான் உசிதம் என்று எண்ணினார்கள். அதையறிந்த இந்திரன், இப்படி இவன் நம்மிடமிருந்து தேசத்தையபகரித்து அஸுரர்களுக்கு அளித்திடுவான் என பயந்தான். உடனே வஜ்ராயுதத்தை எடுத்து விச்வரூபர் என்பவரின் மூன்று தலைகளையும் வெட்டினான். ஸோமபானம் செய்து வந்த தலை கபிஞ்ஜல் பக்ஷியாகவும், (சாதத்தை) உணவை சாப்பிடும் தலை தித்திரி பக்ஷியாகவும் ஸுராபானம் செய்யும் தலை,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கலவிங்க பக்ஷியாகவும் மாறியது. [அந்த ப்ரஹ்ம ஹத்தி பாபத்தை யமன் முன்பு, இந்திரன் கைகளை கூப்பி, தான் செய்ததாக ஒப்புக் கொண்டான். ஒருவருடம் வரை ப்ராயச் சித்தம் செய்து கொள்ளாமல் இருந்ததினால் இந்திரன் பயந்தான். உலகிலுள்ள ப்ராணிகள் இந்திரனை ப்ரஹ்மஹத்தி செய்தவன் என்று உரக்கக் கூறின. பிறகு அதற்கு பரிகாரம் செய்ய எண்ணி இந்திரன் பூமியினிடம் சென்று இந்த பரஹ்மஹத்தி தோஷத்தின் 1/3 பாகத்தை நீ ஏற்றுக் கொள் என வேண்டினான். அதற்கு பூமிதேவி மனிதர்கள் இஷ்டம் போல் குழி பறித்து என்னை உபத்ரவப் படுத்துகிறார்கள். ஒரு வருடத்திற்குள் தானாகவே புழுதியினாலோ, புல்முளைப்பதாலோ அக்குழி மூடி விட வேண்டும் என்று வரம் கேட்டாள். இந்திரனும் அவ்வரத்தையளித்தான். (வரத்தினால்) [அதனால் தான் பூமியில் தோண்டிய குழி நாளடைவில் தானாகவே மூடி விடுகிறது.] பூமிதேவியும் 1/3 பாகம் ப்ரஹ்மஹத்யா தோஷத்தை ஏற்றாள். [அந்த தோஷம் தான் பூமியில் ஒன்றும் முளைக்காத களர் பூமியாக ஆயிற்று.]

ஆகையால் சிரத்தையுள்ள ஆஹிதாக்னியானவன் ஊஷரபூமியில் வஸிக்கக்கூடாது. ஏனெனில் இந்த இடம் ப்ரஹ்மஹத்தி ஸ்வரூபம். பொதுவாக அந்த மாதிரி களர் பூமியில் எந்த கர்மானுஷ்டானமும் செய்தால் பலன் கொடுக்காது. அக்னியில்லாத இடத்தில் நெய்யினால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமம் செய்தால் எவ்வாறு வீணாகிறதோ அது போல் வீணாகும். [இந்த மாதிரி மண் உள்ள இடத்தில் வசிப்பது உகந்ததல்ல.]

பிறகு இந்திரன் மரங்களிடம் சென்று ப்ரஹ்மஹத்தியின் 1/3 பாகத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். அதற்கு மரங்கள் மனிதர்கள் இஷ்டம் போல் எங்களை வெட்டுகிறார் கள். அது திரும்பவும் முளைக்கவேண்டும் என்று வரம் கேட்டன. இந்திரன் அப்படியே வரமளித் தான். ஆகையால்தான் [மரங்களின் வெட்டின இடத்திலிருந்து நிறைய கிளைகள் முளைக்கின்றன. அவைகள் 1/3 பாகம் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை ஏற்றன. அந்த ப்ரஹ்மஹத்தி தோஷம்தான் மரங்களை வெட்டின இடத்தில் உண்டாகும் பிசினாக ஆயிற்று. ஆகையினால் இந்த பிசினை சாப்பிடக்கூடாது. இந்த பிசின் கலக்காத பெருங்காயத்தை உபயோகிக்கவும்]. பிறகு இந்திரன் ஸ்திரீகளின் சபையில் சென்று 1/3 பாகம் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான்.

அதற்கு அவர்கள் குழந்தை பிறக்கும் வரை சிற்றின்பத்தையனுபவிக்கவேண்டும் என்று வரம் கேட்டனர். இந்திரன் அப்படியே ஆகட்டும் என்று வரம் கொடுத்தான். ஸ்திரீகள் 1/3 பாகம் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை ஏற்றுக் கொண்டனர். [அந்த தோஷம்தான் ஸ்திரீகள் ரஜஸ் (மாத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடாய்) ஆக மாறியது. ஆகையால் மாத விடாய் காலத்தில் 3 நாள் வரை ஸ்திரீகளுடன் பேசக்கூடாது. உடன் அமரக்கூடாது. அவளுடைய அன்னத்தை சாப்பிடக்கூடாது. ஏனெனில் அவள் ப்ரஹமஹத்தி ஸ்வரூபமாக இருக்கிருள். சிலர் ஸ்திரீகளின் அலங்கார ஸாதனமான எண்ணெ ஏற்றுக் கொள்ள தகுந்ததல்ல என்று கூறுகிருர்கள். மாதவிடாய் காலத்தில் (3 நாள்) புருஷனுடன் சேர்ந்தால் பிறக்கும் குழந்தை கீழ்கண்டபடி குறைவு உள்ளதாக இருக்கும் என்று வேதம் கூறுகிறது.

[ஸ்த்ரீகள் முக்கியமாக கவனிக்க வேண்டியவை.

தூரமான ஸ்திரீயுடன் புணர்ந்தால் பிறக்கும் குழந்தைகள் வீணுன (அபவாதத்திற்கு) பழிக்கு ஆளாகும்.

அந்த ஸ்திரீயை காடுகளில் புணர்ந்தால் திருடன் பிறப்பான்.

வெட்கப்படுபவளை புணர்ந்தால் பேசுவதற்கு வெட்கப்படும் நாவன்மையற்ற குழந்தை பிறக்கும்.

அக்காலத்தில் ஸ்திரீகள் ஸ்நானம் செய்தால் ஜலத்தில் துர்மரணம் ஏற்படக்கூடிய குழந்தை பிறக்கும்,

எண்ணெய் தேய்த்துக் கொண்டால் சரும வியாதியுள்ள குழந்தை பிறக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சுவரில் சித்ரம் முதலியன அந்த ஸ்திரீ எழுதினால் தலை சொட்டையான குழந்தையும், அபம்ருத்யுள்ளதாக பிறக்கும்.

கண்ணுக்கு மை இட்டுக் கொண்டால் ஒற்றைக்கண்ணன் பிறப்பான்.

பல் தேய்த்துக் கொண்டால் சொத்தைப் பல்லுள்ள குழந்தை பிறக்கும்.

நகத்தைக் கிள்ளினால் சொத்தை நகமுள்ள குழந்தை பிறக்கும்.

புல் முதலியவைகளை செதுக்கினால் நபும்ஸகனை (அலி) குழந்தை பிறக்கும்.

கயிறு திரித்தால் கயிற்றினால் தூக்குப் போட்டுக் கொள்ளும் குழந்தை பிறக்கும்.

இலையினால் நீர் பருகினால் பைத்தியம் பிடித்த குழந்தை பிறக்கும்.

சட்டி போன்ற சுட்ட பாத்திரத்தால் நீர் பருகினால் (வாமனன்) குட்டையான பிள்ளை பிறக்கும்.

ஷை காரியங்களை செய்யாமல் மூன்று நாள் நியமங்களுடன் இருக்கவேண்டும்.

நீரை இருகைகளாலும் பருகலாம் அல்லது தூளையிடப்படாத பாத்திரத்தினால் பருகவேண்டும். இந்த நியமங்களை கடைப்பிடித்தால்தான் நல்ல குழந்தைகள் பிறக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்நாட்களில் இந்த நியமங்கள் பெரும் பாலும் அமல்படுத்தாமல் இருப்பதால்தான் ஸத்ப்ரஜை ஏற்படாமல், பெற்றோரையே வெறுக்கும் அல்லது அடக்கும் பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஆகையால் ஷ நியமங்களை முடிந்த வரை கடைபிடித்து, நல்ல சந்ததிகளை பெற்று குடும்பத்தின் கௌரவத்தை உயர்த்திக் கொள்ளவும்.]

அனுவாகம்—2 (त्वष्टाहतपुत्रः)

இதில் அக்னீஷோமிய யாகோத்பத்தி சொல்லப்படுகிறது. முன் அனுவாகத்தில் சொல்லிய படி விச்வரூபன் என்ற புத்ரனை இழந்த த்வஷ்டா வானவர் இந்திரன் இல்லாமல் ஸோம யாகம் செய்ய ஆரம்பித்தார். அந்த யாகத்தில் இந்திரன் தனக்கு அழைப்பை விரும்பினான். ஆனால் த்வஷ்டா, நீ எனது புத்ரனைக் கொன்றாய். ஆகையால் உன்னை அழைக்க மாட்டேன் என்றார். இந்திரனோவெனில் யாக சாலையில் பிரவேசித்து பலாத்காரமாக ஸோம ரஸத்தை பருகினான். பருகி மீதியிருந்த ஸோம ரஸத்தை எடுத்து த்வஷ்டா ''இந்திர சத்ரு வர்த்தஸ்வ' इन्द्रशत्रुवर्धस्व என்று சொல்லி ஆஹவானியாக்னியில் ஹோமம் செய்து முடித்தார். இவ்வாறு செய்து முடித்ததால் தான் वृत्रस्य விருத்ராசுரனுக்கு விருத்ரன் என்று பெயர் इन्द्रशत्रुवर्धस्व என்பதை ஸ்வரத்தை மாற்றி உச்சரித்ததால் ஹோமத்தினால் உண்டாகும் புருஷனுக்கு இந்திரன் சத்ருவாக ஆனான். த்வஷ்டா இந்திரனுக்கு ஒரு சத்ருவை உண்டாக்கி தனது புத்ரனை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொன்றதற்கு பழி வாங்க வேண்டுமென்று எண்ணி இந்திரனை நீக்கி மீதி தேவர்களை வைத்துக் கொண்டு ஸோம யாகம் செய்தார். அதில் இந்திரனுக்கு சத்ரு உண்டாகட்டும் என்ற பொருளில் इन्द्रशत्रुः என்று ஸம்ஸ்க்ருத பதத்தை உச்சரித்தார். இந்த சொல் தத் புருஷஸமாஸப் படி அமைந்தால் கடைசி எழுத்து உதாத்த ஸ்வரத் தில் இருக்க வேண்டும். இதற்கு மாறுக த்வஷ்டா முதல் எழுத்தை உதாத்த ஸ்வரமாக (इन्द्रशत्रुः) சொல்லி ஹோமம் செய்து முதல் எழுத்து உதாத்தமாக இருந்தால் बहुव्रीहि ஸாமாஸ முறைப் படி தான் அமையும். அப்பொழுது இந்திரன் எவனுக்கு சத்ருவாக ஆவானோ அப்படிப்பட்டவன் உண்டாகட்டும் என்று பொருள் கிடைக்கிறது. [இப்படி உண்டானவன் தான் வ்ருத்ரன். ஸ்வரம் தவறியதால் இந்திரனுக்கு சத்ரு ஏற்படாமல் இந்திரனால் கொல்லக் கூடியவனுக வ்ருத்ரன் உண்டானுன். இந்த ஸம்பவத்திலிருந்து வேத மந்திரங்களை உச்சரிக்கும் போது எழுத்துக் களையும், ஸ்வரத்தையும் குருமுகமாக சரியானபடி உச்சரிக்கத் தெரிந்துக் கொண்டு மந்திரங்களை சொல்ல வேண்டும். இல்லாவிடில் மேற்கூறிய சம்பவத்தில் போல் பொருள் வேறுபட்டு விபரீத பலனையும் அளிக்க நேரிடும்.]

அந்த உண்டான புருஷன் அக்னி, ஸோமன் இருவரையும் தன் வாயினுள் இடது, வலது புறங் களில் வைத்து தனது பற்களால் கடித்தான். அந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வ்ருத்ரன் அம்பு எய்தும்தூரம் தினமும் நாலு திசைகளிலும் வளர்ந்தான். இவ்வாறு வளர்ந்து கொண்டு கடைசியில் மூவுலகங்களையும் வியா பித்துக் கொண்டான். அதைப் பார்த்து பயந்த இந்திரன் ப்ரஹ்மாவிடம் சென்று "எனக்கு எதிரி உண்டானுன்" என்று கூறினுன். ப்ரஹ்மாவும் மந்திர ஜலத்தினுல் வஜ்ராயுதத்தை அலம்பி இந்திரனிடம் கொடுத்து இந்த அஸ்திரத்தால் சத்ருவை கொல் என்று கூறினுர். அந்த வஜ்ராயு தத்துடன் இந்திரன் விருத்ராசுரனை நோக்கி வந்தான். அப்பொழுது அக்னியும் ஸோமனும் விருத்ரனைக் கொல்லாதே, நாங்கள் இருவரும் வ்ருத்ரனின் வாயினுள் இருக்கிறோம் என்றனர். அதற்கு இந்திரன் நீங்கள் என்னை சேர்ந்தவர்கள். ஆகையால் என்னிடம் வாருங்கள் என்ருன். அவர் கள் யாகத்தில் ஹவிர் பாகம் தரும்படி இந்திரனி டம் கேட்டனர். இந்திரன் அவ்விருவருக்கும் பூர்ண மாஸ யாகத்தில் 11 கபாலங்களில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட அக்னீஷோமீய புரோடச ஹவிஸ்ஸை அவர்கள் பாகமாகக் கொடுத் தான். பிறகு அக்னி ஷோமர் இருவரும் நாங்கள் இருவரும் விருத்ராசுரனின் கடைவாய் பற்களால் நசுக்கப்பட்டுள்ளோம். ஆகையால் வெளியில் வர முடியவில்லை என்றனர். அதைக் கேட்ட இந்திரன் தன்னிடமிருந்து சீதஜ்வரம், உஷ்ண ஜ்வரம் இரண்டையும் உண்டாக்கி விருத்ராசுரனை நோக்கி ஏவினுன். ஷி ஜ்வர உற்பத்தியை அறிந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வன் ஷி ஜ்வரத்தால் பாதிக்கப்படுவதில்லை. ஜ்வரத்தால் பீடிக்கப்பட்ட விருத்ராசுரன் வாயைத் திறந்து கொட்டாவி விட்டான். [இன்றும் உலகில் ஜ்வரம் வருமுன் கொட்டாவி ஏற்படும் பழக்கம் ஷி சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டது.] வாயைத் திறந்தவுடன் அக்னியும் ஸோமனும் வெளிவந்தனர். உடனே ப்ராணவாயு, அபானவாயு இருவருமே விருத்ராசுரனை விட்டு வெளியேறினர். ப்ராணனுக்கு தக்ஷன் என்றும் அபானனுக்கு க்ரது என்றும் பெயர். ஆகையால் [இன்றும் வைதிககர்ம மத்தியில் கொட்டாவி விடுபவன் ''मयिदक्षक्रतू'' என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதால் வெளியேறிய ப்ராணன், அபாணன் இரண்டையும் தன்னிடம் வைத்துக் கொள்கிறான். பூர்ண ஆயுஸ்ஸையும் அடைகிறான்.] இதற்கு மேல் தர்சபூர்ணமாஸேஷ்டியின் ஆஜ்யபாக மந்திரங்களை வ்யவஸ்தை செய்கிறார். வ்ருத்ரன் இருள் போன்றவன். பௌர்ணமியன்று நிலா வெளிச்சத்தால் அழிக்கப்படுகிறான். ஆகையால் பௌர்ணமாஸ ஆஜ்யபாக யாகங்களுக்கு ''वार्त्रघ्नी'' மந்திரங்களை (வ்ருத்ரஹனன சப்தம் பொருந்தியது) சொல்ல வேண்டும். அமாவாசையன்று இருள் விருத்தியடைவதால் 'वृधन्वती' மந்திரங்களை (वृध சப்தம் பொருந்தியது) சொல்ல வேண்டும் பிறகு இந்திரன் வஜ்ராயுதத்தையெடுத்துக் கொண்டு வ்ருத்ராசுரனை கொல்ல வந்தான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அப்பொழுது த்யாவாப்ருத்வி (द्यावापृथिव्यौ) பூலோகமும் விண்ணுலகமும், விருத்ராசுரனை கொல்லாதே, அவன், பூமி முதல் மேல் உலகம் வரை வியாபித்திருப்பதால், எங்களை அண்டி இருக்கிருன் என்றன. எங்களுக்கு வரம் கொடுத்தால் கொல்ல அனுமதிப்போம் என்றனர். மேல் உலகம் நக்ஷத்ரங்களால் அலங்கரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற வரம் கேட்டது. பூமி மனிதன், பசுக்கள், பக்ஷிகள், மரங்கள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற வரம் கேட்டது. அவ்வாறே இந்திரன் வரங்களை கொடுத்துவிட்டு அவர்களின் அனுமதி பெற்று வ்ருத்ராசுரனை வஜ்ராயுதத்தால் கொன்ருன்.

பிறகு அக்னீஷோமீய புரோடாசத்தின் தேவதைகளின் புகழ்ச்சி கூறப்பட்டுள்ளது— விருத்ராசுர வதத்திற்கு பிறகு தேவர்கள் அக்னி ஸோமன் இருவருரையும் எங்களுக்கு ஹவிர் பாகத்தை எடுத்து வாருங்கள் என்றனர். அதற்கு அவ்விருவரும் வெகுநாள் வரை விருத்ராசுரனின் வாயிலுள் அடங்கியிருந்ததால் தேஜஸ் இழந்தவர்களாக இருக்கிறோம், அதை அடையவேண்டுமென்றனர். அந்த தேஜஸ் வ்ரத்ரனிடமே உள்ளது என்றனர். எல்லோருக்கும் நண்பன் பசுமாடுதான் என்று தீர்மானித்து தேஜஸ்ஸை எடுத்து வர வ்ருத்ரனிடம் அனுப்பினர். அப்பசு வரம் கேட்டது. இருவரின் தேஜஸ்ஸும் என்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னிடமே இருக்கட்டும், நானே வைத்துக் கொள்வேன். அவ்வப்பொழுது என்னிடமிருந்து தேஜஸ்ஸைப் பெற்று அனுபவித்துக் கொள்ளட்டும் என்றது. அந்த வரம் கொடுக்கப்பட்டது. பசுவும் விருத்ரனிடமிருந்து அக்னி ஷோமர்களின் தேஜஸ்ஸை எடுத்து வந்து தன்னிடமே வைத்துக் கொண்டது.

அக்னியின் தேஜஸ் நெய், ஸோமனின் தேஜஸ் பால். இவ்விரண்டும் யாகத்திற்கு தேவைப்படும் போது பசுவிடமிருந்து பெற்று ஹவிஸ்ஸாக அளிக்கப்படுகிறது. [இதனுல்தான் உலகிலும் பசு விடமிருந்து அவ்வப்பொழுது பால், நெய் இவை களையடைந்து போஜனம் செய்யப் படுகிறது. இதை அறிந்தவன் தேஜஸ்வியாக ஆவான்.]

இந்த பௌர்ணமாஸ யாகம் ப்ரஹ்மா ஸ்ருஷ்டித்ததால் ப்ரஹ்மா ஸம்பந்தமுள்ளது. இந்திரன் அக்னி ஷோமர்களை வ்ருத்ரனிடமிருந்து மீட்டு ஹவிர்பாகம் கொடுத்ததால் இந்திர சம்பந்த முள்ளது. அதனுல்தான் ப்ரஹ்மா தேவர்களுள் ஜ்யேஷ்டனுன இந்திரனை தன தான்யங்களால் செல்வந்தனுக ஆக்கி, நன்கு வஸிக்கும்படி செய்தார். [ஆகையால் இன்று உலகிலும் மனிதர்கள் ஜ்யேஷ்டபுத்ரனை வாழ்நாள் (ஜீவனம்) முழுவதும் செல்வத்தோடு இருக்கும்படி செய்கிருர்கள்.]

அனுவாகம்—3 (इन्द्रं वृत्रंजघ्निवांसं)

இதில் वैमृधेष्टियும், सान्नाय्ययागமும் சொல்லப்படு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிறது. இந்திரன் விருத்ராசுரனை கொன்றதால் அந்த அசுரனைச் சேர்ந்தவர்கள் இந்திரனைச் சூழ்ந்து கொண்டு பயமுறுத்தினார்கள். சத்ருக்கள் அழித்த இந்திரனுக்கு இந்த யாகம் விதிக்கப் பட்டிருக்கிறது. தேவதை (சத்ருவை அழித்த) வைம்ருதனான இந்திரன் 11 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் ஹவிஸ். பூர்ண மஸேஷ்டியில் ப்ரதான யாகங்களுக்கு பிறகு செய்யவேண்டும். இதனால் யஜமானனுடைய எதிரிகள் அழிந்து விடுகிறார்கள்.

सान्नाय्ययागविधिः—விருத்ராசுரனை கொன்றதால் பயந்த இந்திரன் இதர தேவதைகளிடமிருந்து வெகு தூரம் விலகிச் சென்றான். மேலும் இந்திரனின் சாமர்த்தியமும் குறைந்துவிட்டது. தர்சேஷ்டியில் ऐन्द्राग्नपुरोडाशयागः, விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய அர்த்தவாதம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்திரன் ப்ரஹ்மாவிடம் சென்று இந்திரியங்களின் சாமர்த்தியம் நெல் முதலிய பயிர் ரூபமாக எடுத்துக் கூறி இழந்த இந்திரியத்தை திரும்பப் பெற வேண்டினான்.

ப்ரஹ்மாவானவர் பசுக்களிடம் இந்திரனுக்கு இந்திரிய ஸாமர்த்தியத்தை அளிக்கும்படி கூறினார். பசுக்கள் ஓஷதி (பயிர்)களிடமிருந்து வீர்யத்தை தங்களிடம் வரவழைத்து கொண்டனர். பிறகு தன்னிடமுள்ள வீர்யரூபமான பாலை இந்திரனுக்காக சுறந்தன. பசுக்கள் (பயிர்கள்) ஓஷதிகளிட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மிருந்து வீர்யத்தை நன்கு தன்னிடத்தில் கொண்டு வந்து வைத்துக் கொண்டதால் அதற்கு 'सान्नाय्य' என்று பெயர். பிறகு இந்திரன் காய்ச்சாத பால் வயிற்றில் ஜீரணமாகவில்லையென்று ப்ரஹ்மா விடம் கூறினான். ப்ரஹ்மா பாலை பக்வம் செய்து கொடுங்கள் என பசுக்களுக்கு உத்தரவிட்டார். பக்வமான பால் வடிவில் இந்திரிய சாமர்த்தியம் இந்திரன் வயிற்றில் ஸ்திரமாக நின்றது. மறுபடியும் இந்திரன் ஓஷதிகளின் ரஸமான பால் பக்வப் படுத்தப்பட்டு எனக்கு கொடுத்தாலும் அவைகளால் எனக்கு திருப்தி ஏற்படவில்லை என்றான். ப்ரஹ்மாவும் பாலில் உரை குத்தும்படி கூறினார். உரை குத்தி தயிர் தயாரிக்கப்பட்டது. இந்திரனுக்கு அதனால் திருப்தி ஏற்பட்டது. இந்த உபாக்யான மூலம் இந்திரனை தேவதையாகக் கொண்ட பால், தயிர் இரண்டையும் ஹவிஸ்ஸாகக் கொண்ட யாகங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவைகளுக்கு सान्नाय्ययागங்கள் எனப் பெயர். யாகத்திற்கு अवदान (எடுத்தல்) செய்யும் பொழுது முதலில் பால், பிறகு தயிர் என்ற முறையில் எடுக்க வேண்டும். அதனால் யஜமானனுக்கு வீர்யஸம்பத்து கிடைக்கிறது. பூதீகக் கொடியினால் (ரஸத்தால்) உரை குத்தினால் ஸோம தேவதையைச் சேர்ந்து விடும். பெரிய இலந்தைப் பழ ரசத்தை உரை குத்தினால் அசுரர்களைச் சேர்ந்து விடும். ஆகையால் தயிரால் உரை குத்த வேண்டும். அது இந்திரனைச் சேரும். விருத்ராசுர வதத்திற்கு பிறகு, தான் தவறு செய்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தாக நினைத்து இந்திரன் தேவதைகளை விட்டு வெகு தூரம் சென்று விட்டான். பிரஹ்மா யார் இந்திரனை தேடி கண்டு பிடிக்கிறார்களோ அவர்களுக்கு முதலில் ஹவிர்பாகம் கொடுக்கப் படும் என அறிவித்தார். பித்ரு தேவதைகள் முதலில் இந்திரனைக் கண்டு பிடித்தனர்.

தேவர்கள் சிறந்த செல்வமான இந்திரன் எங்களுடன் கூட இருக்கட்டும் என்றனர். [அதனால் அமாவாசையன்று முதலில் பித்ருயக் யமும் மறு நாள் பிரதமையில் தேவதைகளுக்கும் இஷ்டியும் நடைபெறுகிறது.] சிலர் ஸான்னாய்ய ஹவிஸ் எல்லா தேவதைகளைச் சேர்ந்தது என்றனர். ஆனால் இந்திரன் தான் सान्नाय्य ஹவிஸ் ஸுக்கு தேவதை என தீர்மானம், அதனால் அமா வாஸ்யா என அந்த தினத்திற்கு பெயர்.

அனுவாகம்—4 (ब्रह्मवादिनोवदन्ति सः)

சில தர்சபூர்ணமாஸேஷ்டி ஸம்பந்தப்பட்ட காம்யேஷ்டிகள் இந்த அனுவாகத்தில் கூறப்பட் டுள்ளன. பூர்ணமாஸ இஷ்டியில் வைம்ருத இந்தி ரனுக்கும், அமாவாஸ்யா யாகத்தில் தயிர் ஹவிஸ் ஸையுடைய இந்திரனுக்கும் ஹவிர்பாகம் உள்ள தால் இரு இஷ்டிகளுமே இந்திரனோடு கூடியவை என அறிந்து இஷ்டிகளை அனுஷ்டிப்பவன் செல்வந்தனாக ஆகிறான். காம்யேஷ்டியை விதிப் பதற்கு ஓர் உபாக்யானம் கூறப்படுகிறது. தேவர் கள் செய்வதைப் போலவே அசுரர்களும் யாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்து வெற்றிப் பெற்றனர். இதைக் கண்ட தேவர்கள் அசுரர்களை ஏமாற்றி கீழ்க்கண்ட காம்ய இஷ்டிகளை பௌர்ணமாஸ இஷ்டியுடன் தொடர்ந்து செய்து அசுரர்களை வென்றனர். ஆகையால் சத்ரு உள்ள யஜமானன் கீழ்க்கண்ட மூன்று யாகங்களை, பௌர்ணமாஸேஷ்டியை செய்து முடித்தவுடனேயே செய்தால் சத்ருவை வெல்வான். யாகம் 1. அக்னுவிஷ்ணு தேவதை 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் யாகம் 2. சரஸ்வதி தேவதை, சரு (அன்னம்) ஹவிஸ் யாகம் 3. ஸரஸ்வான் தேவதை சரு ஹவிஸ் இந்த மூன்று யாகங்களையும், பௌர்ணமாஸேஷ்டியை முடித்துக் கொண்டு தொடர்ந்தாற் போல் செய்தால் சத்ருநாசம் ஏற்படும். இதனுல் சத்ருவின் யக்ஞம், செல்வம் எல்லாம் அழிகிறது. காம்யேஷ்டி சொல்லப்படுகிறது. சத்ரு பாதையுள்ளவன் பௌர்ணமாஸேஷ்டியை மாத்திரம் செய்யவும். பௌர்ணமாஸ யாகம் வஜ்ராயுதம் போன்றது. அதனுல் சத்ருநாசம் ஏற்படும். அமாவாஸ்யா யாகம் செய்யக் கூடாது, वृधन्वती மந்திரம் இருப்பதால் சத்ரு வளர்ச்சியடைவான்.

சத்ருவை வளராமல் தடுக்க தர்சேஷ்டியை அனுஷ்டிக்காமல் பௌர்ணமாஸேஷ்டியை மட்டும் அனுஷ்டானம் செய்யவேண்டும் என்பது கருத்து. தர்சபூர்ணமாஸேஷ்டிகளை சில குண விசேஷங்களுடன் செய்தால் ஏற்படும் பலன்கள் சம்பந்தமான விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காம்யேஷ்டி—ஸாகம் ப்ரஸ்தாயீயயாகம் (साकं प्रस्थायीय:) அமாவாஸ்யேஷ்டியன்று பசுரூப பலனை கருதி செய்யவேண்டியது. தர்சேஷ்டி செய்யும் பொழுது நான்கு ப்ராஹ்மணர்கள் இரண்டு பால் நிறம்பிய பானைகளையும், இரண்டு தயிர்க் குடங்களையும் எடுத்துக் கொண்டு அத்வர்யு ஹோமம் செய்யப் போகும் பொழுது அவருடன் சென்று தயிர் பால் முழுவதையும் அத்திக்கட்டையினால் செய்த பெரிய பாத்திரத்தின் மூலம் அத்வர்யு தர்சேஷ்டி ஹவிஸ்ஸான பால், தயிர் ஹவிஸ்ஸை ஹோமம் செய்யும் பொழுது அவரை பின் பற்றி நான்கு ப்ராஹ்மணர்களும் பால், தயிர் முழுவதையும் ஹோமம் செய்ய வேண்டும் [உலகில் அரசனுக்கு வரியை சிறிய தொகையாக கட்டினால் அரசனும் திருப்தியடையமாட்டான். பிறருக்கும் கொடுக்க முடியாது. நிறைய வரி கட்டினால் அரசனும் திருப்தியடைவான். பிறருக்கும் கொடுக்க முடியும்] அது போல் இந்திரனுக்கு நிறைய பாலும் தயிரும் ஹவிஸ்ஸாக அளிப்பதால் திருப்தி யடைந்த இந்திரன் யஜமானனை, நல்ல ஸந்ததி, நிறைய பசுக்கள் இவைகளை அளித்து திருப்தி செய்கிறான்.

(सान्नाय्यं) பால், தயிர் யாகம் தர்சேஷ்டியில் விதிக்கப்பட்டிருக்கிறது. செய்யும் யஜமானின் யோக்யதைக்கு தகுந்தபடி அந்த யாகதேவதை மாறுபடுகிறது 1. மூன்று வேதங்களையறிந்தவன் 2 க்ஷத்ரியன், 3. கிராமத் தலைவன் ஷி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்று பேரும் गतश्रिय: கதஸ்ரீக்கள் எனப்படுகிருர்கள் ஷ மூன்று பேர்களுள் ஒருவர் யஜமானனுக இருந்தால் தர்சயாகத்தில் மஹேந்திரன் தேவதை.

மற்ற யஜமானர்களுக்கு இந்திரன் தேவதை அவரவர்களுக்குரிய தேவதையை விட்டு பிற தேவதையைக் குறித்து யாகம் செய்தால் பிறருடைய தேவதை இவனுடைய யாகத்தை ஏற்காது. இவனுல் விடப்பட்ட இவனுடைய தேவதையின் சாபத்திஞல் தரித்ரனுக ஆவான் (अगतश्री:). மேற்படி மூன்று பேர்களைத் தவித்த யஜமானன் ஒருவரும் இந்திரனை தேவதையாகக் கொண்டு தர்சேஷ்டியை அனுஷ்டிக்க வேண்டும். அப்பொழுது அந்த தேவதையின் பிரஸாதத்திஞல் தனவானுக ஆவான். अगतश्री யானவன் ஒரு வருஷம் வ்ராதபதீஷ்டி செய்தால் பிறகு இஷ்டம் போல் தர்சேஷ்டியில் இந்திரனையோ மஹேந்திரனையோ தேவதையாகக் கொண்டு யாகம் செய்யலாம்.

அனுவாகம்—5 (नासोमयाजी सन्नयेन्)

இதில் सान्नाय्य யாகத்திற்கு அதிகாரி யார் என்பதை விவரிக்கிறது. (अभ्युदितेष्टि) அப்யுதிதேஷ்டி முதலிய இஷ்டிகளும் கூறப்பட்டுள்ளன. ஸோமலதை ஓஷதியாகும், பால் ஓஷதி ரஸமாகும். ஸோம யாகம் செய்யாதவன் ஓஷதி ரஸமான பாலை அடையாததால் 'सान्नाय्यं' பால், தயிர் யாகம் செய்தால் விதிப்படி செய்யப்படாத ஆஹுதியாகி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீஞுகி விடும். ஆகையால் ஸோம யாகம் செய்த வன் தான் सान्नाय्य செய்யத் தகுந்தவன்.

அப்யுதிதேஷ்டி சொல்லப்படுகிறது. தர்சேஷ்டி யென்பது அமாவஸ்யையன்று காலை அக்னி ஹோத்ரம் ஆனவுடன் இஷ்டிக்காக மறுபடியும் ஆஹவனிய அக்னியை ப்ரணயனம் செய்து கன்று களை பசுக்களிடமிருந்து பிரித்து பசுக்களை மேய் வதற்கு ஓட்டி விட்டு மாலையில் மாடுகள் வீடு திரும்பியவுடன் விதிப்படி மந்திரத்துடன் பால் கறந்து காய்ச்சி; தயிரால் உரை குத்தி மறுநாள் காலையில் ப்ரதமையன்று மந்திரத்துடன் பால் கறந்து ஷி தயிரையும், பாலையும் இந்திரனுக்கு ஹவிஸ்ஸாகவும்; புரோடாசத்தை அக்னிக்கு ஹவிஸ்ஸாகவும், ப்ரதமையன்று யாகம் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்யாமல் சதுர்தசியன்றே காலை யில் அமாவாசையென்ற தவருன எண்ணத்தில் தர்சேஷ்டிக்காக ப்ரணயனம் செய்து மாலையில் விதிப்படி பால் கறந்து உரை குத்தி மறுநாள் அமாவாசையன்று விடியற்காலம் 4 மணிக்கே இஷ்டிக்கு வேண்டிய நெல் எடுத்து குத்தி, அரிசி யாக தயாரித்தவுடன், அது சதுர்தசியின் இரவானதால் சூரிய உதயத்திற்கு முன் 2 நாழிகை யளவில் சந்திரன் தெரியும். அவ்வாறு தெரிந் தால் அன்று தர்சேஷ்டி செய்யக்கூடாது. ஆகையால் முதல் நாள் இரவு உரை குத்தி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தயாரான தயிரை இருபாகமாக ஆக்கி, பாதி தயிர் (அமாவாஸை) அன்று மாலையில் விதிப்படி பால் கறந்து காய்ச்சி உரைகுத்த உபயோகிக்கவும். புரோடாசத்திற்கு வேண்டிய அரிசி தயாராக இருப்பதால் அதை பெரியது, நடுத்தரமானது, சிறியது என பிரித்து நடுத்தரமான அரிசியை புரோடாசம் செய்து, தாதாவான அக்னி தேவதைக்கு அர்ப்பணம் செய்யவும். பெரிய அரிசியை முன்பு தயாரித்த தயிரில் சாதமாக சமைத்து ப்ரதாதாவான இந்திரனுக்கு யாகம் செய்யவும். சிறிய அரிசியை முன்பு தயாரித்த பாலில் சாதமாக ஆக்கி சிபிவிஷ்டரான விஷ்ணுவுக்கு யாகம் செய்யவும். இதுதான் अभ्युदितेष्टि எனப்படும். பிறகு வழக்கம் போல் பிரதமையன்று தர்சேஷ்டி செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் சந்திரன் யஜமானனுடைய ப்ரஜைகளுக்கும் பசுக்களுக்கும் கெடுதி உண்டு பண்ணுவான். சத்ருவையும் வளரச் செய்வான். இதைத் தவிர்ப்பதற்காக ஷி இஷ்டியை நைமித்திகமாகச் செய்யவேண்டும்.

ஸம்ருத்தியை விரும்புபவன் 'सुमना' என்ற இஷ்டியைச் செய்யவேண்டும். பூர்ணமாஸேஷ்டியை ப்ரதமையன்று செய்து முடித்து, மறுபடியும் அதே இஷ்டியை அன்று தொடங்கி த்விதீயையன்று செய்யவும். இது போலவே தர்சேஷ்டியையும் இரண்டு தடவை செய்யவும். இதற்கு பெயர் ஸுமனு என்று பூர்வபக்ஷம் 'செய்பவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு தடவை யாகம் செய்தால் யஜமானன் நாவன்மையற்றவனுக ஆவான், ஆகையால் ஒன்றைத்தான் செய்யவும். அதனுல் யஜமானன் சிறந்த பேச்சாளனுக ஆவான் என்று கூறினுன். ஸித்தாந்தம் செய்பவன் முதல் முறை செய்வது யஞ்யத்திற்கு ஆரம்பமாகும். இரண்டாவது ப்ரயோகத்தால் சரியான யாகம் செய்கிருன். இதனுல் தேவலோகம் மனுஷ்யலோகம் இரண்டையுமே ஜயிக்கிருன். மேலும் பல யாகங்களைச் செய்யவல்லவனுக ஆவான் என வேதம் கூறுகிறது. உலகில் செல்வம் நிறைந்தவனுக ஆவான்.

தாக்ஷாயணயக்ஞம் (दाक्षायणयज्ञ:) ஸ்வர்கத்தை விரும்புபவன் செய்யவேண்டும். முன்போல் பௌர்ணமாஸேஷ்டி இரண்டு தடவை அமாவாஸ்யேஷ்டி இரண்டு தடவை செய்யவும். சிறு மாறுதல் உள்ளது. முதல் பௌர்ணமியேஷ்டியில் 1. அக்னி தேவதை 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ், என்று ஒரு யாகம். 2. அக்னிஸோம தேவதை - 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற ஓர் யாகம். மொத்தம் இரண்டுதான். இரண்டாவது தடவை செய்யும் பௌர்ணமாஸ யாகத்தில் முதலில் ஆக்னேய யாகம், இந்திரன் தேவதை, தயிர் ஹவிஸ் என இருயாகங்கள் தான் உண்டு. பிறகு அமாவாஸ்யேஷ்டியில் - முதல் தடவை செய்யும் ப்ரயோகத்தில் ஆக்னேய யாகம், மேற்படி ஐந்திராக்ன

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகம். (இந்திராக்னி தேவதைகள், 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ்) என இருயாகங்கள், இரண்டாவது தடவையில் ஆக்னேய யாகம், மைத்ராவருண யாகம், மித்ராவருணர்கள் தேவதை, ஆமிக்ஷா ஹவிஸ், என இருயாகங்கள், எந்த யஜமானன் இந்த இஷ்டியை அனுஷ்டிக்கிருனே, அவன் சீக்கிரமே தேவர்களுக்கு சமமாக போக்ய வஸ்துக்களை அடைகிருன். இவ்வாறு ச்ரேயஸ்ஸை அடைகிருன்.

4. ஷ யாகத்தை பிறரைவிட தன்னை உயர்ந்தவனுக ஆக்கிக் கொள்ள விரும்புபவன் செய்யவும். செய்யும் யாகத்தில் குறைபாடுகள் இருந்தால் பாபியாக ஆவான். ஏற்றமோ, தாழ்வோ இல்லாமல் செய்தால் பிற யஜமானர்களுடன் சமமாக ஆவான். பிற யஜமானர்களைக் காட்டிலும் உயர்வை விரும்புபவன் மேற்சொன்ன தாக்ஷாயணயக்ஞம் (दाक्षायणयज्ञः)த்தை செய்யவும். சரியாக செய்தால் உடனே புண்யவானுக ஆவான். குறைபாடு ஏற்பட்டால் மரிக்க நேரிடும். குறைபாடுகளை நீக்க கீழ்க்கண்ட நியமங்களை கடைப்பிடிக்கவேண்டும்.

1. பொய் சொல்லக் கூடாது. 2. மாம்ஸம் சாப்பிடக்கூடாது. 3. ஸ்திரீயுடன் சேரக் கூடாது. 4. வேஷ்டி வெள்ளாவியில் சுத்தம் செய்யக்கூடாது. உத்கிருஷ்டமான தேவர்கள் போன்றவர்கள் ஷ பொய் சொல்லுதல் போன்றவைகளை செய்வதில்லையல்லவா.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—6 (एषवैदेवरथः)

இந்த அனுவாகத்தில் ஸோமயாகத்திற்கு முன் தர்சபூர்ணமாஸேஷ்டி செய்வது சிறந்தது என விளக்கப்படுகிறது. தர்சபூர்ணமாஸேஷ்டி தேவலோகத்திற்கு செல்ல ரதம் போன்றது. ரதம் சென்றதினுல் கல், முட்கள் அகற்றப்பட்டு தேய்ந்த அடிச்சுவடில் செல்வது எவ்வளவு சுலபமோ அவ்வளவு சுலபம் தர்சபூர்ணமஸேஷ்டியைச் செய்வது பிறகு ஸோமம் செய்வது.

1. தர்சபூர்ணமஸேஷ்டியின் சிறப்பை பல வாருக எடுத்து கூறப்பட்டுள்ளது. ஷ இஷ்டிகளுள் அமாவாஸ்யேஷ்டிகள் உடலின் உறுப்புகள் போன்றவை. பூர்ணமாஸேஷ்டிகள்' உறுப்புகள் சேருமிடமான முழங்கை போன்றவை. இவ்வாறு அறிந்து அனுஷ்டானம் செய்தால் நன்கு அனுஷ்டானம் செய்தவனுக ஆவான். ஷ இஷ்டிகள் கண் போன்றவை. இவைகளைச் செய்தால் இவைகளின் மூலம் ஸ்வர்கலோகத்தைப் பார்ப்பது போலாகும். இவைகள் (இஷ்டிகள்) தேவர்களின் பராக்ரமமாகும். இதையறிந்து செய்பவன் ஜயத்தையடைகிருன். இந்த இஷ்டிகள் தேவலோகம் செல்ல மார்க்கமாகும். இதையறிந்து அனுஷ்டிப்பவன் தேவலோக மார்க்கத்தை அடைகிருன். இவை குதிரை போன்றவை. இவைகள் மூலம் யஜமானன் தேவதைகளுக்கு ஹவிர்பாகத்தை சுமந்து செல்கிருன். மேலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவைகள் தேவர்களின் முகமாகும். இதையறிந்து அனுஷ்டிப்பவன் நேரிடையாகவே தேவர்களின் வாயில் ஹோமம் செய்தவனாக ஆவான். முறையே அக்னிஹோத்ரம் செய்து, தர்சபூர்ண மாஸேஷ்டிகளையும் செய்தால் அவன் ஸோம யாகம் செய்த பலனையடைகிறான். தேவதைகள் ஸோம யாகத்தினால் ஏற்பட்ட திருப்தியை அடைகிறார்கள். ஏனெனில் முறையாக அக்னி ஹோத்ரம் செய்து தர்சபூர்ணமாஸேஷ்டிகளையும் செய்து வருபவன் அடுத்தாற்போல் ஸோமயாகம் செய்வான் என எண்ணி திருப்தியடைகிறார்கள்.

[எந்த தினத்தில் ஸூர்யன் மாத்திரம் தெரிகிறானோ, சந்திரனும் சூரியனுடன் செல்கிறானோ, அது அமாவாஸ்யை எனப்படும். எந்த தினத்தில் சந்திரன் பூர்ணமாக தெரிகிறானோ, அது பூர்ணிமா.] இவை பரிசுத்தமானவை. இதையறிந்து செய்பவன், சுத்தனாக யாகம் செய்தவனாக ஆவான்.

[இந்த இரண்டு திதிகளும் பரிசுத்தமானதால் யஜமானன் இந்த தினங்களில் ஸ்திரீ ஸங்கமம் செய்யக்கூடாது.]

ஸோமராஜாவுக்கு (சந்திரன்) இரவுகள் பத்னிகளாக இருந்தன. ஸோமதேவன் அமாவாஸ்யை, பௌர்ணமாஸீ இரண்டு தினங்களிலும் அந்த இருவர்களிடமும் செல்லவில்லை. ஆனால் அவ்விரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வரும் பலாத்காரமாக ஸோமனை அனுபவித்தார் கள். அதனால் ஸோமனுக்கு (சந்திரன்) யக்ஷ்ம ரோகம் வந்தது. இவ்வாறு பத்னியின் மூலம் (ஜாயா) வந்ததால் அந்த ரோகத்திற்கு ஜாயேந்யம் என்று பெயர். இதையறிந்தவனுக்கு யக்ஷ்ம ரோகம் வராது. அதற்குரிய பரிஹாரம் செய்து ரோகம் நிங்கியது. அமாவாஸ்யை பௌர்ணமி என்ற இரண்டு பத்னிகளும் ஸோமனிடம் எங்கள் திதியில் தேவர்களுக்கு யாகம் செய்யப்பட வேண்டும் என்ற வரத்தைப் பெற்றன. ஆகை யினால்தான் இரண்டு பர்வாக்களிலும் இஷ்டிகள் செய்யப்படுகின்றன. இதையறிந்த மனிதர்களும் தங்கள் ஹவிர்பாகங்களை தேவர்களுக்கு அளிக் கிறார்கள். பக்ஷம் தோறும் இஷ்டி செய்யவேண்டு மென்பதை வலியுறுத்த [பொது நியாயத்தை வேதம் எடுத்துக் கூறுகிறது.]

பிராணிகள் ஆஹாரம் சாப்பிட்டு பசியை உடனேயே விரட்டின. மனிதனும் உணவினால் உடனேயே பசியை நீக்குகிறான். தேவர்கள் 15 நாட்களுக்கு ஓர் தடவை உணவையடைந்து பசியை அகற்றிக் கொள்ளுகிறார்கள். பித்ருக்கள் மாதம் ஒரு தடவை உணவை அடைந்து திருப்தி யடைகிறார்கள். பெரிய மரங்கள் வருடத்திற்கு ஒரு தடவை பழங்களைத் (தாங்குகின்றன) கொடுக் கின்றன. மரங்கள் திருப்தியடைந்ததன் அடை யாளமாக பழத்தை தருகின்றன. எவன் இதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறிகிருனே, அவன் பசியென்ற சத்ருவை வென்று அன்ன ஸம்ருத்தியுள்ளவனுக இருப்பான்]

அனுவாகம்—7 (देवावैनर्चित यजुष्यश्रयन्त)

ச்ரௌத கர்மாவில் அக்னியில் ஹோமம் செய்வதற்கு அக்னியை ஜ்வாலேவிட்டு எரியும்படி செய்வதற்காக 15 ஸமித்துகளை அக்னியில் வைக்கவேண்டும். அவைகள் இத்மகாஷ்டங்கள் எனப்படும். [ஸ்மார்த்த கர்மாவிலும் இவ்வாறு ஹோமத்தின் ஆரம்பத்தில் 15 ஸமித்துக்கள் அக்னியில் வைக்கப்படுகிறது. ஸ்மார்த்த கர்மாவில் மந்திரமில்லாமல் ஸமித்துக்களை மொத்தமாக வைக்கவேண்டும்.] யாகங்களில் ஒவ்வொரு ஸமித்தாக மந்திரம் சொல்லி வைக்கவேண்டும். அந்த மந்திரங்களுக்கு ஸாமிதேனீ ருக்குகள் எனப் பெயர். இந்த மந்திரங்கள் 2வது அஷ்டகம் 5வது ப்ரச்னத்தில் சொல்லப்பட்டுள்ளன.

இந்த அனுவாகத்தில் அந்த மந்திரங்களைச் சொல்லவேண்டிய முறை விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மந்திரங்களின் ஆரம்பத்தில் 'ஹிஂ' என்று சொல்லிவிட்டு பிறகு ருக்குகளை சொல்லவேண்டும். அதற்கு ஒரு உபாக்யானம் கூறப்பட்டுள்ளது. தேவர்கள் ருக்குகளிலும், யஜுர் மந்திரங்களிலும் திருப்தியடையவில்லை. அவர்கள் ஸாமகானத்தில்தான் திருப்தி அடைந்தார்கள். ஸாமிதேனீ மந்திரங்களின் ஆரம்பத்தில் 'ஹிஂ' என்று மூன்று தடவை சொல்லவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கானத்தின் ஆரம்பத்தில் 'ஹி' காரம் வருவதால் இதுவே ஸாமகானம் போல் ஆகும். தேவர்களும் திருப்தியடைவார்கள். ஸாமிதேனீ ருக்குகள் 11 தான் படிக்கப்பட்டிருக்கின்றன. இதையே ஆவிருத்தி செய்து 15 ருக்குகளாக ஆக்கவேண்டும். அதற்கு முறை சொல்லப்படுகிறது. 1. முதல் ருக்கை மூன்று தடவையும், கடைசி ருக்கை மூன்று தடவை சொல்லவேண்டும். நடுவிலுள்ள 9 ருக்குகளை ஒரு தடவை சொல்லவும். மொத்தம் 15 மந்திரங்கள் ஆகிவிடும். இவ்வாறு சொல்வது யாகத்தின் ஆரம்பத்தையும் கடைசியையும் சேர்த்து முடி பொடுவது போலாகும். முதல் ருக்கின் முன் பாதியின் 2ம் பாதத்தையும் 2ம் பாதியின் முதல் பாதத்தையும் மூச்சு விடாமல் சேர்த்து சொல்லவேண்டும்.

இது போல் ஸாமிதேனீ ருக்குகளை சொல்லும் முறையும் அதற்கு ஏற்படக் கூடிய சிறிய பலனும் சொல்லி மந்திரார்த்தங்கள் விளக்கப்பட்டுள்ளன. முதல் ஸாமிதேனீ ருக்கை மூச்சு விடாமல் சொல்லி, அடுத்த ருக்கின் முன் பாதியையும் மூச்சு விடாமல் சொல்லவேண்டும். இதற்கு தொடர்ச்சி யெனப் பெயர். இதனால் யஜமானன் பூர்ண ஆயுளை அடைவான். இந்த தொடர்ச்சியை யறிந்து ஹோதா மந்திரம் சொன்னால் சத்ருவை யஜமானன் வசப்படுத்தியவனாக ஆவான். மேலும் இந்த ஸாமிதேனீ ருக்குகள் ரிஷிகளால் கண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிடிக்கப்பட்டவை. ருக்குகளை பிணைத்துச் சொல்வதால் எஜமானன் பூர்ண ஆயுளை அடைவான் என வேதம் கூறுகிறது.

அனுவாகம்—8 (अयज्ञोवा एष:)

முந்திய அனுவாகத்தில் ஸாமிதேனீ ருக்கின் ஆரம்ப மந்திரம் விளக்கப்பட்டது. இந்த அனுவாகத்தில் மீதி ருக்குகள் விளக்கப்படுகின்றன. இஷ்டிகளில் ஸாமகானம் கிடையாது. ஸாமகானம் இல்லாத யாகம்-யாகம் இல்லையென வேதம் கூறுகிறது. அக்குறையை நீக்க ஸாமிதேனீ ருக்குகளில் अग्न आयाहि; என்ற மந்திரத்தையும் त्वासमिद्भिरंगिर: என்ற மந்திரத்தையும், बृहदग्ने सुवीर्यं, என்ற மந்திரத்தையும் சொல்லவும். இவை மூன்றும், ரதந்தரம், வாமதேவ்யம், ப்ருஹத் என்ற மூன்று ஸாமாக்களின் உருவங்களாகும். இதனுல் இஷ்டியும் ஸாமகானத்தையுடையதாக ஆகி யாகம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருளாக ஆகும். முன்பு அக்னி ஸ்வர்கலோகத்திலும் சூரியன் பூலோகத்திலும் இருந்தார்கள்.

தேவர்கள் அமிருதம் உண்பதால் வெளிச்சம் கொடுக்கும் சூரியனையே எதிர்பார்த்தனர். பூலோக வாசிகள் அன்னத்தை பக்குவம் செய்ய அக்னியை எதிர்பார்த்தனர். ஷெ இரண்டு லோகங்களும் கலக்கமுற்றிருந்தன. 'अग्न आयाहि' என்ற மந்திரத்தால் அக்னி பகவான் வரவழைக்கப்பட்டார். बृहदग्न என்ற ருக்கால் சூரியன் ஆகாயத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் நிலைநாட்டப்பட்டார். இவ்வாறு இரண்டு லோகங்களின் குழப்பமும் நீங்கியது விவரிக்கப் பட்டுள்ளது. இதனால் உலகில் அமைதி நிலவும்.

15 இத்ம ஸமித்துக்கள் எனக் கூறப்பட்டுள்ளது. ½ மாதத்தின் நாட்களுக்கு சமமாகும். வருடத்திற்கு 24 இஷ்டிகள் உண்டு. மொத்தம் 360 ஸமித்துக்கள் வருட நாட்களுக்கு சமமாக ஆகிறது. 15 ஸாமிதேனீ ருக்குகள் गायत्री சந்தஸ் கொண்டவை. ஒரு காயத்ரீ சந்தஸ் 24 அக்ஷரங்கள் கொண்டவை. 15 × 24 = 360 எழுத்துக்கள். இவ்வாறு வருட நாட்களுக்கு சமமான அக்ஷரங்கள் உள்ளன எனவும் கூறலாம். இங்கு சொல்லப்பட்டிருக்கும் நாட்கள் ஸாவன மாஸம் (யாக ஸம்பந்தமாக சொல்லப்படும் நாட்கள். மாதத்திற்கு சரியாக 30 நாட்களும், வருஷத்திற்கு 360 நாட்கள்.) त्वामग्ने समिद्भिः என்ற மந்திரத்தின் பெருமை உபாக்யான மூலம் விளக்கப்படுகிறது. ந்ருமேதர், பருச்சேபர் என்ற இரண்டு ருத்விக்குகள் ஸாமிதேனீ மந்திரங்களைப் பற்றி விவாதித்தனர். எவர் இந்த ஈரமான கட்டையில் அக்னியை உற்பத்தி செய்கிறாரோ அவர் ஷி மந்திரத்தில் சிறந்தவராக கருதப்படுவர் என தீர்மானித்தனர். ந்ருமேதர் ஷி மந்திரங்களை சொன்னார். கட்டையிலிருந்து புகை மாத்திரம் வந்தது. அக்னி வெளிப்படவில்லை. பிறகு ப்ருச்சேபர் என்பவர் அந்த மந்திரங்களை உச்சரித்தார். உடனே அந்த ஈரக் கட்டையில் அக்னி தோன்றியது. உடனே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ந்ருமேதர் பருச்சேபரை நீர் ரிஷி என்றழைத்தார். [மந்திரங்கள் ரிஷிகளுக்குதான் புலப்பட்டன.] மேலும் கேட்டார். இருவரும் சமமானவராக இருந்தும் நீ மாத்திரம் எதனுல் அக்னியை உண்டு பண்ணினுய் என்று, அதற்கு பருச்சேபர் கூறினுர். அந்த மந்திரத்தில் ''घृतेनवर्धयामसि'' என்ற பாகம் அக்னியின் தேஜஸ் என அறிவேன், நீர் அறியவில்லை. இதுதான் இருவருக்கும் வித்தியாசம் எனக்கூறினுர். ஆகையால் ஷெ மந்திரம் மிகவும் சிறந்தது. இதில் மற்றும் சில மந்திரங்களின் பெருமைகளும் கூறப்பட்டுள்ளன.

''अग्निंदूतंवृणीमहे'' என்பதின் சிறப்பு:—தேவர்கள் அக்னியை தூதராகவும், அசுரர்கள் உசநஸ் என்பவரை தூதராகவும் ஏற்றுக் கொண்டு ப்ரஹ்மாவிடம் சென்று, இருவருள் தூதராக இருக்கத் தகுந்தவர் யார் எனக் கேட்டனர். ப்ரஹ்மா மேற்படி மந்திரம் வாயிலாக அக்னியையே யோக்யமான தூதர் எனக் கூறி தனது முகத்தை திருப்பி கொண்டார். அதனுல் தேவர்கள் ஜெயித்தனர். அசுரர்கள் தோற்றனர். இவ்வாறு அறிந்து அனுஷ்டானம் செய்யும் யஜமானன் வெற்றி பெறுகிருன். சத்ரு தோல்வியுறுகிருன்.

மூன்று விதமான அக்னிகள் உள்ளன. தேவதைகள் 'हव्यवाहन:' ஹவ்யவாஹணன் என்ற அக்னியையும், 'कव्यवाहन:' கவ்யவாஹனன் என்ற அக்னியை பித்ருக்களும், 'सहरक्षा:' ஸஹரக்ஷஸ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்ற அக்னியை அசுரர்களும் தங்களுக்கென தேர்ந்தெடுத்தனர். பிறகு आर्षेयवरणं' கூறப்பட்டுள்ளது. யஜமானனுடைய प्रवरं சொல்ல வேண்டும். [இந்த கிரமத்தின்படி தான் உலகிலும் மனிதர்கள் தனக்கு அடுத்த ஸந்ததியை பரிபாலிக்கிறார்கள்.]

அனுவாகம்—9 (अग्ने सहाँ असीत्याह)

இதில் ப்ரவர மந்திரத்திற்கும் நிவின் மந்திரங்களுக்கும் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. ப்ரவர மந்திரத்தின் பொருள் அக்னியின் மஹிமையைக் கூறுவதாகும். நிவின் மந்திரத்தில் घृताहवन: என்று சொல்லின் விளக்கத்தில் அக்னிக்கு ஆஜ்யாஹுதி மிகவும் ப்ரியமானது என விளக்கப்பட்டுள்ளது. [அன்னம் முதலியவைகளை அக்னியில் ஹோமம் செய்தாலும், ஆஜ்யாஹுதி தான் அக்னி பகவானின் மிகப் பிரியமானது என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.] யக்ஞங்கள் நடப்பதற்கு அடிப்படை ஆதாரமாக அக்னி பகவான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை கொண்டு செல்வதால் अध्वराणां रथी என்றழைக்கப்படுகிறார். அந்தந்த யாகத்திற்குரிய தேவதைகளை (ஆவாஹனம்) ஆஹ்வான மந்திரம் மூலம் அழைக்கிறார் ஹோதா.

अग्निमावह என்று தொடங்கி அந்த யாக சம்பந்தப்பட்டுள்ள தேவதைகளை ஆஹ்வானம் செய்வார். அவைகளுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. 'आज्यपां आवह என்ற மந்திரத்தின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொருள் ப்ரயாஜ, அனுயாஜ யாக தேவதையான அக்னிக்கு ஆவாஹனம். ஆவாஹனம் செய்யப் பட்ட தேவதைகளின் மஹிமையும் அழைக்கப் பட்டுள்ளது. ஹவிஸ்ஸை சுமந்தும் செல்லும் அக்னியையழைத்துக் கவனமாக குறிப்பிட்ட தேவதைகளுக்கு ஹவிர் பாகத்தை சேர்க்கும்படி கூறப்பட்டுள்ளது. ஜுஹு, உபப்ருத் என்ற ஹோமஸாதன கருவிகளை 'अग्निर्होतावेत्त्वग्निः' என்ற அனுவாகத்தைச் சொல்லி கையில் எடுக்க வேண்டும்.

அதன் விளக்கம் கூறப்பட்டுள்ளது. அக்னி தேவர்களின் ஹோதா, என்றும் மனுஷ்யர்களான நாங்களும் ஹோம க்ரமத்தை அறிந்துள்ளோம். தேவதை யஜமானனுக்கு பலனை கொடுக்கட்டும். ஸ்தோத்ர ப்ரியர்களான மனிதர்களை துதிக்கிறோம். நமஸ்காரப்ரியர்களான பித்ருக்களை நமஸ்கரிக் கிறோம். யாகப்ரியர்களான தேவதைகளுக்கு யாகம் செய்கிறோம். ஏகாந்தர மந்திரத்தை உச்சரித்தால் யஜமானன் அக்னிகளால் சூழப்பட்டு இறக்க நேரிடும். ஜுஹு மாத்திரம் ப்ரதான மானது என்பதைக் காட்ட 'सुचमास्यस्व' எனக் கூற வேண்டும். இவ்வாறு சொல்வதால் அவரவர் களுக்கு உரிய பாகம் கிடைத்ததாக ஆகிறது.

அனுவாகம்—10 (त्रींस्तृचाननुब्रूयात्)

இந்த அனுவாகத்தில் (सामिधेनी) இத்ம காஷ்டங்களை அக்னியில் வைப்பதற்குரிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரங்களில் (பலனைக் கருதி செய்யக் கூடியதும்.) 'निमित्तं' ஏற்பட்டால் செய்யக் கூடிய மாறுதல்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

யஜமானன் க்ஷத்ரியனாக இருந்தால் 3 த்ருசங்கள் (3 ருக்குகள்) ஸாமிதேனீ மந்திரங்கள் சொல்லப்படவேண்டும். மீதி ப்ராஹ்மணர் முதலிய மூன்று பேரும் க்ஷத்ரியனுக்கு அனுகூலமாக ஆவார்கள். त्रिष्टुप्छन्दस् உள்ள ருக்கை கடைசியில் சொன்னால் பலம் கிடைக்கும். க்ஷத்ரியன் ப்ரஹ்மவர்சஸ்ஸை அடைய விரும்பினால் காயத்ரீ சந்தஸ் உள்ள ருக்கை கடைசியில் சொல்ல வேண்டும். யஜமானன் வைச்யனாக இருந்தால் 17 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்லவேண்டும். ஜகதீ சந்தஸ் உள்ளரிக்கை கடைசியில் சொல்ல வேண்டும். அதற்கு பலன் பசு ஸம்ருத்தி. நல்ல ப்ரதிஷ்டையை விரும்புபவன் 21 ருக்குகள் சொல்லவேண்டும். ப்ரஹ்மவர்சஸ்ஸை விரும்புபவன் 24 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்லவேண்டும். அன்னத்தை விரும்புபவன் 30 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்லவேண்டும். ப்ரதிஷ்டையை விரும்புபவன் 32 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்லவேண்டும். பசுஸம்ருத்தி விரும்புபவன் 36 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்ல வேண்டும். இந்திரியபலத்தை விரும்புபவன் 44 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்ல வேண்டும். பசுக்களை விரும்புபவன் 48 ஸாமிதேனீ ரிக்குகள் சொல்லவேண்டும். ஸோம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகத்தை விரும்புபவன் त्रिष्टुप्, जगती, சந்தஸ் உள்ள ரிக்குகளை சொல்லவேண்டும்.

அனுவாகம்—11 (निवीतंमनुष्याणां)

ஹோதாவுக்கு சில நியமங்களும், அத்வர்யு செய்யவேண்டிய ஆகார ஹோமங்களும் இதில் கூறப்பட்டுள்ளள. [பூணூலை நிவீதம் (தாவடம்) ஆகப்போட்டுக் கொள்வது மலம், மூத்ரவிஸர்ஜனம்போன்ற மனுஷ்யகர்மாவில் தான் சிறந்தது. பித்ருகார்யங்களில் ப்ராசீனாவீதம் அவசியம். தேவ கார்யங்களில் உபவீதமாக இருக்க வேண்டும்.] இது தேவதைகளின் அடையாளம் இது யஜமானனுக்கு விதிக்கப்பட்டது. ஹோதா (ருத்விக்) ஸாமிதேனீ மந்திரங்களைச் சொல்லும் பொழுது நின்று கொண்டிருக்க வேண்டும். ஸ்வர்க்க லோக ஜயம் ஆனுஷங்கிக பலனாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஹோதா யாஜ்யா மந்திரம் சொல்லும் பொழுது உட்கார்ந்து சொல்ல வேண்டும். க்ரௌஞ்சபக்ஷி த்வனி போல் உரக்கச் சொன்னால் அசுரர்களைச் சேர்ந்ததாக ஆகும். மனிதர்கள் பேசுவது போல் மெதுவாக கீழ்க்குரலில் சொல்லக் கூடாது. இவ்விரண்டிற்கு நடுவில் உள்ள ஸ்வரத்துடன் (மத்யமஸ்வரம்) ஸாமிதேனீ மந்திரங்களை சொல்ல வேண்டும். அது தேவர்களைச் சேர்ந்ததாக ஆகும். மூன்பு அறிவாளிகளான ஹோதாக்கள் வலது காலை வேதியின் உள்பக்கத்திலும் இடது காலை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதிக்கு வெளியிலும் வைத்து மந்திரம் சொன்ஞர்கள். இப்பொழுதுள்ள ஹோதாவும் அது போல் செய்யவும்.

அப்பொழுது மார்க்கத்திலிருந்து நழுவாதவஞக இருப்பான். இப்படிச் செய்வதால் கடந்த காலம், எதிர்காலம், கிராமத்துப் பிராணிகள், காட்டில் வாழும் பிராணிகள், தேவலோகம், மனித உலகம் எல்லாவற்றையும் அடைகிருன். ஸாமிதேனீ மந்திரங்களிலும், காரியத்திலும் ஈடுபட்டுள்ள தேவர்கள் அதற்கு மேல் செய்ய வேண்டிய யாக பாகத்தை மறந்தனர். அப்பொழுது ப்ரஹ்மா மந்திரமில்லாமல் ஆகார கர்மாவைச் செய்தார். உடனே தேவர்களுக்கு மேலே செய்ய வேண்டிய யக்ஞ பாகம் புலப்பட்டது. ஆகையிஞல் ஸாமிதேனீ ரிக்குகள் சொன்ன பிறகு மந்திரமில்லாமல் ப்ரஜாபதியை தேவதையாகக் கொண்ட பூர்வாகார கர்மா செய்ய வேண்டும். இதஞல் ஸமித்துகளும் நெய்யால் நணேக்கப்படுகின்றன. ஸாமிதேனீ அபிமான தேவதைகள் திருப்தியடைந்து யஜமானஊ நல்ல ப்ரஜையாலும், பசுக்களாலும் திருப்தி செய்கின்றது. இந்த ஆகார கர்மாவை மனதிஞல் செய்ய வேண்டும். ஊடைய முடியாதது கூட மனதிஞல் அடையப்படும்.

ஆகாரம் செய்யும் முறை கூறப்படுகிறது. வடமேற்கிலிருந்து தென் கிழக்கு வரை தாரை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாக (சேருமிடம்) பரிதி சந்திலிருந்து அக்னி ஜ்வாலையில் நெய்யை விடவேண்டும். ஸ்ருவத்தினுல் செய்யவேண்டும். மனதினுல் ப்ரஜாபதி தேவதையை தியானித்துக் கொண்டு செய்ய வேண்டும். ஒரு சமயம் வாக்கும் மனஸ்ஸும் தங்களுக்கு சிறப்பு வேண்டுமென நினைத்து நான் தான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை எடுத்துச் செல்வேன் என இருவரும் வாதம் செய்து கொண்டு ப்ரஜாபதியிடம் சென்று தீர்ப்பு வேண்டினர். ப்ரஹ்மாவானவர் வாக் தேவதையைப் பார்த்து நீ மனதின் தூது செல்பவன் ஏனெனில் மனது நினைத்ததைத்தான் வாக்கு சொல்கிறது என்ருர். இதனுல் கோபமுற்று வாக்கு இனிமேல் உனக்கு மந்திரத்தை வாயால் சொல்லி ஹோமம் செய்ய மாட்டாய் என ப்ரஹ்மாவினிடம் கூறியது. ஆகையால்தான் மனதால் தியானித்துக் கொண்டு இந்த ஆகார கர்மாவை செய்யவேண்டும்.

மனது ஸ்ங்கல்பத்தினுல் காரியம் செய்ய வல்லது [இந்த ச்ரௌத கர்மாவின் அடிப்படையில் தான் விவாஹம் முதலிய ஸ்மார்த்த ப்ரயோகத்தில் இந்த ஆகார கர்மாவில் நெய் தாரையாக வட மேற்கு மூலை பரிதி சமித்துக்கள் சேருமிடத்திலிருந்து தென்கிழக்கு மூலை வரையும், இதே போல் மற்ருெரு ஆகாரம் தென் மேற்கு பரிதி சமித்துகள் சேருமிடத்திலிருந்து வடகிழக்கு மூலை வரை அக்னி ஜ்வாலையில் தொடர்ச்சியாக நெய் விடப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுகிறது.] ப்ரஹ்மாவும் ஸங்கல்பத்தினுல் உலகத்தையே ஸ்ருஷ்டி செய்பவர் என இருவருக்கும் ஒற்றுமை உள்ளது. பிறகு ஆக்னித்ரன் (ருத்விக்) செய்யவேண்டிய காரியம் கூறப்படுகிறது. மூன்று பரிதிகளையும் மூன்று மூன்று தடவை கத்தியில் கட்டப்பட்ட தர்பைகளின் நுனிகளால் துடைக்கவேண்டும். பிறகு அக்னியின் மீது மூன்று தடவை பாவனையாக துடைக்க வேண்டும். 12 தடவை துடைப்பது 12 மாதங்கள் கொண்ட ஒரு வருஷத்திற்கு ஒப்பானதால் வருஷதேவதை திருப்தியடைகிறது. யஜமானனுக்கு ஒரு வருட காலம் அனுஷ்டானத்திற்கு சம்பாதித்ததாக ஆகிறது எனப் புகழப்பட்டுள்ளது. மூன்று ப்ராணன்களை ஜெயித்தாகவும் ஸ்வர்கம், ப்ரஹ்மலோகம், யமலோகம் இவைகளை ஜெயித்ததாகவும் ஆகும் என ஸம்மார்ஜனத்தை (துடைத்தல்) புகழ்கிறது வேதம். பிறகு ஜுஹுவினுல் செய்யவேண்டிய ஆகார கர்மாவை விதித்து தென் மேற்கிலிருந்து வடகிழக்கு மூலை வரை வளைக்காமல் தாரை விட்டுப் போகாமல் நெய்யை விடவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனுல் ராக்ஷஸர்கள் விரட்டப்படுகிருர்கள் என புகழ்கிறது வேதம். நெய் தாரையை வளைந்து வளைந்து செய்தால் யஜமானனுக்கு மரணம் ஏற்படும். ஆகாரசேஷமான நெய்யை (த்ருவா) த்ருவபாத்திரத்தில் விடவேண்டும். அத்வர்யு யஜமானனுடைய ப்ரவர ரிஷிகளை கீழிருந்து மேல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வரை சொல்லி ஹோதாவை வரிக்கவேண்டும். அக்னி இரண்டு விதம். மனுஷ்யாக்னி யாகத்தில் தேவதைகளுக்கு ஹவிஸ் வஹிப்பவர். தேவ லோகத்து அக்னி நாகர் (எனப்படுபவர்) அசுரர் களுக்கு தூதுவராக இருந்தார். தூது வேலையில் எவருடையது உசிதமானது என ப்ரஹ்மாவைக் கேட்டனர். ப்ரஹ்மா, ப்ரஹ்மமான வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாவில் உபயோகப்படுவதால் மனுஷ்யாக்னிதான் ப்ராஹ்மணர். அவருடைய தூதுதான் உசிதம் எனக் கூறினர்.

இதனால் தேவர்கள் ஜெயித்தனர். அசுரர்கள் தோற்றனர். இதைப் புகழ்ந்து ஒரு சம்பவம் கூறப்படுகிறது. [ப்ராஹ்மணனும், அப்ராஹ் மணனும் தான் மேலானவர் என விவாதித்துக் கொண்டு, ஒரு பெரியவரிடம் சென்று தீர்ப்புக் கோரினர். அவர் ப்ராஹமணன் மேலானவன் என்று சொன்னர். இவ்வாறு சொல்வதால் தன்னையே மேலானதாக ஆக்கிக் கொண்டார். ப்ராஹ்மணனை மட்டமானவன் எனக் கூறினல் தன்னையே மட்டமாக்கிக் கொள்வான். ஆகையால் தான் ப்ராஹ்மணனை ஒரு பொழுதும் அவமதிக்கக் கூடாது. இந்த பொதுவிதி எல்லோருக்கும் பொருந்தும்.]

அனுவாகம்—12 (आयुष्ट आयुर्दा अग्ने)

இதில் காம்யேஷ்டிகளுக்கு வேண்டிய யாஜ்யா புரோனுவாக்யா ருக்குகள் கூறப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்டுள்ளன. வெகுகாலம் நோய்வாய்ப்பட்டவன் அதிலிருந்து விடுபட்டு நீண்ட ஆயுளைப் பெறுவதற்காக விதிக்கப்பட்டுள்ள ஆக்னேய யாகம், ஸௌம்ய யாகம், வாருண யாகம், ஸாரஸ்வத யாகம், ஆக்னாவைஷ்ணவ யாகம், குதிரையை தானம் கொடுத்தால் செய்ய வேண்டிய வாருண யாகம், ஸௌர்ய யாகம் எனக் கூறப்படும் ஏழு யாகங்களுக்கு யாஜ்யா புரோனுவாக்யா ப்ரதீகம் (ஆரம்பம்) கொடுக்கப்பட்டுள்ளது. அபோநப்த்ரீய யாகத்தின் யாஜ்யா புரோனுவாக்யா உள்ளது. ஐந்திரா வருண யாகம், மைத்ராவருண யாகம் போன்ற காம்யேஷ்டிகளுக்கு வேண்டிய யாஜ்யா மந்திரங்கள் புரோனுவாக்யா மந்திரங்களும் உள்ளன.

ப்ரச்னம் 6

ப்ரயாகம் என்ற 5 யாகங்கள் சொல்லப்பட்டுள்ளன.

அனுவாகம்—1 (समिधोयजति)

1. (समित्प्रयाज: **2.** तनूनपात्प्रयाज: **3.** इडप्रयाज: **4.** बर्हि: प्रयाज:, **5.** स्वाहाकार प्रयाज:) என ஐந்து யாகங்கள். இவைகள் ஐந்தும் 5 ருக்குகளாக துதிக்கப்படுகின்றன. உஷஸ் யக்ஞும் இவைகளையடையலாம் என்றும் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது நான்காவது ப்ரயாஜ யாகம் செய்வதற்கு முன (उपभृत्) உபப்ருத் என்ற பாத்திரத்திலிருந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜுஹூவில் நெய்யை விடவேண்டும். 5வது ப்ரயாஜ யாகத்தால் எல்லாவித வாக்கும் ஸித்திக்கும் என புகழப்படுகிறது. எல்லா லோகங்களையும் அடைவதாகவும் பசுக்களிடத்தில் ப்ரதிஷ்டையடைவதாகவும் உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. ஷி லோகங்களில் தேவர்களும் அசுரர்களும் போட்டியிட்டனர். தேவர்கள் ப்ரயாஜ யாகத்தினுல் அசுரர்களை விரட்டினர். இதையறிந்து அனுஷ்டானம் செய்யும் யஜமானனும் சத்ருக்களை அகற்றுவான்.

அக்னியை நோக்கி வேதியை தாண்டிச் சென்று ஹோமம் செய்ய வேண்டும். ஆஜ்யபாக யாகத்திற்கு முன்பு அசுரர்கள் யக்ஞத்தை அழிக்க நினைத்தனர். அதை தடுக்க (गायत्री) சந்தஸ்ஸின் 1 பாதத்தின் 8 எழுத்துக்களில் 5 எழுத்துக்களை முன்புறத்திலும், 3 எழுத்துக்களை பின்புறத்திலும் வைத்து ரக்ஷித்தனர். இதன் வடிவத்திலுள்ள ஐந்து ப்ரயாஜ யாகங்களும் மூன்று (अनूयाजा) அனூயாஜ யாகங்களும் யாகத்திற்கும், யஜமானனுக்கும் கவசம் போல் அமைந்தன. ப்ரயாஜத்திலிருந்து யாகத்தின் தொடர்ச்சிக்காக ப்ரயாஜ யாக சேஷமான ஆஜ்யத்தினுல் ப்ரதான யாகத்திற்குரிய புரோடாசாதிகளை அபிகாரம் செய்யவேண்டும். ப்ரயாஜ யாகம் தகப்பனுர் போன்றது. அனுயாஜ யாகம் புத்ரனைப் போன்றது. ஆகையால் ப்ரயாஜ சேஷத்தினுல் அனுயாஜ யாகத்திற்குரிய ஆஜ்யத்தையும் அபிகாரம் செய்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும். இவ்வாறு செய்வது உலக வழக்கை ஒட்டியது என வேதம் கூறுகிறது.

[உலகில் தகப்பனார் சம்பாதித்த சொத்து தகப்பனாருக்கும் புத்ரர்களுக்கும் பொது சொத்தாக உபயோகப்படுகிறது. ஆனால் புத்ரன் சம்பாதித்தால் தகப்பனாரிடம் கொடுப்பதில்லை. சகோதரர்களுக்கும் கொடுப்பதில்லை. தனியாக தானே வைத்துக் கொள்கிறான். அந்தப் பணம் எல்லோருக்கும் பொதுவாக இல்லாமல் சம்பாதிக்கும் புத்ரனின் தனிப்பட்ட சொத்தாக ஆகிறது.]

அது போல் பிதா போன்ற ப்ரயாஜ யாகத்தின் சேஷம் எல்லா ஹவிஸ்ஸுகளுக்கும் பொதுவானது. புத்ரன் போன்ற அனுயாஜ யாகத்தின் சேஷம் பிறருக்கு சொந்தமில்லாததால் முழுவதையுமே யாகம் செய்து விட வேண்டும். இவ்வாறு அபிகாரம் செய்வதால் ஸ்கன்ன (சிந்தியது) தோஷம் கிடையாது. யஜமானனுக்கு ஸத்ப்ரஜையையும், பசுக்களையும் அளிக்கிறது.

அநுவாகம்—2 (चक्षुषीवा एते)

இந்த அனுவாகத்தில் (आज्यभागौ) ஆஜ்யபாகம் என்ற இரு யாகங்கள் விதிக்கப்படுகின்றன. இரண்டு ஆஜ்யபாக யாகங்களும் யக்ஞபுருஷனுக்கு இரு கண்கள் போன்றவை. ஆகையால் ஆஜ்யபாக யாகங்களை செய்ய வேண்டும். ஆஜ்யம் ஹவிஸ் அக்னியும் ஸோமனும் இரு தேவதைகள். ஆஹவனீயாக்னியின் முன்பாகத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் வடக்கில் ஆக்னேய ஆஜ்யபாக யாகத்தை யும், தென்பாகத்தில் ஸௌம்ய ஆஜ்யபாகத்தை யும் செய்ய வேண்டும். [கண்கள் தலையின் முன் புறத்தில் தான் இருக்குமல்லவா] இரண்டு யாகம் செய்யுமிடத்திற்கு இடைவெளி சமமாக இருக்க வேண்டும். யஜமானன் அக்னியின் மூலம் தேவ லோகத்தையும், ஸோம தேவதையின் மூலம் பித்ரு லோகத்தையும், பார்க்கிறான். இந்த யாகங்கள் செய்த இடத்திற்கு நடுவில் ப்ரதான யாகங்களை செய்ய வேண்டும். [ஸ்மார்த்தத்திலும் ஆஜ்ய பாகம் என்ற கர்மா இந்த வேதத்தின் அடிப்படை யில் தான் செய்யப்படுகிறது. ஆகையால் இங்கே கூறப்பட்ட முறைபடி சரியாகசெய்யவேண்டும்.] இவ்விரு யாகங்களும் ராஜாக்கள் போல் ப்ரஜை களை அரசன் காப்பது போல் மற்ற தேவதைகளை காக்கின்றனர். ஆஜ்யபாகத்தில் புரோனுவாக்யா ரிக்காகவும் யாஜ்யா மந்திரம் யஜுஸ்ஸாகவும் இருப்பதால், பசு மாடு போன்றவைகளையும் ப்ரதானமான ஆக்னேய யாகத்தில் இரு மந்திரங் களும் ரிக்காக இருப்பதால் குதிரை போன்ற பிராணி வர்க்கத்தையும் யஜமானன் அடைவான் எனப் புகழப்படுகிறது. மேலும் பலவாறுகப் புகழப்படுகிறது. புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்களின் லக்ஷணம்—மந்திரத்தின் முன் பாதியில் யாக தேவதையின் பெயர் இருந்தால் புரோனுவாக்யா மந்திரம், பின் பாதியில் யாக தேவதையின் பெயர் இருந்தால் யாஜ்யா மந்திரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எனக் கூறப்பட்டுள்ளது. இம் மந்திரத்தின் புகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

ஆஜ்யம் வஜ்ரம் போன்றது. ஆஜ்ய பாக யாக மந்திரமும் வஜ்ரம் போன்றது. வஷட்காரமும் வஜ்ரம் போன்றது. ஆகையால் வஷட்காரம் கடைசியில் சொல்லித்தான் ஹவிஸ்ஸை அளிக்க வேண்டும். மூன்று வஜ்ரம் சேருவதால் சத்ரு அழிவு நிச்சயம் எனப் புகழப்படுகிறது. இந்த (वौषट्) வஷட்காரத்தை உரத்தகுரலில் சொல்ல வேண்டும். ஆக்னேய யாகத்தின் புரோனுவாக்யா காயத்ரீ சந்தஸ்ஸில் உள்ளது. யாஜ்யா த்ருஷ்டுப் சந்தஸ்ஸில் உள்ளது. முறையே பராஹ்மணன் முன்பு, க்ஷத்ரியன் அவனை அனுசரித்து பின்பு எனக்கூறுவது போல் ஆயிற்று,

புரோனுவாக்யா மந்திரத்தால் ஹவிர்தாதா வான யஜமானனைப் புகழ்ந்து யாஜ்யா மந்திரத் தால் யஜமானனை வழியோடு அழைத்துச் சென்று வஷட்காரத்தினுல் தேவர்களை அடையச் செய் கிருன். ஆ மூன்று மந்திரங்களாலும் யஜமானனை (முறையே) கையைப் பிடித்து அழைத்துச் சென்று தேவர்களிடம் ஒப்படைத்து அங்கேயே ப்ரதிஷ்டை செய்கிருன் எனப் புகழ்கிறது. புரோனுவாக்யா மந்திரம் 3 பாதங்கள் கொண்டு, யாஜ்யா மந்திரம் 4 பாதங்கள் கொண்டது, மொத்தம் 7 பாதங்கள் சக்வரீ சந்தஸ் எனப்படு கிறது. இதனுல் தேவர்கள், செய்யவேண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மென்று நினைத்த காரியத்தை செய்யக்கூடிய சக்தியுள்ளவர்களாக ஆனார்கள். இதையறிந்த யஜமானனும் நினைத்த காரியத்தை முடிக்கவல்ல வனாக ஆவான்.

அனுவாகம்—3 (''प्रजापतिर्देवेभ्योयज्ञान्व्यादिशत्'')

இதில் புரோடாசம் சம்பந்தப்பட்ட காரியங்கள் சொல்லப்படுகின்றன, 1. உபஸ்தரணம் 2. அபி க்காரம். இரண்டையும் விதிப்பதற்காக சிறு சம்ப வம் கூறப்படுகிறது. முன்பு ப்ரஜாபதி (ப்ரஹ்மா) யக்ஞசாதன த்ரவ்யங்களை தேவர்களுக்கு பிரித்துக் கொடுத்தார். அவர் ஆஜ்ய த்ரவ்யத்தை தனக்கு என வைத்துக் கொண்டார். அப்பொழுது தேவர் கள், யக்ஞசாதன த்ரவ்யங்களுள் ஆஜ்யம் ஸார மான பொருள். எங்களுக்கும் இதில் பங்கு இருக்கட்டும் எனக் கேட்டனர். அதற்கு ப்ரஹ்மா யஜமானன் உங்களை (தேவர்களை) உத்தேசித்து ஆஜ்யபாகம் என்ற இருபாகங்களைச் செய்ய ட்டும். ப்ரதான ஹவிஸ்ஸான புரோடாசத்திற்கு ஆஜ்யத்தினால் உபஸ்தரணம் கீழ்பாகத்திலும், மேல் பாகத்திற்கு அபிகாரமும் செய்யட்டும் என்றார். ப்ரஹ்மவாதிகள் மற்ற ஹவிஸ்ஸுகள் சிறிது காலத்திற்கு பிறகு பழையதாக ஆகி விடு கின்றன. ஆனால் ஆஜ்யம் மட்டும் அவ்வாறு ஆவதில்லை. அது ஏன் என விவாதித்தனர்.

ஆஜ்யம் மேலே கூறியபடி ப்ரஜாபதியைச் சேர்ந்தது, அதனால் பழமையாக ஆவதில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யென உதாஹரணம் மூலம் விளக்கப்பட்டுள்ளது. மற்ற தேவர்கள் கல்பகாலத்தில் அழிகிறுர்கள். அடுத்த கல்பத்தில் உண்டாகிறுர்கள். ப்ரஜா பதியோவெனில் தானே ஈச்வரர் ஆனதால் தான் அழியாமல் தேவர்களை ஸ்ரிஷ்டித்து அழித்துக் கொண்டிக்கிறுர். அதுபோல் ஆஜ்யமும் பழைய தாக ஆவதில்லை.

பிறகு ''चतुरवत्त'' என்ற கர்மாவின் உத்பத்திக்கு காரணம் சொல்லி ஹோம சாதனமாக நான்கு தடவை யெடுக்கப்பட்ட ஹவிஸ் வேண்டும் என கூறப்படுகிறது. छन्दांसि காயத்ரீ, த்ருஷ்டுப் போன்ற (அபிமானி தேவதைகள்) சந்தஸ்ஸுகள் நாங்கள் தேவதைகளுக்கு ஹவிஸ்ஸை எடுத்துச் செல்லமாட்டோம் என்று சொல்லி விலகிச் சென்றன. அப்பொழுது தேவர்கள், 1. புரோனு வாக்யாமந்திரம் 2. யாஜ்யாமந்திரம், 3. வஷட் கார மந்திரம், 4. ஹோமத்திற்கு ஆதாரமான அக்னி, இவைகளின் அபிமான தேவதைகளுக்காக 'चतुरवत्त' என்ற ஹோமத்ரவ்யத்தை பங்காக விதித் தனர். ஆகையால் 1) உபஸ்தரணம். (நெய் தடவுதல்) 2. 3. இரண்டு தடவை ஹவிஸ்ஸான புரோடசம், அல்லது சாதம் முதலியவற்றை எடுத்தல், 4வது அவைகளுக்கு நெய்யால் அபி காரம் (நெய் ஊற்றுவது) செய்வது என நான்கும் சேர்ந்த சதுரவத்தம் என்பதை அடைந்து மேற் சொன்ன அபிமானி தேவதைகள் திருப்தி யடைந்து தேவர்களுக்கு ஹவிஸ்ஸை எடுத்துச்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செல்கின்றன. [ஸ்மார்த்த ப்ரயோகத்திலும் அன்னம் முதலிய கடின த்ரவ்யங்களை ஹோமம் செய்யும் போது மேற்கண்ட முறை கடை பிடிக்கப்படுகிறது.]

புரோடாச யாகோத்பத்திக்கு உபாக்யானம் மூலம் விளக்கம் சொல்லப்படுகிறது. அங்கிரஸ் என்ற பெயருள்ள ரிஷிகள் மேல்நோக்கிச் சென்று ஸ்வர்கத்திற்கு சென்றனர். அங்கு அவர்கள் யாகம் செய்யுமிடத்திற்கு சென்றனர். அங்கு புரோடாசாபிமானி தேவதை ஆமை வடிவம் எடுத்துக் கொண்டு வேகமாக ஓடுவதைக் கண்ட னர். அங்கிரஸ் ரிஷிகள், அதைப்பார்த்து இந்தி ராதி தேவதைகளுக்கு உன்னை ஹவிஸ்ஸாக அளிக்கிறேன். ஓடாதே நில் என்றனர். அப் பொழுதும் அது ஓடிக்கொண்டேயிருந்தது. பிறகு ரிஷிகள், அக்னி பகவானுக்கு உன்னையளிப்போம். ஓடாமல் நில். உடனே அது ஓடாமல் நின்றது. ஆகையால் இரண்டு பர்வாக்களிலும் தவறாமல் 8 கபாலத்தில் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புரோடாசம் த்ரவ்யம், அக்னி தேவதை, என்ற யாகத்தை செய்ய வேண்டுமென்று விதிக்கப்படு கிறது. இதனால் ஸ்வர்க ஜயம் கிடைக்கும் என துதி செய்கிறது வேதம்.

கூர்மாக்ருதியாக (ஆமையின் வடிவு) செய்யபட்டப் புரோடாசத்தை கபாலங்களில் தணலைப் போட்டு அதன் மேல் புரோடாசத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வைத்து பக்குவம் செய்ய வேண்டும். எல்லா கபாலங்களின் மீதும் படும்படி தட்டையாகத் தட்ட வேண்டும். அதன் மீது பஸ்மாவைப் போட வேண்டும். ரிஷிகள் ஓடியதற்கு காரணம் கேட்டனர். அதற்கு புரோடாசம் நெய் தடவி அலங்காரம் செய்யப்படாததால் ஓடினேன் என்றது. இந்த புரோடாசத்தை பக்வம் செய்யும் பொழுது கருகினுல் நிர்ருதி என்ற ராக்ஷஸனேச் சேர்ந்து விடும். குறைவாகப் பக்குவமானுல் ருத்ரதேவனேச் சேரும். ஆகையால் அபக்வமில்லாமலும், கருகாமலும் நன்கு பக்குவம் செய்ய வேண்டும். [இந்த முறை ஸ்மார்த்தத்தில் ஸ்தாலீபாகம் போன்ற கர்மாக்களில் ஹோமம் செய்யக்கூடிய அன்னம் போன்ற ஹவிஸ்ஸை மேற்படி முறையில் தயாரிக்க வேண்டும். அப்படி செய்தால் தான் கர்மா பலன் உள்ளதாக ஆகும். அது தான் தேவதைகளுக்குரியது.]

நன்கு பக்வமானவுடன் அபிகாரம் செய்ய வேண்டும். பிறகு கபாலங்களே எண்ணி எடுத்து வைக்க வேண்டும் கபாலம் நஷ்டமானுல் யஜமானனுக்கு நஷ்டம் ஏற்படும். அவ்வாறு காணுமல் போனுல் தேவதையர்களான அச்வினி தேவர்களால் வைத்யம் செய்ய வேண்டும். அதற்கு பரிகாரமாக த்யாவாப்ருத்வீ தேவதையாகக் கொண்ட 1 கபால ஸம்ஸ்கிருத புரோடாசத்தால் யாகம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—4 (देवस्यत्वा सवितुः प्रसवे)

வேதி நிர்மாணம் சொல்லப்படுகிறது. கார்ஹபத்யாக்னிக்கும் ஆஹவனீயாக்னிக்கும் நடுவில் ஹவிஸ், ஜுஹு போன்ற இவைகளை வைப்பதற்கு இடத்தை மந்திர பூர்வமாக சுத்தி செய்து புல்களை களைந்து எடுத்து மேலாக உள்ள புழுதிகளை எடுத்து ஒரு சாண் அளவு பூமியைக் கொத்தி மண்களை எடுத்து அப்புறப் படுத்தவும். முதலில் மந்திர பூர்வமாக உத்தரவேதி பரிக்ரஹம் (தயாரித்தல்) செய்ய வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வேதியில் ஜலத்தை கத்திக்கு தெற்கே வைக்க வேண்டும். யக்ஞம் தொடர்ச்சியாக இருக்க இது உதவும். சத்ருவை நினைத்துக் கொள்ளவும். அதனுல் அவன் துன்பத்தையடைவான்.

அனுவாகம்—5 (ब्रह्मवादिनोवदन्ति अद्भिः)

இதில் மந்திர பூர்வமாக தயாரிக்கப்பட்ட இடம் வேதி எனப்படும். அதில் தர்ப முஷ்டிகளை மந்திரபூர்வமாக பரப்பும் முறை சொல்லப்படுகிறது. உத்பவனம் செய்த தீர்த்தத்தினுல் பாத்திரங்கள், ஹவிஸ் முதலியவைகளை ப்ரோக்ஷித்தால் அவை சுத்தமாய்விடும். தீர்த்தத்திற்கு எதனுல் சுத்தி ஏற்படும் என ப்ரஹ்மவாதிகள் வினவி ''प्रोक्षिताः स्थ'' என்ற மந்திரம் சொல்வதால் ஜலங்கள் சுத்தமாகின்றன என சொல்லப்பட்டிருக்-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிறது. பிறகு அந்த ஜலத்தால் இத்மம் (சமித்) பர்ஹிஸ் (தர்ப முஷ்டி) வேதி (ஸ்தலம்) மூன்றையும் ப்ரோக்ஷிக்க வேண்டும். முதல் முஷ்டி தர்பத்தை (प्रस्तर:) ப்ரஹ்மாவிடம் அவர் முகத்திற்கு நேராக உயர்த்தி கொடுக்கவும். பிறகு தர்ப்பங்களை வேதியில் பூமி தெரியாமலிருக்கும்படி பரப்பவும். அதன் மேல் குறுக்காக 2 தர்ப்பங்களை போட்டு அதன் மேல் ப்ரஸ்த்ர (முஷ்டி) தர்ப்பத்தை பரப்பவும். கீழ்தர்ப்பம் ப்ரஜை போன்றது, प्रस्तर: யஜமானனை போன்றது. [ஆகையால்தான் யாகம் செய்யாதவனைவிட யாகம் செய்தவன் உயர்ந்தவன் எனக் கூறுகிறது வேதம்.]

இதற்கு பிறகு உத்தராங்கமான பர்ஹிஸ்ஸை (ப்ரஸ்தரத்தை) அக்னியில் போடுதல் போன்ற கர்மா சொல்லப்படுகிறது. ப்ரஸ்தர முஷ்டியை, ஜுஹூவில் நுனியை நனைக்கவும். உபப்ருத்தில் (பாத்ர விசேஷம்) நடுபாகத்தை நனைக்கவும். த்ருவயில் (பாத்ரவிசேஷம்) அடிப்பாகத்தை நனைக்கவும் இவ்வாறு மூன்று தடவை செய்து ஒரு தர்ப்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு, அக்னியில் கொடுக்கவும். அக்னியைத் தாண்டி நுனி போகக்கூடாது. [தர்ப்பங்களை பரவலாகக் கொடுத்தால் ஸ்திரீ ப்ரஜைதான் பிறக்கும். ஆகையால் சேர்ந்தாற்போல் மேல் நோக்கியதாக அக்னியில் கொடுத்தால் புருஷ ப்ரஜை பிறக்கும் என வேதம் கூறுகிறது] ப்ரஸ்தரம் யஜமானனுக்கு சமம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆஹவனீயாக்னி ஸ்வர்க்கம் போன்றது. ப்ரஸ்தர ப்ரஹரணம் யஜமானன் ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவது போலாகும். பிறகு தனியாக வைத்த தர்ப்பத்தை அக்னியில் வைக்கவேண்டும். [ஸ்மார்த்த ப்ரயோகங்களிலும் லேபகாரியம் என்று ஒரு கர்மா அனுஷ்டானம் செய்யப்படுகிறது. இதற்கு ஆதாரம் மேற்கூறிய வேத வாக்யங்கள்.]

அனுவாகம்—6 (अग्नेस्त्रयो ज्यायांसः भ्रातरः आसन्)

இதில் உபாம்சுயாஜ யாகம் ஸ்விஷ்டக்ருத் யாகமும் விதிக்கப்படுகிறது. (परिधि) பரிதிகள் போடுவதற்கு ஓர் உபாக்யானம் சொல்லப்படுகிறது. அக்னிக்கு மூன்று மூத்த சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை சுமந்து இறந்தனர். அதனால் அக்னி பகவான் ஹவிஸ் வஹிப்பதால் ஷி கஷ்டம் ஏற்படலாம் என எண்ணினர்.

ஆகையால் அக்னி பகவான் ஜலத்தில் ஒளிந்து கொண்டார். தேவர்கள் அவரைத் தேடினர். ஜலத்தில் இருக்கும் மீன் அக்னி பகவானை தேவர்களுக்கு காட்டிக் கொடுத்தது. அதனால் கோபமுற்ற அக்னி மீனை செம்படவர்கள் தோன்றும் போதெல்லாம் குத்திக் கொல்லட்டும் என சபித்தார். ஆகையால் மீன் இன்று அவ்வாறு கொல்லப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்கள் அக்னியை அணுகி மறுபடியும் வழக்கம் போல் தங்களுக்கு ஹவிர் பாகத்தை கொண்டு வரவேண்டுமென்றனர். அக்னி அவர் களிடம் வரம் கேட்டான். ஜுஹுவில் ஹவிஸ் எடுத்து வைக்கப்பட்டு ஹோமம் செய்வதற்கு முன் பரிதிக்கு வெளியில் விழுந்தால் அது எனது சகோதரர்களுக்கு பங்கு பாகமாக இருக்கட்டும் என்று அவ்வாறு வரம் அளிக்கப்பட்டது.

இப்பொழுது ஹோம காலத்தில் ஹவிஸ் பரிதிக்கு வெளியில் விழுந்தால் அக்னியின் மூத்த சகோதரர்களையடையும். அக்னிக்கு தெற்கு, மேற்கு, வடக்கு மூன்று பக்கங்களிலும் (பரிதி) 2 சாண் நீளமான சமித் ஒன்றுக்கொன்று தொட்டுக் கொண்டிருக்கும் படி வைக்கவேண்டும். இது ராக்ஷஸர்களை விரட்ட உதவும். கிழக்கே சூரியனே ராக்ஷஸர்களை விரட்டி விடுவதால் பரிதி தேவையில்லை. ராக்ஷஸர்களை விரட்ட தென் கிழக்கு, வடகிழக்கு மூலையில் மேல் நோக்கி இரண்டு ஸமித்துக்களை வைக்கவும். ஹவிஸ் சிந்தினால் யஜமானனுக்கு நாசம் ஏற்படும். [ஸ்மார்த்தத்திலும் பரிதிகள் போடுவதும், ஆகார சமித்தை வைப்பதும் இதனுடைய அடிப்படை யில் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஹோமத் திற்கு கையில் எடுத்துக் கொண்ட ஹவிஸ்ஸை கீழே சிந்தாமல் கவனமாக ஹோமம் செய்ய வேண்டும்.] ஆகையால் அதைத் தவிர்க்க 'भूपतये

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்வாஹா' முதலிய மூன்று மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.

உபாம்சுயாஜ யாகவிதி கூறப்படுகிறது—பூர்ணமாஸேஷ்டியில் இரண்டு புரோடாச யாகங்கள் செய்ய வேண்டும். சேர்ந்தாற்போல் ஒரே விதமான ஹவிஸ்ஸாக இருப்பதால் யக்ஞ புருஷனுக்கு சோம்பல் ஏற்படக் கூடும். ஆகையால் அந்த இரண்டு புரோடாசத்திற்கு நடுவில் உபாம்சு யாஜ யாகம் செய்யவேண்டும் என விதிக்கப்படுகிறது. இதனால் சோம்பல் நீங்கும். இதற்கு ஆஜ்யம் (த்ரவ்யம்) ஹவிஸ்.

பிறகு ஸ்விஷ்டக்ருத் யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு அக்னி பகவான் ஸ்வர்கத்தில் இருந்தார். பூலோகத்தில் மனிதர்கள் (சமையல்) பாகத்திற்கு அக்னியில்லாமல் தவித்தனர். யமன் பூலோகத்தில் இருந்தார். மேல் உலகில் பித்ருக்கள் ராஜா இல்லாமல் இருந்தனர். ஆகையால் தேவர்கள் அக்னிக்கு அன்னாதம் நிறைய பக்ஷணம் செய்யக் கூடிய சக்தியை கொடுத்து பூலோகத்திற்கும், யமனுக்கு ராஜ்யத்தையளித்து மேல் உலகிற்கும் அனுப்பினார்கள். ஆகையால் அக்னி பகவானுக்கு ஸ்வீஷ்டக்ருத் என்ற ஹவிர் பாகம் கொடுக்க வேண்டும். அக்னி ஸ்விஷ்டக்ருத் ஹவிர்பாகத்தால் அக்னி சாந்தமாகும். ஒவ்வொரு ஹவிஸ் சேஷத்தின் வடக்கு பாகத்திலிருந்து ஒவ்வொரு தடவை ஹவிஸ் எடுக்க வேண்டும். முதலில் உபஸ்தரணம் ஹவிஸ்ஸின் மீது இரண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தடவை அபிகாரம் செய்து ஹோமம் ஈசான மூலை யில் செய்ய வேண்டும். ப்ரதான ஆஹுதி களுடன் சேர்ந்தால் யஜமானனுடைய பசுக்கள் நாசமாகும். ஆகையால் மற்ற ஆஹுதிகளுடன் சேராமல் ஹோமம் செய்ய வேண்டும்.

[இந்த அடிப்படையில் தான் ஸ்மார்த்தத் திலும் ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யப்படு கிறது. இதில் கூறப்பட்ட முறையை தவறாமல் பின்பற்ற வேண்டும். अग्नये स्विष्टकृत इदं न मम என்று, எப்படி நஷ்டமான பொருளை திரும்ப கிடைத்தால் சந்தோஷத்தில் பொருள் கிடைத்தது என்று உரக்கச் சொல்வானோ அது போல் உரக்க சொல்ல வேண்டும்.]

அனுவாகம்—7 (मनुः पृथिव्या यज्ञियमैच्छत्)

ஹோம சேஷமான ஹவிஸ்ஸை இடா इडा எனக்கூறுவர். சேஷபக்ஷணம் செய்யும்படி விதிக் கப்பட்டுள்ளது. அந்த இடை எவ்வாறு உண் டாயிற்று என உபாக்யான மூலமாக விளக்கப்படு கிறது. முன்பு மனு பூமியில் யக்ஞ சம்பந்தமான த்ரவ்யம் என்ன இருக்கிறது என்று தேடினார். மாட்டின் காலடியுள்ள இடத்தில் நெய் சிந்தியிருப் பதை கண்டார். பிறகு மனு தேவர்களிடம் யார் இதை யக்ஞத்திலும் உபயோகப்படுத்த சாமர்த் தியமுள்ளவர் எனக் கேட்டார். அச்வினி தேவதை கள் நாங்கள் பசுவையே கொண்டு வர முடியு மென்று சொல்லி இடா என்ற பசுவையே பூமிக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வரவழைத்தனர். அந்த பசு எங்கெல்லாம் காலடி வைத்ததோ அங்கெல்லாம் நெய் ஒழுகியது. அதனுல் இதற்கு "க்ருதபதீ" (घृतपदी) எனப் பெயர் வந்தது.

இவ்வாறு இடா என்ற பொருள் யக்ஞ பூமியில் உண்டாயிற்று. இடோபாஹ்வான மந்திரம் ப்ராஹ்மணத்தில் உள்ளது. இங்கு இடோபாஹ்வானம் செய்ய விதியுள்ளது. மேலும் மந்திர வ்யாக்யானம் உள்ளது. "येय ज्ञपतिंवर्धानित्याह" என்ற மந்திரத்தால் யக்ஞத்திற்கும் யஜமானனுக்கும் ஆசீர்வாதங்கள் ருத்விக்குகளால் வேண்டப் படுகின்றன. இடோபாஹ்வான மந்திரத்திற்கு வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது. கோசரீர முள்ள தேவதை இடை எனப்படுகிறது. அது அழைக்கப்படுகிறது.

அனுவாகம்—8 (पशवोवा इडास्वयमादत्त)

இதில் இடாபக்ஷணமும் ப்ராசித்ர (பாத்திரத் தின் பெயர்) பக்ஷணமும் விளக்கப்படுகிறது. பசுரூபமான இடையிலிருந்து சிறிது பாகத்தை ஹோதா எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பசுக்களின் விருப்பத்தை ஹோதா நிறை வேற்றுகிருன். பிறகு மந்திர பூர்வமாக ஹோதா இடை என்கிற புரோடாசத்தை சாப்பிடவேண்டும். தேவதையான இடையை சாப்பிட்டால் ஹோதா இறப்பான். ஆகையால் தான் சாப்பிடாமல் அக்னியில் போட்டால் பசு ரூபமான இடையை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் யஜமானனின் பசுக்கள் அழியும். ஆகையால் 'वाचस्पतये त्वाहुतंप्राश्नामि' எனச் சொல்லி சாப்பிடவும். ஹோதாவும் இறக்க மாட்டான், பசுக்களும் அழியாது. ப்ரதான யாகம் முடிந்தவுடன் இடா பக்ஷணம் செய்வதால் யஜ மானன் களைத்திருக்கும் சமயத்தில் சாப்பிடுவ தால் களைப்பு நீங்குகிறது. ருத்விக்குகளுக்கு தக்ஷிணை கொடுத்த மாதிரியும் ஆகிறது. சாப் பிட்ட பிறகு கையில் ஜலத்தை விட்டு மந்திரத் துடன் ப்ரஸ்தரத்தின் மீது விட வேண்டும். இல்லாவிடில் யக்ஞம் நடுவில் தொடர்பில்லாத தாக ஆகிவிடும். இவ்வாறு தீர்த்தம் விடுவதால் யக்ஞம் தொடர்ச்சியாக நடைபெறுவதாக ஆகும்.

प्राशित्राभक्षणं—இது விதிக்கப்படுகிறது. இதை விளக்க உபாக்யானம் சொல்லப்படுகிறது. முன்பு தேவர்கள் ப்ரதான யக்ஞத்தை செய்து விட்டு ஸ்விஷ்டக்ருத் அக்னி ரூபமான ருத்ரரை இடை யில் (நடுவில்) வைத்தனர். அதனால் கோப மடைந்த ருதரன் யக்ஞத்தை குறைவுள்ளதாகச் செய்தான் தேவர்கள் ருத்ரனிடம் யக்ஞத்தை ஸம்பூர்ணமாக ஆக்க வேண்டுமென பிரார்த்தித் தனர். புத்திசாலியான ஒருவர் இவருக்கு ஹவிர் பாகம் கொடுத்து ஆராதித்தால் கர்மா நன்கு பூர்ணத்வத்தையடையும் என்றார். அதன்படி அக்னி ஆராதிக்கப்பட்டதால் அக்னிஸ்விஷ்டக்ருத் எனப்பட்டார். புரோடாசத்தில் குறைபாடுள்ள யவை அளவுள்ளதை அதிலிருந்து எடுத்து

9

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விட்டனர். ஆகையால் ப்ராசித்ர பாகம் (யவை யளவு) சிறிதளவு தான் இருக்க வேண்டும். அதிக மாக எடுத்தால் யக்ஞ ப்ரயோகத்தில் ப்ரமம் (மாறுதலாக புரிந்து கொள்வது) ஏற்படும்.

இந்த ப்ராசித்ரமென்கிற புரோடாசத்தின் சிறு துண்டையெடுத்து ஒரு முறை அபிகாரம் செய்து ஆஹவனீக்கு முன்புறமாக எடுத்துச் சென்று அத்வர்யு ப்ரஹ்மாவிடம் கொடுக்கவேண்டும். ப்ரஹ்மா 'सूर्यस्यत्वा' என்ற மந்திரத்தால் அதைப் பார்த்துவிட்டு 'देवस्यत्वा' என்ற மந்திரத்தால் (ப்ரதிக்ரஹம்) வாங்கிக் கொண்டு பல்லால் கடிக்காமல் अग्नेस्त्वास्येन प्राश्नामि என்ற மந்திரத்தால் வாயில் போட்டுக் கொண்டு ஜலத்தால் அலம்பி விட்டு நாபியைத் தொட்டு इन्द्रस्यत्वा जठरे सादयामि என்று சொல்லவும். முன்பு பூஷதேவதையிடம் ப்ராசித்ர பாகத்தை தேவர்கள் அளித்தனர். பூஷதேவதை மந்திரமில்லாமல் ஸ்வீகரித்து நன்கு பல்லால் கடித்து சாப்பிட்டார். அதனுல் அவர் பற்கள் உடைந்தன. ஆகையால்தான் பூஷ தேவதையாகக் கொண்ட சரு மாவினுல் செய்யப் படவேண்டும். ஆகையால் தேவர்கள் பூஷ தேவதை ப்ராசித்ர பக்ஷணத்திற்கு தகுதியற்றவர் என தீர்மானித்து ப்ரஹஸ்பதியிடம் அதைக் கொடுத்தனர். ஆனுல் ப்ரஹ்மா பூஷதேவதைக்கு ஏற்பட்டது போல் தனக்கு ஏற்படலாம் என அஞ்சி ரோகமில்லாத சூரியனுடைய கண்களால் பார்க்கிறேன் என்று சொல்லி, பார்த்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேலே கூறியபடி மந்திர பூர்வமாக வாங்கி சாப்பிட்டார் என வேதம் கூறுகிறது. மேலே கூறப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில்தான் தக்ஷயக்ஞத்தில் பூஷதேவதைக்கு பல் வீழ்த்தப் பட்டன எனக் கூறப்படுகிறது.

அனுவாகம்—9 (अग्नीध आदधाति)

இதில் (अनूयाजा) அனூயாஜ யாகங்களும் सूक्तवाक' என்ற அனுவாகத்தால் 'प्रस्तरप्रहरणं' ப்ரஸ் தரத்தை அக்னியில் வைக்கும் முறையும் கூறப் படுகிறது. ஆக்னீத்ரன் தனது புரோடாச பாகத் தைப் பெற்ற பிறகு அனுயாஜ ஸமித்தை அக்னி யில் வைக்க வேணடும். அந்த ஸமித்தின் மேல் அனுயாஜ யாகங்களைச் செய்ய வேண்டும். பிறகு ஆக்னீத்ர அக்னியை ஒரு தடவை தர்ப நுனியால் தொடைக்க வேண்டும். இடா பக்ஷணத்திற்காக நடுவில் நின்ற யக்ஞ ப்ரயோகம் ஆரம்பமாகிறது. ப்ரஹ்மாவின் அருகில் யக்ஞம் ப்ரதிஷ்டிதமாக இருக்கிறது. அப்பொழுது அத்வர்யு ब्रह्मन प्रस्थास्यामः' ப்ரஹ்மாவே, யக்ஞப்ரயோகத்தை ஆரம்பிப்போம் எனக்கூற ப்ரஹ்மா அனுமதி தர வேண்டும். [கையால் சைகை மூலம் அனுமதித் தால் உடலில் வாத ரோகத்தால் நடுக்கம் இருந்து கொண்டே இருக்கும். தலையால் (அசைத்து) அனுமதியளித்தால் தலைவலி போன்ற ரோகம் ஏற்படும். பேசாமல் இருந்தால் (அனுமதியில்லை யென்று பொருள்படும்). ஆதலால் யக்ஞம் ஆரம்பித்ததாக ஆகாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகையால் ப்ரஹ்மா 'देव सवितः अं प्रतिष्ठ' என்று வாயால் சொல்லி அனுமதி கொடுக்க வேண்டும் அப்பொழுது தான் யக்ஞம் ஆரம்பித்த தாக ஆகும். அனுயாஜ யாக தேவதை யார் என்பதை ஸம்வாதத்தின் மூலம் கூறப்படுகிறது. இதற்கு ப்ரஹ்மா அனுமதி கொடுக்கும் மந்திரத்தில் உள்ள यज्ञं पाहि यज्ञपतिंपाहि' 'इदं'' என்ற பாகத்தினுல் யக்ஞம், யஜமானன், தான் மூன்று பேருக்கு ஆசீர்வாதத்தை பிரார்த்திக்கிறுர். ப்ரஹ்மவாதிகள் கூறினுர்கள். ப்ரதான தேவதைகளுக்கு ஹவிர் பாகம் கொடுக்கப்பட்டு விட்டது. இந்த யாகத்திற்கு யார் தேவதை என வினவி காயத்ரீ முதலிய மூன்று சந்தஸ்கள் தேவதைகள் எனக் கூறினர். [வேதத்தை அத்யயனம் செய்வதால் ப்ராஹ்மணர்கள் சந்தஸ் ரூபமானவர்கள்] அத்வர்யு ப்ராஹ்மணர்களுக்கு ஹவிஸ் அளிக்கிறுன். அதாவது ப்ராஹ்மண ஜாதியினிடத்தில் அபிமானம் கொண்ட அக்னி பகவான் தேவதை என தாத்பர்யம்.

பிறகு அனுயாஜ யாகங்கள் விதிக்கப்படுகின்றன. முன்பு தேவர்கள் அக்னி, ப்ரஜாபதி, இந்திரன் முதலிய ப்ரதான தேவதைகளுக்கு யாகம் செய்த பிறகு ஹோமத்திற்கு ஆதாரமான ஜ்வாலை யில்லாமல் இருப்பதை கண்டனர். பிறகு அனுயாஜ யாகங்களில் தேவர்கள் நுழைந்து ஆஹுதிகள் மூலம் மறைந்திருந்த அக்னியைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கண்டு பிடித்தனர். ஆகையால் அனுயாஜம் யாகம் செய்ய வேண்டும் இதனால் ஜ்வலிக்கின்ற அக்னி அடையப்படுகிறார். மூன்று அனுயாஜ யாகங்கள் தேவதை அக்னி, ஆஜ்யம் த்ரவ்யம்-பிறகு ஸூக்த வாக அனுவாகம் ஹோதா சொல்ல வேண்டும். इदं द्यावापृथिवी என ஆரம்பித்து तयोरायिदि வரை ஸூக்த வாக அனுவாகத்தின் முன்பாகம், பின்பாகம் 'अग्नि-रिदं हविरजुषत' எனத் தொடங்கி அனுவாகம் முடிய சொல்ல வேண்டும். வேறு சாகையில் 'एतद्वै' என்ற மந்திர யாகம் ஸூக்தவாகானுவாகம் எனப் படுகிறது. அதை நிஷேதித்து வேதம் கூறு கிறது.

ஏதது एतद्' என்ற பெயருள்ள அசுரன் ஒருவன் இருந்தான். அவன் ஒருவருடைய யாகத்தின் நடுவில் ஸூக்தவாக மந்திரம் சொல்லும் சமயத் தில் 'आयुराशास्ते' என்ற ஆசீர்வாதங்களை யஜமான னுக்கு இல்லாமல் செய்து விட்டு தனதாக்கிக் கொண்டான். ஆகையால் சாகாந்திர மந்திரம் சொல்லக் கூடாது. ஸூக்தவாகம் 'नमोवाक्' இரண்டு சொல்லும் 'क्रियाविशेषणं' க்ரியைக்கு விசேஷணமாக இருக்கும்படி சொல்ல வேண்டும்.

'सूपवसाना स्वध्यवसाना' என்ற சாகாந்திர மந்திரம் சொன்னால் யஜமானன் இறக்கநேரிடும். 'सूपचरणा च स्वधिचरणा च என்ற மந்திரம்தான் சொல்லவேண் டும். இதனால் மாடு மேய்ச்சல் நிலம், நிறைய கிடைக்கும். ஸூக்தவாகானுவாகத்தின் நடுபாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'अग्निरिदं हविरजुषत' தொடங்கி............'महोज्यायोऽकृत' என்பது வரை இந்த இடத்தில் ஆஜ்ய பாகத்தின் தேவதை முதல், ஸ்விஷ்டக்ருத் வரையில் அந்தந்த யாகத்தில் உபயோகப்பட்ட தேவதைகளின் பெயர்களை மாத்திரம் சொல்லவேண்டும் ஆவாஹனம் செய்த தேவதைகளை நினைத்துக் கொண்டு உங்களை ஆராதித்தோம் எனக் கூறுகிறது வேதம். இந்த சமயத்தில் ப்ரஸ்தரம் (தர்ப முஷ்டி) அக்னியில் கொளுத்தப்படுகிறது. த்ரவ்ய தேவதா சம்பந்தமிருப்பதால் யாகமாகக் கருதி உத்தேசத் யாகம் சொல்லப்படுகிறது. இதனால் யஜமானனுடைய விருத்தி சொல்லப்படுகிறது.

இந்த அனுவாகத்தில் கடைசி (மூன்றாவது) பாகத்தில் யஜமானனுடைய ஆசீர்வாதம் பிரார்த்திக்கப்படுகிறது. 'आशास्तेऽयंयजमानोऽसौ' என ஆரம்பம்—असौ என்பதற்கு பதில் யஜமானனின் பெயர் சொல்லவேண்டும். நீண்ட ஆயுள், நல்ல (ஸந்ததி) புத்ரர்கள், சமானமானவர்களால்தான் ஸேவிக்கப்படவேண்டும். மேற்கொண்டு இஷ்டியனுஷ்டானம் பெரிய ஸோமயாகானுஷ்டானம் ஸ்வர்க்கம், ப்ரியமானவை எல்லாம் யஜமானனுக்கு கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கப்படுகிறது. யாகத்தினால் ஏற்படும் புண்யமும் அறுசுவை உண்டி போன்ற இருவகைப் பயனும் அக்னியின் அனுக்ரஹத்தால் கிடைக்கவேண்டும். இதையடைய தடையாக உள்ள பாபசேஷத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்யாவாப்ருத்வீ ''தேவதைகள்'' நீக்கட்டும். இந்த யக்ஞத்தில் ஹவிர்பாகம் அளித்தவர் அளிக்கப் படாத தேவதைகளுக்கும் எங்கள் நமஸ்காரங்கள் இருக்கட்டும் என்று சொல்வதால் எல்லா தேவதை களும் திருப்தியடைகிறார்கள். இதனால் யஜமான னுக்கு கஷ்டம் ஏற்படாது எனக் கூறுகிறது வேதம்.

அனுவாகம்—10 (देवा वै यज्ञस्य)

இதில் 'शंयुवाक' மந்திரங்களின் வ்யாக்யான மும் 'पत्नीसंयाजा: ''பத்னீ ஸம்யாஜம்'' என்ற யாக மும் விதிக்கப்படுகின்றன—तच्छंयोरावृणीमहे' என்ற அனுவாகம் சம்யுவாக மந்திரம் எனப்படுகிறது. அதை வ்யாக்யானம் செய்யும் முன் அதை வலியுறுத்த ஓர் சம்பவம் வருணிக்கப்படுகிறது.

ஒரு சமயம் தேவர்கள் ஸ்வகாகர்தாவை காண வில்லை. அந்தந்த தேவதையின் ஹவிஸ்ஸை பிறருடைய ஹவிஸ்ஸுடன் சேராமல் சுத்தமாக அந்தந்த தேவதையை அடையும்படி செய்பவன் ஸ்வகாகர்தா எனப்படுகிறான். கடைசியில் அவர் கள் ப்ரஹஸ்பதி புத்ரனை சம்யு 'शंयु:' என்பவனைப் பார்த்து எங்கள் யாகங்கள் (கலப்படம்) சாங்கர்ய மில்லாமல் (கலப்படமில்லாமல்) இருக்கும்படி செய். அதாவது அந்தந்த ஹவிஸ் வேறொன் றுடன் கலக்காமல் அந்தந்த தேவதைகளுக்கு சேர்ப்பிப்பாயாக என்று கூறினர். அப்பொழுது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவ்வாறு செய்வதற்கு (கூலியாக) பதிலாக தனக்கு வரம் அளிக்க வேண்டுமெனக் கேட்டான். தேவர்களும் கேட்ட வரத்தையளித்தனர். அதன் படி இந்த கார்யத்திற்காக இந்த யாகம் என்று ப்ராஹ்மணத்தில் சொல்லப்படாத யாகத்தை யாராவது செய்தால் அதனுடைய பலன் சம்யு வுக்கு போகும். அதேபோல் எந்த யஜமானன் சிரத்தையில்லாமல் யாகம் செய்கிறானோ அந்த யாக பலனும் சம்யுவை அடையும்.

பிறகு சம்யு எனக்கு இந்த பலன் போது மானது. ஆனால் என் ஸந்ததிகளுக்கு என்ன லாபம் எனக் கேட்டான். அதற்கு தேவர்கள் அபகோரண் ஹிம்ஸிக்க நினைத்தல், அடித்தல், இரத்தம் சிந்துதல் என்று மூன்றையும் செய்பவனுக்கு தண்டனையளிக்கும் உரிமை உனது புத்ரர்களுக்கு உண்டு என்றனர். எவன் ப்ருஹஸ்பதியின் பௌத்ரர்களை அடிக்க முயற்சிக்கிறானோ அவ னுக்கு 100 பவுன் அபராதம் விதிக்கப்படும். அடித்தால் 1000 நிஷ்கம் பவுன் அபராதம் விதிக் கப்படும். எவன் அவர்களுக்கு துன்பத்தை கொடுத்து இரத்தம் சிந்தும்படி அடிக்கிறானோ அவன், இரத்தம் சிந்திய புழுதியின் பரமாணுக் களின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி அவ்வளவு வருஷங்கள் யமலோகத்தில் நரக வேதனையை அனுபவிக்க வேண்டும். அதுவரை அவன் பித்ரு லோகம் செல்லமட்டான் என்பதாகும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகையால் ப்ருஹஸ்பதி ப்ராஹ்மண ஜாதி யைச் சேர்ந்ததால், எந்த ப்ராஹ்மணனுக்கும், அடிக்க முயற்சித்தல், அடித்தல், ரத்தம் சிந்த அடித்தல், என்ற மூன்று விதமான குற்றமிழைக் கலாகாது. குற்றம் புரிந்தால் மேற்சொன்ன பாபம் ஏற்படும்.

பிறகு மந்திரத்தின் வ்யாக்யானம் கூறப்படு கிறது. சம்யுவிடமிருந்து கீழ்க்கண்ட பலன் வரிக்கப்படுகிறது. யக்ஞம், யஜமானன் இருவரும் தேவர்களையடையட்டும். தெய்வ நிமித்தமான விக்னமும் மனிதர்களிடமிருந்து விக்னமுமில்லா மல். மேற்கொண்டு செய்ய வேண்டியதில் விக்னமில்லாமல் யக்ஞம் பூர்த்தியடையட்டும்.

எங்களைச் சேர்ந்த மனுஷ்யர்கள் பசுக்கள் எல்லோருக்கும் சுகமேற்படட்டும். இந்த மந்தி ரத்தை படிப்பதாலேயே தேவர்கள் அவரவர் பாகங்களை ஸாங்கர்யமில்லாமல் (கலப்படமில்லா மல்) அடைகிறார்கள். பிறகு நான்கு 'पत्नीसंयाजा:' பத்னீஸம்யாஜ யாகங்கள் விதிக்கப்படுகின்றன.

1. सोम:=ஸோமன், தேவதை, 2. त्वष्टा= த்வஷ்டா, 3. देवानां पत्नी:=தேவாநாம்பத்நி, 4. अग्नि: गृहपति=அக்னி க்ருஹபதி என நான்கு தேவதைகள். ஹவிஸ், ஆஜ்யம், மொத்தம் பத்னீ ஸம்யாஜ யாகங்கள் நான்கு முன்பு ப்ரயாஜ யாகங் கள் பூர்வாங்கமாக ஆஜ்ய ஹவிஸ்ஸினால் யஜனீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரத்தை யாஜ்யா மந்திரமாகக் கொண்டு செய்யப்பட்டது. அதே போல் இங்கும் செய்தால் சோம்பல் என்ற தோஷம் ஏற்படும். அதை விலக்க இந்த யாகங்களில் யாஜ்யா மந்திரங்கள் ரிக்கு களாக இருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது.

பிறகு (समिष्टयजुर्होम:) ஸமிஷ்டயஜுர் ஹோமம் விதிக்கப்படுகிறது. பூர்வாங்கமாக ஐந்து ப்ரயாஜ யாகங்கள் விதிக்கப்பட்டன. உத்தராங்கமாக நான்கு பத்னீ ஸம்யாஜ யாகங்கள் விதிக்கப் பட்டன. ஐந்தாவதாக समिष्टयजुर्होम: ஸமிஷ்ட யஜுர் ஹோமம் விதிக்கப்படுகிறது. இவ்வாறு முன்பு ஐந்து பின்பு ஐந்து (5+5) என பாங்தம் ஆயிற்று. இதற்கு 'देवागातुविद:' என்பது மந்திரம், ஆஜ்யம் ஹவிஸ், இது தர்சபூர்ண மாஸேஷ்டி யின் கடைசி ஹோமம். இத்துடன் தர்சபூர்ண மாஸேஷ்டி முடிவடைந்தது.

அனுவாகம்—11 (युक्ष्वाहि देवहूतमान्)

இதில் ஸம்வர்கேஷ்டி (संवर्गेष्टि:) யின் (हौत्रमन्त्रा:) ஹோதா சொல்ல வேண்டிய மந்திரங்கள் கூறப் படுகின்றன. முதல் பத்து மந்திரங்கள் 10 ஸாமி தேனீ ருக்குகள். பிறகு ஸம்வர்கேஷ்டியின் புரோனுவாக்யா மந்திரங்களும், யாஜ்யா மந்திரங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களும் கூறப்பட்டுள்ளன. பிறகு ஸ்விஷ்டக்ருத் யாகத்திற்குரிய புரோனுவாக்யா மந்திரங்களும் யாஜ்யா மந்திரங்களும் உள்ளன. அதற்கு பிறகு மூன்று உபஹோம மந்திரங்கள் உள்ளன. கடைசியில், (गार्मुतेष्टिः) ப்ராஜாபத்ய கார்முதேஷ்டி; ஸோமாபௌஷ்ண கார்முதேஷ்டிகளுக்கு வேண்டிய புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்களின் 'प्रतीक' ஆரம்பங்கள் கூறப்பட்டுள்ளன.

அனுவாகம்—12 (उशन्तस्त्वा हवामहे)

இதில் 'महापितृयज्ञ' சம்பந்தப்பட்ட ரிக்குகள் உள்ளன. முதலில் ஒரு सामिधेनी மந்திரமும் பித்ரு யக்ஞத்தில் ப்ரதான தேவதைக்குரிய யாகத்திற்கு வேண்டிய புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. उदीरतामवरे उत्परासः என்று தொடங்கி மூன்று உபஹோம மந்திரங்கள் இருக்கின்றன. மேலும் கவ்யவாஹனன், யமோ அங்கிரஸ்வான் முதலிய தேவதா யாகத்திற்குரிய புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு பித்ரு யக்ஞம் சம்பந்தப்பட்ட மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு: இறந்தவன் உயிருள்ளவனாக எழுந்து விடுவான். போன உயிர் திரும்பிவரும் என்றெல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லாம் இக்காண்டத்தில் காணப்படுவது : . சிறிது காலம் உயிர் பிரிந்தது போல் தோன்றி படுத்தவன் கூட இந்த யாகத்தின் புண்ய வசத்தால் பிழைத்து விடுவான் என்பது வேதத்தின் கருத்து. ம்ருத்யு கண்டங்கள் ஏற்படும்போது அகால மரணம் வராமல் செய்வதற்கு இந்த இஷ்டி உபயோகப்படும்.

இரண்டாம் காண்டம் முற்றிற்று.

(बिना दोष लुप्ते—E & O. E)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi